

# இலங்கையைச் சேர்ந்த LBT நபர்களால் கூறப்பட்ட வன்முறை மற்றும் பாரபட்சம் சார்ந்த அனுபவங்கள்

# [ இலங்கையைச் சேர்ந்த LBT நபர்களால் கூறப்பட்ட வன்முறை மற்றும் பாரபட்சம் சார்ந்த அனுபவங்கள் ]

பெண்கள் ஆதரவு குழு, இலங்கை

**இலங்கையைச் சேர்ந்த LBT நபர்களால் கூறப்பட்ட வன்முறை மற்றும் பாரபட்சம் சார்ந்த அனுபவங்கள்**

முதல் பதிப்பு - மார்ச் 2014
கொழும்பு, இலங்கை.
© பெண்கள் ஆதரவு குழு (Women's Support Group)

# [ #O உள்ளடக்கம் ]

நன்றிகள் ........ 4
முன்னுரை ........ 9
1 அறிமுகம் ........ 11
2 முறையியல் ........ 17
3 பதப்பிரயோகம் ........ 21
4 நேர்காணப்பட்டவர்கள் தகவல்கள் ........ 23
5 இலங்கையில் மனித உரிமைகள் சூழ்நிலை ........ 27
6 அரசு சாரா செயற்பாட்டாளர்களின் வன்முறை மற்றும் பாரபட்சம் ........ 33
அ. உணர்வு சார் வன்முறை ........ 33
i. பேச்சுமூலமான துஷ்பிரயோகம் ........ 37
ii. கலாசார விழுமியம்/பால்நிலை விழுமிய அமுலாக்கல் வன்முறை ........ 40
ஆ. உடல்சார் வன்முறை ........ 41
இ. பாலியல் வன்முறை ........ 43
ஈ. நெருக்கமான துணையின் வன்முறை ........ 47
உ. வேலைத்தளத்தில் பாரபட்சம் ........ 51
7 அரசு சார்ந்த செயற்பாட்டாளர்களின் வன்முறை மற்றும் பாரபட்சம் ........ 56

8 நிவாரணத்திற்கான அணுகும் வசதி ............................ 60
9 பிரதிபலித்தல், எதிர்கொள்ளல், மற்றும் எதிர்த்து போராடல்
அ. உணர்ச்சிவசப்பட்ட பிரதிபலிப்பு.............................. 63
ஆ. செயலற்ற பிரதிபலிப்பு........................................... 67
இ. செயற்றிறன் மிக்க / செயற்பாட்டு பிரதிபலிப்பு................ 70
10 இலங்கையில் பெலவு மக்கள் மீது தாக்கத்தை
ஏற்படுத்தும் சட்டங்கள் ........................................... 75
அ. பிரிவு 365ஏ, குற்றவியல் கோவை (மொத்த ஒழுங்கீனம்)... 75
ஆ. பிரிவு 399, குற்றவியல் கோவை (ஆள் மாறாட்டத்தின்
மூலம் ஏமாற்றல்) ................................................ 77
இ. நாடோடிகள் சட்டம் 1842 .................................... 78
ஈ. அடிப்படை உரிமைகள் ....................................... 79
உ. சர்வதேச உடன்படிக்கைகள் ............................... 81
11 பரிந்துரைகள் ...................................................... 83

விபரக்கோவைகள் ..................................................... 86
பதங்களின் விளக்கம்
குறிப்புதவிகள் ......................................................... 89
பின்னிணைப்பு ......................................................... 94
பின்னிணைப்பு அ: அருஞ்சொல் விளக்கத் தொகுதி................ 95
பின்னிணைப்பு ஆ: பாலியல்பு தொடர்பான ஆங்கில மற்றும்
சிங்கள ஊடக அறிக்கைகளின் காப்பகம்.... 103

# [ அரும்பதங்களுக்கான விளக்கம் ]

CEDAW : பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் ஒழிப்பதற்கான சாசனம்

IGLHRC: சர்வதேச ஆண் மற்றும் பெண் ஓரினச்சேர்க்கையாளர்களுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழு

LBT : பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவினர் மற்றும் பால் மாற்றம் செய்தவர்கள்

LGBT : பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவினர் மற்றும் பால் மாற்றம் செய்தவர்கள்

LLRC : கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு

NGO : அரச சார்பற்ற நிறுவனம்

WSG : பெண்கள் ஆதரவு குழு

# [ நன்றிகள்! ]

இந்த ஆய்வினை சாத்தியமாக்குவதற்கு அதிருப்தி, நம்பிக்கை, ஊக்கம் மற்றும் நெகிழ்ச்சித் தன்மை சார்ந்த தமது கதைகளை விருப்பத்துடன் பகிர்ந்து கொண்ட நேர்காணலில் கலந்து கொண்டு பதிலளித்த அனைவருக்கும் பெண்கள் ஆதரவு குழு (WSG) தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது. இந்த கற்கையில் பங்குபற்றிய அனைத்து பங்குதாரர்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாவோம். இந்த ஆய்வு முழுவதிலும் வழிகாட்டல் மற்றும் ஆதரவை வழங்கிய ஆண் ஓரினச் சேர்க்கையாளர் மற்றும் பெண் ஓரினச் சேர்க்கையாளர் மனித உரிமைகளுக்கான சர்வதேச ஆணைக்குழுவிற்கும் (IGLHRC) WSG தமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. இறுதியாக, இந்த முயற்சி சாத்தியமாவதற்கு உதவிய எமது நிதியுதவியாளர்களான, பெண்களுக்கான உலகளாவிய நிதியம், IGLHRC மற்றும் தெற்காசிய மகளிர் நிதியம் என்பவற்றுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெண்கள் ஆதரவு குழுவின் ஸ்தாபக உறுப்பினரும்,
மிகவும் முக்கியமாக பாலியல் அமைப்பு, பால்நிலை
அடையாளம் மற்றும் பால்நிலை வெளிப்பாடு என்பவற்றின்
அடிப்படையில் வன்முறை மற்றும் பாரபட்சமற்று
இருப்பதற்கான உரிமையை பரிந்து பேசும் செயற்பாட்டில்
ஆலோசகராகவும், தூண்டலாகவும் இருந்த

# [ சுனிலா அபேசேகரவிற்கு ]

(1952-2013)

இந்த கற்கையை சமர்ப்பிக்கின்றோம்.

# முன்னுரை

பாலியல் அமைப்பு சார்ந்த வேறுபாடு இன்றி உரிமைக்கான சமத்துவத்தை எட்டுவது என்பதே அடிப்படை மனித உரிமை என்பது சார்ந்த உணர்வினை உலகம் அடைந்து வருகின்றது. அண்மைக்காலத்தில், பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் தொடர்பான உரிமைகள்சார் விடயங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் அடைந்துள்ளன. 2008ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட்ட LGBT உரிமைகள் தொடர்பான திருத்தத்தில் இதுவரை 94 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. LGBT உரிமைகளுக்கு ஆதரவான திருத்தம் ஒன்றினை 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் - பேரவையானது நிறைவேற்றியது (தென்னாபிரிக்காவினால் பிரேரிக்கப்பட்டது). பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிரயோகம் குறித்த 29 கோட்பாடுகளை, 2006ஆம் ஆண்டு இந்தோனேஷியா, யோக்யகார்த்தாவில் வைத்து, மேரி ரொபின்சன், அஸ்மா ஜெஹாங்கிர், பில் அல்ஸ்டன், மென்பிரட் நெவாக் மற்றும் போல் ஹன்ட் ஆகிய முன்னணி மனித உரிமைகள் ஆர்வலர்கள் இணைந்து உருவாக்கினர். சர்வதேச உடன்படிக்கை ஒன்றிற்கு இது ஆதாரமாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.

தண்டனை பயமற்றதாகவும், சில சந்தர்ப்பங்களில் பொது மக்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுவதுமாக LGBT சமூகத்தின் மீதான குற்றச் செயல் முன்னெடுப்பானது அடிக்கடி முன்னெடுக்கப்படும் வன்முறையாக இருப்பது இவற்றில் மிகவும் முக்கியமான அம்சமாக உள்ளது. உலகின் பல பாகங்களிலும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு நபர்கள் மற்றும் பால்

மாற்றம் செய்து கொண்டவர்கள் எதிர்நோக்கும் கொடூரமான வன்முறை மற்றும் பலாத்காரத்தை விளக்கமாக குறிப்பிடும் அறிக்கையொன்றினை 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் LBT நபர்கள் எதிர்கொள்ளும் வன்முறை தொடர்பான பண்புசார் ஆய்வினை அண்மையில் நிறைவு செய்த இலங்கை பெண்கள் ஆதரவு குழுவானது, உடல்சார் வன்முறை, பாலியல் வன்முறை, உணர்வுசார் வன்முறை, நெருக்கமான பங்காளர் வன்முறை மற்றும் வேலைத்தள பாரபசட்ம் குறித்த முக்கியமான சம்பவ கற்கைகளை உள்ளடக்கியிருந்தது. அந்த அறிக்கை மிகவும் அதிர்ச்சியளிப்பதாக அமைந்திருந்தது. மேலதிகமாக, LGBT நபர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் அதேவேளை, LGBT நடவடிக்கைகளை குற்றமாக்கும் சட்டங்கள் மீதான விமர்சனங்களையும் இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

LBT நபர்கள் எதிர்கொள்ளும் பாரபட்சம் மற்றும் வன்முறை குறித்த புரிந்துணர்வினை இந்த அறிக்கை வெளிப்படுத்தும் என நான் நம்புகின்றேன். இந்த புரிந்துணர்வானது அதற்கு இயைந்த நடவடிக்கையாக மாற வேண்டும். இந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை கண்ணியம் குறித்து நம்பிக்கை உள்ளவர்கள் இந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

**ராதிகா குமாரசுவாமி**
பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான முன்னாள் விசேட தூதர். அத்துடன், சிறுவர்கள் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாகவும் இருந்துள்ளார்.

# [ #01 அறிமுகம் ]

“என்னுடைய குடும்பமே என் மீது அதிக பாரபட்சம் காட்டுவதாக நான் நினைக்கின்றேன். உணர்வு ரீதியாகவும், வார்த்தைகளாலும் அவர்கள் என்னை பாரபட்சத்திற்கு உள்ளாக்குகின்றனர். நான் பெண் ஓரினச் சேர்க்கையாளர் என்பதற்காக அவர்கள் என்னை வெறுப்பதுடன், ஆண் ஒருவரைத் தவிர வேறு யாருடனும் நான் இருப்பதனை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். என்னுடைய பாலியல் தேவையை அவர்கள் மறைக்கின்றனர் அல்லது அதனை ஏற்றுக் கொள்வதனை தவிர்க்கின்றனர். அவர்கள் மூலமான பிரச்சினைகள் தொடர்கின்றன.”

மல்லிகா[1], 40 வயதுகளின் ஆரம்பத்தில், தான் பெண்மை தன்மை அதிகம் கொண்ட பெண் ஓரினச்சேர்க்கையாளர் என அறிமுகப்படுத்துகின்றார்

“என்னுடைய காதலியின் குடும்பத்தினர் அவருக்கு பலவந்தமாக மருந்துகளை வழங்கி குணப்படுத்த முயற்சிக்கின்றனர். அவரை வேற்று பாலினச் சேர்க்கை உள்ளவராக மாற்றுவதற்கு அவர்கள் கடுமையாக முயற்சிக்கின்றனர். இரண்டு முறை மின்சார அதிர்ச்சி வைத்தியமும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.”

ரோஷ்மி, 39 வயது, தான் பெண் ஓரினச்சேர்க்கையாளர் என அறிமுகப்படுத்துகின்றார்

1 அனாமேதயத் தன்மையையும், இரகசியத் தன்மையையும் காப்பதற்காக அனைத்து பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன.

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனமான பெண்கள் ஆதரவு குழுவானது (Women's Support Group (WSG) 2010ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை, பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள், மற்றும் பால் மாற்றம் அடைந்தவர்களுக்கான (LBT)[2] ஆதரவையும், பரிந்து பேசலையும் வழங்கி, இலங்கையில் அவர்கள் எதிர்நோக்கும் குறிப்பிடத்தக்க வன்முறை மற்றும் பாரபட்சம் சார்ந்த அனுபவங்களை ஆவணப்படுத்தியுள்ளது.

பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாடு என்பதன் அடிப்படையில் வேற்றுப் பாலினச் சேர்க்கையில் ஆர்வமில்லாத பெண்கள் மற்றும் பால் மாற்றமடைந்த நபர்களுக்கு எதிரான வன்முறையை அடையாளப்படுத்துவதற்கான ஆசிய செயற்பாட்டு ஆய்வு என இந்த முயற்சிக்கு தலைப்பிடப்பட்டுள்ளது. தமது பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாட்டின் அடிப்படையில் வன்முறை மற்றும் பாரபட்சத்திற்கு உள்ளாகும் நபர்களின் மனித உரிமைகளுக்காக போராடும் சர்வதேச நிறுவனமான, சர்வதேச ஆண் ஓரினச் சேர்க்கையாளர் மற்றும் பெண் ஓரினச்சேர்க்கையாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (IGLHRC) ஐந்து நாடுகளுக்கான செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

WSGஆனது, 33 LBT நபர்களிடம் தரரீதியான ஆய்வு நேர்காணல்களையும், சம்பந்தப்பட்ட 54 பங்குதாரர்களுடன் (எ.கா, சட்டத்தரணிகள், வைத்தியர்கள், மனநல நிபுணர்கள், ஊடக பிரதிநிதிகள், தொழில் வழங்குனர்கள், மதத் தலைவர்கள், கல்வி நிறுவன பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் அரச ஊழியர்கள்) பண்புசார் ஆய்வு நேர்காணல்களையும் நடத்தியது. பின்வரும் தொனிப் பொருட்களில் கேள்விகள் அமைக்கப்பட்டன: உணர்வுசார்

2 இந்த ஆய்வின் நோக்கத்திற்கான பால் மாற்றம் அடைந்த ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு தரப்பினரையும் நாம் உள்ளடக்குவோம். ‘LBT’ என்ற சுருக்கத் தொடரானது பெண் ஓரினச்சேர்க்கையாளர், இரட்டைப்பாலுறவு பெண்கள், பால்மாற்றம் அடைந்த பெண்கள் என்பதனை குறிப்பதற்கான பதமாகும். இந்த பொதுவான பதமானது பெண் ஓரினச்சேர்க்கையாளர், இரட்டைப்பாலுறவு பெண்கள், பால்மாற்றம் அடைந்த பெண்கள் (ஆணிலிருந்து பெண்), மற்றும் பால்மாற்றம் அடைந்த ஆண்கள் (பெண்ணிலிருந்து ஆண்) என்பவர்களை உள்ளடக்கும்.

வன்முறை, உடல்சார் வன்முறை, பாலியல் வன்முறை, நெருக்கமான துணையின் வன்முறை, தொழிலிடத்தில் பாரபட்சம், அரச வன்முறை, நிவாரணத்திற்கான அணுகும் வசதி, மற்றும் எதிர்கொள்ளும் பொறி முறைகள்.

இலங்கையில் ஒருபோதும் ஆவணப்படுத்தப்படாத LBT மனித உரிமைகள் தொடர்பான பல முக்கிய விடயங்களை இந்த நேர்காணல்கள் வெளிக்கொணர்ந்தன.

**இலங்கையின் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள், மற்றும் பால் மாற்றம் அடைந்தவர்கள் ஆகியோர் தமது பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாடு (SOGIE) காரணமாக பெரும்பாலும் உணர்வுசார் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதே இந்த ஆய்வு கண்டறிந்த பிரதான முடிவாகும்.** வாய்மூலமற்ற அல்லது அமைதியான தாக்குதல், கண்ணுக்கு தெரியாதவாறு மறைத்து வைத்தல், உணர்வுசார் ஆதிக்கம், பால்நிலை விழுமியத்தை கட்டாயப்படுத்தல், மத நிந்தனை, அந்தரங்கத்தை ஆக்கிரமித்தல், சமூகமயமாதலுக்கான கட்டுப்பாடு, புறக்கணிப்பு, குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு இடையிலான உறவில் பாதிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் நடத்தை உள்ளடங்கலாக ஏதாவது ஒரு உணர்வுசார் வன்முறைக்கு நேர்காணப்பட்ட 33 LBT நபர்களும் உள்ளாகியுள்ளனர்.

**குடும்ப உறுப்பினர்களே உணர்வுசார் வன்முறையில் ஈடுபடும் பிரதான குற்றமிழைப்பவர்கள் என நேர்காணப்பட்டவர்களில் அண்ணளவாக அனைவரும் குறிப்பிட்டமையே கண்டறியப்பட்ட இரண்டாவது முடிவாகும்.** சில சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களினால் உணர்வுசார் வன்முறைக்கு ஆளாகியமையை குறிப்பிடுவதற்கு சில நேர்காணப்பட்டவர்கள் தயக்கம் காட்டாத போதிலும், வன்முறையை விளக்கி கூறிய சந்தர்ப்பங்களிலும் “குற்றமிழைத்தவர்கள்” என்ற பதத்தினை அவர்களுடன் பொருத்திப் பார்ப்பதற்கு (அல்லது சம்பந்தப்படுத்துவதற்கு) அவர்கள் தயாராக இல்லை. இந்த தயக்கத்திற்கான காரணங்களை கண்டறிவதற்கு இந்த

ஆய்வின் மூலம் முயற்சி செய்யப்பட்டது. இது முடிவுகளின் மிகவும் முக்கியமான அம்சமாக மாறியது.

இலங்கைப் பெண்கள் எழுத்தறிவு மற்றும் கல்வி போன்ற அபிவிருத்தி குறிகாட்டிகளில் உயர்நிலையை எட்டியுள்ள போதிலும், அவை ஆண் ஆதிக்கம் மற்றும் வேற்றுபால் ஆண் ஆதிக்க விழுமியங்கள் என்பன பலப்படுத்தப்படும் பழைமை வாய்ந்த கருத்துக்கள் உடைய சூழலில் உள்வாங்கப்படும் விடயமாக உள்ளமையை இந்த ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இந்த சமூகத்தில், வேற்றுப் பால் திருமணம் வரவேற்கப்படுகின்றது, விவாகரத்து மற்றும் பிரிந்து செல்லல் என்பன வரவேற்கப்படுவதில்லை, மற்றும் வாழ்க்கைத் துணை வன்முறையும், குடும்ப வன்முறையும் மறைக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் பெண்களின் சுதந்திரத்தை, விசேடமாக பாலியல் தன்னாட்சியை மற்றும் பால்நிலை மாற்றத்தை இந்த சூழல் வரவேற்பதில்லை என்பதுடன், பொது தளங்களில் பெண்கள் வெளிப்படுதல் மற்றும் அதற்கான அணுகும் வசதியையும் கட்டுப்படுத்துகின்றது. பெண்கள் மீது கட்டுப்பாட்டை விதிக்கும் பிரதான இடமாகவும், அவர்கள் மீது அதிக அடக்குமுறை செலுத்தும் அமைப்பாகவும் குடும்பத்தின் தனித்துவம் உள்ளது. இந்த சூழ்நிலைகளின் காரணமாக தமக்கு எதுவிதமான ஆதரவும் (உதாரணமாக, தமது நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களிடம் அவர்களால் உதவி கோர முடியாத நிலை, மற்றும் மத தலைவர்கள் அல்லது பொலிஸார், மகளிர் உதவி சேவைகள் போன்ற சமுதாய சேவைகளை நாட முடியாத நிலை) கிடைக்காது என்ற உணர்வை LBT நபர்கள் கொண்டுள்ளனர்.

உணர்வுசார் வன்முறைக்கு அப்பால், நேர்காணப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமானோர் (33 பேரில் 26 பேர்) உடல்சார் வன்முறை குறித்து தெரிவித்தனர். மூன்று அம்சங்களின் அடிப்படையில் உணர்வுசார் வன்முறையுடன் கூடிய அனுபவங்கள் குறித்த தகவல்களை இந்த செயற்றிட்டம் கண்டறிய முயற்சித்தது:, அனுபவங்களில் இருந்து வெளிவருவன:, ஓரினச் சேர்க்கை அடையாளத்தை உறுதிப்படுத்திய போது

எதிர்கொண்ட வன்முறை, பால்நிலைக்கு ஏற்ற முறையில் இணங்கி நடக்காமையினால் பிறரால் ஏற்பட்ட வன்முறை, மற்றும் ஓரின உறவு வைத்திருப்பதன் காரணமாக ஏற்பட்ட வன்முறை. எந்த நடவடிக்கைகள் அவர்களுக்கு உடல்சார் வன்முறையாக அமைந்தன என்பதனை கண்டறியும் வகையில் குறிப்பிடத்தக்க கேள்விகள் நேர்காணப்பட்டவர்களிடம் வினவப்பட்டன. அரைப்பங்கிற்கும் அதிகமானோர் (33 பேரில் 18 பேர்) பாலியல் வன்முறையை எதிர்கொண்டதாக நேர்காணலில் இருந்து கண்டறியப்பட்டது. இரண்டு வகையான வன்முறையும் (உடல்சார் மற்றும் பாலியல்) அவர்களுடைய பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாடு என்பவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. நேர்காணப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் (33 பேரில் 31 பேர்) தமது மனநலம் மீதான தாக்கம் குறித்து குறிப்பிட்டனர். வன்முறையை எதிர்கொண்ட அனுபவங்கள் மற்றும் மேலும் வன்முறை ஏற்படலாம் என எதிர்பார்ப்புக்களால் மன அழுத்தம், மனப்பயம், கோபம், விரக்தி, அச்சம் போன்ற மனநல கோளாறுகள் அவர்கள் சுட்டிக்காட்டிய மனநல தாக்கங்களில் உள்ளடங்குகின்றன. சமூகம், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினால் வெறுக்கப்படுவோம் என்ற காரணத்தினால் நேர்காணப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் (33 பேரில் 20 பேர்), தமது பாலியல் அமைப்பை வெளிப்படுத்தாதிருக்க தீர்மானித்துள்ளனர். தமக்குத் தாமே தீங்கு விளைவித்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக 20 பேர் தெரிவித்ததுடன், மூன்றில் ஒரு பங்கினர் (33 பேரில் 11 பேர்) தற்கொலைக்கு முயற்சித்ததாக தெரிவித்தனர். வாழ்க்கை துணைகளாக இருந்த இரண்டு பெண்கள் தற்கொலை செய்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை WSG அவதானித்துள்ளது.[3]

3 கம்பஹா மாவட்டத்தில் 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம், தீபிகா மற்றும் சானிக்கா என்ற 15 வயதான பெண்கள் இருவர், ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தவாறு ரயிலின் முன்னால் பாய்ந்தனர். (22/07/2005 – லங்காதீபவில் வெளிவந்தது):, 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதான சுஜானி மற்றும் 16 வயதான அனோமா ஆகியோர் தூக்கிட்டுக் கொண்டனர். “எம்மால் இணைந்து வாழ முடியாது, நாம் ஒன்றாக சாகின்றோம்” என்ற தற்கொலைக் குறிப்பு அவர்கள் அருகில் இருந்துள்ளது (23/08/2002 திவயினவில் வந்தது:, 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், துணியொன்றில் கைகள் கட்டப்பட்ட நிலையில், 30 வயதான நந்தனி என்பவரும், 21 வயதான சானிக்கா ஆகியோரின் உடல்கள் காலி மாவட்டத்தின் கரையோரமாக கண்டெடுக்கப்பட்டன. கொலை செய்யப்பட்ட, பாலியல் வல்லுறுவுக்கு உட்படுத்தப்பட்ட அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆதாரங்கள் எதுவும் இல்லை. இருவரும் தமக்கிடையில் பகிர்ந்து கொண்ட காதல் கடிதங்கள் பொலிஸ் விசாரணையின் போது கண்டெடுக்கப்பட்டன (05/11/2001 லங்காதீபவில் வெளிவந்தது).

இன்றைய இலங்கை சமூகத்தின் பிரிவுகளில் நிலவும் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு எதிரான உளப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகள் குறித்த உள்நோக்கம் மற்றும் வடிவங்கள் தொடர்பில் ஆழமான புரிந்துணர்வை பங்குதாரர் நேர்காணல் முடிவுகள் வெளிப்படுத்தின. மருத்துவம், மனநலம், கல்வி, மதம் மற்றும் ஊடகம் உள்ளடங்கலாக பல்வேறு தொழில் துறையுடன் கூடிய பிணைப்புக்களை கண்டறிவதற்கு இந்த நேர்காணல் துணை புரிந்தது. எடுத்துக்காட்டாக, பல்வேறு LBT நபர்களுடன், விசேடமாக பால் மாற்றம் அடைந்த நபர்களுடன் மனநல தொழிலில் உள்ள ஒருவர், இலங்கை மனநல துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்தும், LBT நபர்களுடன் பணியாற்றக் கூடிய விசேட பயிற்சி பெற்ற நபர்களின் பற்றாக்குறை குறித்தும் அறிந்து வைத்துள்ளார். நபர்களுடன் பணியாற்றுவதற்கு மேலும் சிகிச்சைசார் உளவியலாளர்கள் தேவை எனவும் அவர் அறிந்து வைத்துள்ளதுடன், பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் குறித்த விடயங்களில் பொது மக்களுக்கு கற்பிக்க வேண்டிய தேவையையும் அவர் வலியுறுத்துகின்றார். “அவர்கள் தீங்கிழைக்கக் கூடிய நடத்தைகளில் ஈடுபடாத வரை, இந்த குறிப்பிட்ட வழியில் வாழ்வதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு[4]” என அவர் தெரிவித்தார்.

4 மனநல நிபுணருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை 14 ஜூலை 2011.

# #02 முறையியல்

எமது நிறுவன வலையமைப்பின் ஊடாக எமக்கு அறிமுகமான 33 LBT[5] நபர்களிடம் பண்புசார் நேர்காணல்களை WSG முன்னெடுத்தது. இந்த கற்கைக்கான பரந்தளவிலான மக்கள் தொகையை அடைவதற்கு நாம் எதிர்பார்த்திருந்த போதிலும், அதனை நிறைவேற்றுவதில் சிக்கல் இருந்தது. வலையமைப்பிற்கு வெளியே உள்ள LBT நபர்கள் நேர்காண்பதற்கு இசைவு தெரிவிக்காதவர்களாக இருந்தனர். LBT நபர்களுடனான நேர்காணலுக்கு மேலதிகமாக, 54 பங்குதாரர்களையும் நாம் நேர்கண்டோம்.

LBT மற்றும் பங்குதாரர்களிடமான நேர்காணல்களின் போதும் வினாக்கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. LBT நேர்காணல்கள் கால அவகாசத்தில் இரண்டு மணித்தியாலங்களாக (சராசரியாக) இருந்தன. பங்குதாரர்கள் நேர்காணல்கள் பொதுவாக ஒரு மணித்தியாலம் வரை நீடித்தன. நேர்காணல் மொழியானது, பங்குபற்றுனர்களின் மொழிப் பழக்கத்திற்கு ஏற்ப சிங்களம் அல்லது ஆங்கிலமாக இருந்தது. பதிலளித்த தமிழ் பேசும் நபர்கள், ஆங்கிலத்தில் நேர்காணப்படுவதற்கு விருப்புடன் இருந்தனர் (தமிழில் நேர்காணப்படுவதற்கான பிரிவும் உள்ளடகப்பட்டிருந்தது).

நேர்காணப்படுவதற்கு முன்னர், பதிலளித்தவர்கள் அனைவருக்கும் ஆய்வின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் விளக்கப்பட்டன. அதன் பின்னர் நேர்காணலுக்கான இசைவு படிவத்தில் கையெழுத்தும் பெறப்பட்டது. அனாமேதய தன்மை மற்றும் இரகசியத் தன்மையை உறுதி செய்வதற்கு மேலதிகமாக, ஆய்வு செயற்றிட்டத்தில் பங்குபற்றுவதற்கான

5 இங்கு நாம் 'LBT' என குறிப்பிட்டாலும், பதிலளித்தவர்களில் சிலர் தம்மை "பெண் ஓரினச் சேர்க்கையாளர்" "இருபாலுறவு", அல்லது "பால் மாற்றம் செய்தவர்கள்" என தம்மை அடையாளப்படுத்துவதற்கு விருப்பம் அற்றவர்களாக இருந்தனர். நேர்காணப்பட்டவர்களின் தகவல்கள் பகுதியைப் பார்க்கவும்.

தன்னார்வத்தையும் இசைவு படிவம் வலியுறுத்தியது. எந்தவொரு கேள்விக்கும் பதிலளிக்காது தவிர்த்தல் மற்றும் நேர்காணலின் போது அல்லது நேர்காணலிற்கு முன்னர் எதுவித காரணமும் இன்றி பதிலளிக்காது மறுப்பு தெரிவிப்பதற்கான தெரிவும் பதிலளித்தவர்களுக்கு வழங்கப்பட்டது. நேர்காணப்பட்ட மூன்று மாதங்களில் நேர்காணலை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான தெரிவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நேர்காணப்பட்டவர்களில் இருவர் தமது நேர்காணலை திரும்பப் பெற்றுக் கொண்டனர் (காரணங்கள் வழங்கப்படவில்லை).

வன்முறை தொடர்பான ஆய்வுக்கு தாம் பொருத்தமான நபர்கள் இல்லை என நேர்காணப்பட்டவர்களில் சிலர் தெரிவித்தனர். ஆச்சரியமளிக்கும் வகையில், நேர்காணப்பட்டவர்கள் பாலியல் அமைப்பு சார்ந்து வன்முறையை எதிர்நோக்கியிருந்தமையை நேர்காணலின் மூலம் கண்டறியக் கூடியதாக இருந்தது. தமது உணர்வுசார் அல்லது உளவியல்சார் வன்முறைக்கு காரணமாக இருந்த தமது பெற்றோர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களை “குற்றம் இழைத்தவர்கள்” எனக் குறிப்பிடுவதற்கு தயக்கம் கொண்டவர்களாக நேர்காணப்பட்டவர்கள் சிலர் இருந்தமையையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இரண்டு ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்பட்ட பங்குதாரர் நேர்காணல்கள் சவால் மிக்கதாக அமைந்திருந்தன. நேர்காணப்படுவதற்கான ஆர்வம் அற்றவர்களாக இருந்த அல்லது ஆண் ஓரினச் சேர்க்கை உளப்பாங்கிற்கு எதிரான கருத்தினைக் கொண்டிருந்த சாத்தியமான பங்குபற்றுனர்களினால் இரண்டு ஆய்வாளர்களும் அச்சுறுத்தலை எதிர்கொண்டனர். பங்குதாரர்களை யார் நேர்காணல் வேண்டும் என தீர்மானிப்பதில் (இந்த விடயம் தொடர்பான பெரும்பாலானோரின் நடத்தைகள் புரிந்து கொள்ளப்படவில்லை), ஆய்வாளர்களின் தோற்றம், கேட்கப்படும் கேள்விகள், தமது பால்நிலை அல்லது பாலியல்பு குறித்த ஆர்வத்தை தூண்டும் தன்மை என்பன சார்ந்து தந்திரோபாயத்துடன் நாம் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. இந்த உபாயத்திற்கு ஏற்ப ஆய்வாளர் தெரிந்தெடுக்கப்பட்டனர் எவ்வாறாயினும், பங்குதாரர்கள் நேர்காணலை முன்னெடுத்த இரண்டு ஆய்வாளர்களும் பொருத்தமற்ற சில கேள்விகளை எதிர்கொண்டனர்.

> “உங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா? ஆமெனின், இந்த ஆய்வினை முன்னெடுப்பதற்காக உங்களுக்கு எவ்வளவு வழங்கப்படுகின்றது.”
> “இந்த ஆய்வுக்கு நிதியுதவி வழங்கும் நாடுகள் எவை?”
> “ஏன் உங்களுக்கு நீண்ட கூந்தல் உள்ளது?”“உங்களுக்கு ஆண் காதலர் உள்ளாரா?”

நேர்காணல்களை முன்னெடுத்தமை தொடர்பில் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுமாறு இரண்டு ஆய்வாளர்களிற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. பங்குதாரர்களின் உளப்பாங்குகளை களக்குறிப்புக்களில் விளக்குமாறு சிலரிடம் கோரப்பட்டது.

**பங்குதாரர் வகை: சட்டத்தரணி**
**ஆய்வாளர் பிரிவு: நகரம்**

“ஆய்வின் பெயர் குறித்து அவர் அறிந்து கொண்டதும், அவர் அதிக அக்கறை கொண்டார். அவருடைய பெயர் மற்றும் இலக்கத்தை நான் எவ்வாறு அறிந்து கொண்டேன் என தெரிந்து கொள்ள அவர் விரும்பினார். தாம் பதிவு செய்யப்படுவது குறித்து அவர் விருப்பம் இன்றி இருந்தார். எனக்கு ஆண் நண்பர் உள்ளனரா என அவர் வினவினார். நான் இல்லை என்று கூறியதும், இவ்வாறான தலைப்புக்களில் தொடர்ந்து ஆய்வு செய்து வந்தால், இது தான் நடக்கும் என்பதில் ஆச்சரியமில்லை என அவர் கூறினார். இதன் காரணமாகவே ஆண் நண்பர்களை பெறுவதற்கான சந்தர்ப்பத்தை நான் இழந்துள்ளதாக கூறினார். ஓரினச் சேர்க்கை என்பது எமது சமூகத்தில் ஒழிந்துள்ள ஒரு விடயம் எனவும், இந்த குப்பையை நாம் வெளியில் கொண்டு வரக் கூடாது எனவும் அவர் கூறினார். அது மிகவும் மோசமான நிலையை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டார். ஆண் ஓரினச் சேர்க்கையாளராக கணவன் இருப்பதே பெரும்பாலான விவாகரத்து சம்பவங்களுக்கு காரணமாக இருப்பதாக அவர்

சுட்டிக்காட்டினார். இறுதியில் நேர்காணப்படுவதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். எனினும், அவருடைய பெரும்பாலான கருத்துக்களை பதிவு செய்ய வேண்டாம் என கூறிவிட்டார்".

**பங்குதாரர் வகை: மருத்துவ சுகாதாரணம்**
**ஆய்வாளர் பிரிவு: கிராமம்**

"அவருக்கு என்னுடைய கணவரை தெரியும் என்பதால், வைத்தியர் என்னை கண்டித்தார். தன்னுடைய நண்பரின் மனைவி இவ்வாறான ஆய்வினை புரிவது குறித்து தாம் மிகுந்த கவலை கொள்வதாக அவர் கூறினார். இவ்வாறான ஆய்வுகளை எமது கிராமங்களுக்கும் கொண்டு வருவதினால் எமது கலாசாரத்தை, மேற்கத்தைய கலாசாரம் சீரழிப்பதாக அவர் தெரிவித்தார். புராதன அரசாட்சி காலத்திலும் இந்த நிலை (ஓரினச் சேர்க்கை) காணப்பட்டதாக நான் அவருக்கு கூறினேன். அந்த காலப்பகுதியில் நான் வசிக்கவில்லை என்பதனால் அதனை உறுதியாக கூற முடியாது என அவர் மறுத்தார்."

**பங்குதாரர் வகை: மருத்துவ சுகாதாரம்**
**ஆய்வாளர் பிரிவு: கிராமம்**

"ஓரே பால் கவர்ச்சியை வெளிப்படுத்தும் சிறுவர்கள் தமது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களினால் உளவள ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்படுவதாக அந்த வைத்தியர் சுட்டிக்காட்டினார். உளவளத் துணையானது அவர்களை சரியான பாதைக்கு இட்டுச் செல்லும். கொள்கை சார்ந்து ஓரினச் சேர்க்கைக்கு வைத்தியர் இசைவு வெளிப்படுத்திய போதிலும், பதிவில் அதனை குறிப்பிடுவதற்கு அவர் விருப்பம் வெளியிடவில்லை."

# #03 பதப்பிரயோகம்

பதப்பிரயோகம் சம்பந்தப்பட்ட விடயங்களை கலந்துரையாடும் போது, "பாலியல் அமைப்பு", "பால்நிலை அடையாளம்", "பால்நிலை வெளிப்பாடு" மற்றும் "வேற்றுப்பால் இச்சை" போன்ற பதங்களை பிரதேச மொழியில் (சிங்களம் மற்றும் தமிழ்) பயன்படுத்துவது சவால் மிக்கதாக இருந்தது.

அதேவேளை, "பாலியல் அமைப்பு" என்ற பதப் பயன்பாட்டை பல சந்தர்ப்பங்களில் நாம் தவிர்க்க நேர்ந்தது. ஏனெனில், இதற்கான அர்த்தத்தை பெரும்பாலோனர் அறிந்திருக்கவில்லை. முறைசார் பதங்களினை ஒன்றாக தவிர்த்து, பெண்கள் அல்லது ஆண்களுடன் அல்லது இருவருடனும் பாலியல் மற்றும் உணர்வுசார் உறவுகளை கொண்டிருக்க விரும்புகின்றனரான என எளிய வகையில் அவர்களிடம் வினவப்பட்டது.

பால்நிலை அடையாளம் என்பது சிங்களத்தில் 'ஸ்திரி புருஷ சமாஜபாவய மத்த பதனம்வு அனன்யதாவய' என மொழிபெயர்க்கப்படுகின்றது. இந்த முறைசார் விளக்கமானது நேர்காணலின் போது சிங்கள பேச்சுவழக்கிற்கு மாறுபாடானதாக இருந்தது. அதன் அர்த்தம் குறித்த மேலதிக விளக்கம் இன்றி பயன்படுத்தப்படக் கூடியதாக இல்லை. இதனை விளக்குவதற்கு, சில ஆய்வாளர்கள் பதிலளிப்பவர்களிடம் தம்மையே உதாரணமாக எடுத்துக் கொண்டு, தம்மை பெண்ணாக கருதுகின்றனரா அல்லது இல்லையா என்பதனையும், பெண் தன்மையற்ற/ஆண் தன்மையான/கட்டுடல் ஆடை அணிந்த தன்மையானவர்களாக தோன்றுகின்றனரா என வினாவுதல்.

இலங்கையை எடுத்துக் கொண்டால், மேற்கத்தையம் அல்லாத சூழ்நிலையில், வேற்றுப்பால் இச்சை இல்லாத நிலை மற்றும் பால்நிலை அடையாளங்களை கண்டறிவது என்பது சிக்கலானது. "ஆணாக மாறியவரின்" அடையாளம் என்பது

சிறந்த உதாரணமாகும். மேற்கத்தைய சூழ்நிலைக்குள், “ஆணாக மாறியவர்” என்பது, உயிரியல் ரீதியாக பெண்ணாகவும், பால்நிலை அடையாளமும், பால்நிலை வெளிப்பாடும் ஆண் தன்மையானதாகவும் விளக்கப்படும். அதேவேளை, அவர் எவ்வித சத்திர சிகிச்சைக்கும் உட்படுத்தப்படாமல், ஆண் ஒருவராகவே தமது வாழ்க்கையை முன்னெடுப்பார். எவ்வாறாயினும், இலங்கையில் பெண் ஒருவர் ஆணாக “மாறுவேடம்” அணிந்த பெண்கள் அல்லது “ஆள்மாறாட்டம்” செய்யும் பெண்கள் என்ற அடிப்படையில் பெரும் எண்ணிக்கையில் பத்திரிகை செய்திகள் வெளியாகியுள்ளன.[6] பால் மாற்றம் செய்தவர்கள் போன்ற பால்நிலை அடையாளங்களில் பால்நிலை வெளிப்பாடு என்பதனை தெளிவாக குறிப்பிடுவது என்பது சிக்கலானதாகும். எடுத்துக்காட்டாக, WSGஇனால் ஆவணப்படுத்தப்பட்ட சில சம்பவங்களில், நாளாந்த அடிப்படையில் பெண்கள் எதிர்நோக்கக் கூடிய பலாத்காரங்களை தவிர்ப்பதற்கு, ஆண் அடையாளம் கொண்டவர்கள் என்ற நிலையை சில தனிநபர்கள் முன்வைத்ததாக கூறினர். இவர்கள் இதே நிலையில் தமது வாழ்க்கையைத் தொடரும் போது, உயிரியல் ரீதியாக பெண்கள் என்ற அவர்களுடைய நிலை கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. கடந்த வருடத்தில், பால்மாற்றம் தொடர்பில், குறிப்பாக மருத்துவ நிபுணர்கள் மத்தியில் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது.

6 லங்காதீப, “18 வயது முதல் தம்மை பெண்ணாக மாறுவேடம் புனைந்திருந்த ஆண்” 31, ஆகஸ்ட் 2010:, லங்காதீப, “ஆண் இராணுவ அதிகாரியாக மாறுவேடம் புனைந்திருந்த பெண், கைபேசி மூலம் ஏற்பட்ட காதலினால் பெண் ஒருவரை மணம் புரிந்தார்” 23, ஆகஸ்ட் 2010:, திவயின, “ஆணாக மாறுவேடம் புனைந்த பெண்” 17 மே 2009:, லங்காதீப, “20 வருடங்களாக தம்மை ஆணாக மாறுவேடம் புனைந்திருந்த நபர் பொலிஸ் நிலையத்தில் பெண்ணாக மாறினார்”, 3 ஜனவரி 2009:, லங்காதீப, “16 வயதான நாடோடிப் பெண், ஆணாக மாறுவேடம், கொலைச் சம்பவத்தில் சந்தேக நபராக கைது”, 11 மே 2005:, லங்காதீப, “தம்புள்ள கோவிலில் பெண்ணாக மாறிய ஆண்” 10 மார்ச் 2004:, லங்காதீப, “பெண் இராணுவ அதிகாரியைப் போல மாறுவேடம் அணிந்த ஆண் இராணுவ அதிகாரிக்கு போலி அடையாள அட்டை வழங்கியமைக்காக பெண் கோப்பரல் ஒருவர் கைது”, 18 ஜனவரி 2003:, சன்டே லங்காதீப, “பெண்ணாக மாறுவேடம் புனைந்த ஆண் குறித்த சம்பவம்” 20 ஜுலை 2003. மேலதிக தகவல்களுக்கு, காப்பகத்தில் சேர்க்கப்பட்ட ஊடக அறிக்கைகளை பின்னிணைப்பு ஆஇல் பார்க்கவும்.

# [ #04 நேர்காணப்பட்டவர்களின் தகவல்கள் ]

**பாலியல்பு:** WSGஇனால் முன்னெடுக்கப்பட்ட நேர்காணலில் கலந்து கொண்ட 33 பேரில், 22 பேர் தம்மை பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் என அடையாளப்படுத்திக் கொண்டனர். இருவர் இரட்டைப் பாலுறவு பெண்கள் என கூறினர். ஒருவர் தம்மை வேற்றுப்பாலினச் சேர்க்கை கொண்ட ஆண் எனவும் தெரிவித்தனர். எஞ்சியிருந்த எட்டு பேரும் தம்மை ஆண் ஓரினச் சேர்க்கையாளர், சமூகத்தில் பால் மற்றும் பாலியல்பு சார்ந்த முத்திரைகளை மீறி வாழ்பவர், பாலியல் உறவுகள் வைக்காதவர், க்வியர் அல்லது உறுதியாக கூற முடியாத நிலையில் உள்ளவர் என அறிமுகப்படுத்திக் கொண்டனர். சிலர் தமக்கு பெண்களில் விருப்பம் இருந்ததாகவும், சிலர் தமது பாலியல்பை வெளிப்படுத்தும் ஆர்வம் இல்லை எனவும் தெரிவித்தனர்.

**பால்நிலை அடையாளம் அல்லது வெளிப்பாடு:** பால்நிலை அடையாளம் என்பதன் அடிப்படையில், நேர்காணப்பட்டவர்களில் இருவர் ஆண்கள் எனவும், ஆணோ அல்லது பெண்ணோ இல்லை எனவும், எனினும், தம்மை "அரவாணிகள்" அல்லது "திருநங்கைகள்" என அடையாளப்படுத்த விரும்புவதாக மூவரும், 15 பேர் தம்மை பெண்கள், மகளிர் மற்றும்/அல்லது பெண்மை கொண்டவர்கள் எனவும், தம்மை மகளிர் என அறிமுகப்படுத்திக் கொண்ட 13 பேர், ஆண்தன்மை கொண்ட பெண் ஓரினச் சேர்க்கையாளர், பெண்மை அற்ற, பையனைப் போன்ற மற்றும்/அல்லது ஆண்களின் தன்மைகள் உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

**வயது:** நேர்காணப்பட்டவர்களில் 14 பேர் 20-29 வயதுக்கு இடைப்பட்டவர்கள், 12 பேர் 30–39 வயதுக்கு இடைப்பட்டவர்கள், 7 பேர் 40 வயதுக்கு அதிகமானவர்கள்.

**இனம்:** இனம் என்பதன் அடிப்படையில், சிங்களவர் அதிக எண்ணிக்கையில் (19 பேர்) இருந்தனர். ஒன்பது பேர் கலப்பு இனமாகவும் (சிங்களம்/பறங்கியர் அல்லது சிங்களம்/தமிழ்), மூவர் தம்மை பறங்கியர் எனவும், இருவர் தமிழர் எனவும் அறிமுகப்படுத்திக் கொண்டனர். நேர்காணப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது.

**நம்பிக்கை:** நேர்காணப்பட்டவர்களில் அண்ணளவாக அரைப்பங்கினர் (16) பௌத்த குடும்பங்களில் பிறந்தவர்கள். எனினும், 10 பேர் மாத்திரமே தாம் பௌத்த மதத்தை பின்பற்றுவதாக தெரிவித்தனர். அதேபோல, நேர்காணப்பட்டவர்களில் கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்த 13 பேரில், எட்டு பேர் மாத்திரமே கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகின்றனர். ஏனையோர் இந்துக்கள், நாத்திகர்கள், இறை மறுப்பாளர்கள், அல்லது தமது மத அடையாளத்தை வெளிப்படுத்தாதவர்கள். முஸ்லீம்களை நேர்காண்பதற்கான முயற்சி வெற்றியளிக்கவில்லை.

**கல்வி:** நேர்காணப்பட்டவர்களில் 14 பேர் மூன்றாம் நிலை கல்வியை நிறைவு செய்துள்ளதுடன், எட்டு பேர் இளமானி கற்கையையும், 11 பேர் முதுமானி கற்கையையும் நிறைவு செய்துள்ளனர்.

**வேலைவாய்ப்பு:** பதிலளித்த 33 பேரில், 30 பேர் முறைசார் துறையில் பணியாற்றுகின்றனர். வருடாந்த வருமானத்தின் அடிப்படையில், நான்கு பேர் 3,000 அமெரிக்க டொலர்களுக்கு குறைவாகவும், ஒன்பது பேர் 3,000-5000 அமெரிக்க டொலர்களுக்கு இடைப்பட்டதாகவும், ஏழு பேர் 5,000-10,000 அமெரிக்க டொலர்களுக்கு இடைப்பட்டதாகவும், எட்டு பேர் 10,000 டொலர்களுக்கு அதிகமாகவும் வருமானம் பெறுவதாக தெரிவித்தனர். இருவர் நிரந்தர வருமானம் அற்றவர்கள் எனத் தெரிவித்தனர்.

**பங்குதாரர் நேர்காணல்கள்:** நேர்காணப்பட்ட 51 பங்குதாரர்களில், அரச நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஏழு பேராகும். 11 பேர் மனித உரிமைகள் ஆர்வலர்களாகும் (சட்டத்தரணிகள் மற்றும் பெண் உரிமைகள் செயற்பாட்டாளர்கள்).

ஏழு பேர் சேவை வழங்குனர்களாகும் (மனநல மற்றும் மருத்துவ அதிகாரிகள்). அத்துடன், 26 பேர் தொழில் புரிபவர்கள் மற்றும் ஊடக, மத மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளாகும். கிடைத்த கால அவகாசமானது 30 வீதமான நேர்காணல்களை (16 பேர்) மாத்திரமே பகுப்பாய்வு செய்வதற்கான சந்தர்ப்பத்தை அளித்தது. இந்த கட்டுப்பாடானது, இந்த அத்தியாயத்தின் முடிவுரையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். எவ்வாறாயினும், பங்குபற்றுனர்கள் நியமனமானது அனைத்து துறைகளில் இருந்தும், ஒவ்வொரு துறையிலும் ஒருவர் என்ற அடிப்படையில் (எ.கா, கல்வியியலாளர்கள், தொழில் வழங்குனர், ஊடகம், மதம்) முன்னெடுக்கப்பட்டது. அனைத்து பங்குதாரர் நேர்காணல்களும் ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் முன்னெடுக்கப்பட்டன. நேர்காணப்பட்ட தமிழர்கள் ஆங்கிலத்தில் பதிலளிப்பதற்கு விருப்பு தெரிவித்திருந்தனர்.

இலங்கையில் ஒரு பாலினச் சேர்க்கை தொடர்பான எதிர்மறையான சமூக உளப்பாங்குகள் மற்றும் நம்பிக்கைகளை பங்குதாரர் நேர்காணல்கள் வெளிப்படுத்தின. பரிந்து பேசல் மூலோபாயங்கள் மற்றும் சேவை மேம்பாட்டிற்கான பயனுள்ள உள்நோக்கங்களை இவை வழங்கின. ஓரினச் சேர்க்கை என்பது பெரும்பாலும் சிறுவர்களை புணரும் செயற்பாடாக பார்க்கப்படும் நிலை உள்ளமையை பங்குதாரர்களின் பொதுவான பதில்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. 'தாம் யார் என்பதனை ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ள நபரால் தெரிவிக்க முடியாது (தமது பாலியல்பு குறித்து திறந்த மனதுடன் இருக்க முடியாது), ஏனெனில், அது ஒரு அறுவறுப்பான விடயமாக பார்க்கப்படுகின்றது. எனவே, அது இரகசியமாக முன்னெடுக்கப்படுகின்றது (அதன் விளைவாக) அவர்கள் (ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள்) சிறுவர்களை நோக்கிச் செல்கின்றனர்" என மருத்துவ நிபுணரான வைத்தியர் லக்ருவான் தெரிவிக்கின்றார்.[7]

எச்.ஐ.வி/எய்ட்ஸ்/பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் என்பவற்றுடன் தொடர்புடைய ஓரினச் சேர்க்கை என்பது உள்ளமையே மற்றைய பொதுவான பதிலாக உள்ளது. "ஆண்களுக்கு இடையில் அல்லது பெண்களுக்கு இடையில்

7 மருத்துவ நிபுணர், வைத்தியர் லக்ருவானுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஆகஸ்ட் 13

இவ்வாறான விடயங்கள் ஏற்படுமாயின், மருந்து வழங்கப்பட முடியாத அடையாளம் காணப்படாத நோய்கள் ஏற்படும் என்பதனை 100 வீதம் உறுதியாக கடவுள் தீர்மானித்துள்ளார். இவ்வாறான விடயங்களை அனுமதிப்பவர்கள் அவமானம் மற்றும் அவதூறுகளால் மரணத்தை எதிர்கொள்வார்கள் என குரான் போதிக்கின்றது" என முஸ்லீம் மௌலவியான (மதத் தலைவர்) மொஹமட் தெரிவிக்கின்றார்[8].

ஓரினச் சேர்க்கை என்பது தற்போதைய கலாசார மற்றும் மத கூருணர்வுகளுக்கு பொருத்தமற்றது என்பதே மூன்றாவது பதிலாக உள்ளது. "எமது சூழலைப் பார்த்தோமானால் (சிங்கள மற்றும் தமிழ் கலாசாரத்தை குறிப்பிடுகின்றார்) அது பொருத்தமானது என கூற முடியாது.[9]" என பாடசாலை அதிபரான மெனிக்கா தெரிவிக்கின்றார். "சாதாரண வாழ்வை முன்னெடுக்க முடியாத ஒரு வகையான பாலியல் அல்லது உளவியல் குறைபாடு உள்ளவர்களாகவே LBT நபர்கள் பார்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு எதுவித தெரிவும் இல்லாததன் காரணமாக, அவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்களாக செயற்படுகின்றனர்".[10]

எவ்வாறாயினும், கலாசார ஆதிக்கம் நிறைந்த சூழலில் இந்த கருத்தில் ஒரு அடிப்படை உள்ளது. எடுத்துக்காட்டாக, நாட்டின் உத்தியோகப்பூர்வமான மதமான, இலங்கையர் பெரும்பாலானோர் பின்பற்றும் பௌத்த மதத்தில், ஓரினச் சேர்க்கைக்கு எதிராக புத்தர் போதித்துள்ளமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.[11] பிக்குகள் மற்றும் பிக்குணிகள் தமது பாலியல் அங்கங்களால் உடல்சார் துளைகளுக்குள் ஊடுருவ முடியாது என வினய (மத ஒழுக்கத்திற்கான துறவு மட விதிகள்) அறிவுறுத்துகின்றது. ஓரினச் சேர்க்கை மற்றும் வேற்று பாலினச் சேர்க்கை நடவடிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் எதனையும் அது சுட்டிக்காட்டவில்லை. இந்த விதியானது மத உறுதி மொழி எடுத்துக் கொண்டவர்களுக்கு மாத்திரமே பொருந்துகின்றது.

8 முஸ்லீம் மௌலவி மொஹமட்டுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2011 ஆகஸ்ட் 01.

9 பாடசாலை அதிபர் மெனிக்காவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2011 ஜூன் 16.

10 மருத்துவ நிறுவன பிரதிநிதி சுதத்துடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2012 ஆகஸ்ட் 09.

11 பெல்லன்வில சுதத்த தேரர் மற்றும் சிசில் ஜே. துன்ன http://groundviews.org/2007/08/28/homosexuality-buddhism-and-sri-lankan-society/

# #05 இலங்கையில் மனித உரிமைகள் சூழ்நிலை

இலங்கையானது அரசியலமைப்புசார் பல்கட்சி குடியரசாகும். தற்போது ஜனாதிபதியாக அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ விளங்குகின்றார். 2010ஆம் ஆண்டு இரண்டாவது ஆறு வருட காலப்பகுதிக்காக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். சுமார் 30 வருடங்களாக இலங்கை நாடானது உள்நாட்டு யுத்தத்தை எதிர்கொண்டிருந்தது. இதன் போது இலங்கை அரசாங்கத்திற்கும், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் தனி அலகு கோரி போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்ட காலம் மோதல் இடம்பெற்று வந்தது. இந்த மோதலின் காரணமாக 70,000இற்கும் அதிகமான இலங்கையர்கள் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.[12] 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் தோற்கடித்ததுடன், சுமார் 40,000 தமிழ் மக்கள் உயிரிழந்ததுடன், சுமார் 60,000 தமிழ் மக்கள் காயமடைந்த இரத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்தது. 2010ஆம் ஆண்டு மே மாதம், தேசிய பொறுப்புடைமை பொறிமுறை என்ற அடிப்படையில் ஜனாதிபதியினால் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) நியமிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நம்பகத் தன்மை என்ற அடிப்படையில் சர்வதேச தரங்களை LLRC எட்டவில்லை. மிகவும் முக்கியமாக உள்ளக முரண்பாட்டின் போது, இடம்பெற்ற முறைசார்ந்த மனித உரிமைகள் மீறல் தொடர்பில் விசாரணை செய்யத் தவறியமைக்காக சர்வதேசமும், அரசாங்கங்களுக்கு இடையிலான மனித உரிமைகள் நிறுவனங்களும் இந்த அமைப்பினை குறைபாடுள்ளதாக கருதுகின்றன.[13] மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் அரசியல் ஆர்வத்தின் ஆழமான குறைபாடு உள்ளமையே LLRC தோல்வியுற்றமைக்கு காரணமாகும்.

12 பார்க்க http://www.bbc.co.uk/news/world-south-asia-11393458

13 பார்க்க http://www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session22/A-HRC-22-38_en.pdf kw;Wk; http://www.hrw.org/news/2011/12/16/sri-lanka-report-fails-advance-accountability

பெண்கள் உள்ளடங்கலாக அனைத்து மக்களினதும் அடையாளங்கள் மற்றும் உரிமைகளை அங்கீரிகரும், மதிக்கும் அமைதியான சமுதாயத்தை கட்டியெழுப்பவதில் யுத்தத்தின் பின்னரும், நாடு இன்றும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. சாதாரண மக்கள், மனித உரிமை காப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோத கொலைகள், காணாமல் போதல்கள், பலவந்தமான கைதுகள், சித்திரவதை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை போன்ற பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அறிக்கைகள் பல கடந்த காலத்தில் வெளியிடப்பட்டு உள்ளன. பாதுகாப்பு படையினர் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த துணை ஆயுத குழுக்கள் போன்றன இந்த மனித உரிமைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என அறிக்கையிடப்பட்டுள்ளது.[14] குற்ற விசாரணைகள் குறைந்த அளவில் இருப்பதுடன், அதற்கான தண்டனைகளும் மிகவும் குறைவானதாக உள்ளன. விசேடமாக, அரச அதிகாரிகள் குற்றம் சுமத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்த நிலையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தடுத்து வைத்தலுக்கு முன்னர் நீண்ட கால விசாரணை, நியாயமான விசாரணை மறுக்கப்படல், நீதித் துறையில் சுயாதீனத் தன்மை குறைவு, யுத்தம் சார்ந்த குற்றங்களுக்கு குறைந்தளவிலான நம்பகத்தன்மையான செயற்பாடுகள், சட்ட ஒழுங்கின் நிர்வாகப் பற்றாக்குறை, மற்றும் அரசியல் ஆர்வம் குறைவு ஆகியவற்றின் மூலம் நாட்டில் தண்டனை பயம் அற்ற ஒரு நிலை காணப்படுவதனை இது பிரதிபலிக்கின்றது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், கூட்டம் நடத்துவதற்கான சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான, நடமாடுவதற்கான சுதந்திரம் என்பன உள்ளடங்கலாக அடிப்படை மனித உரிமைகளில் கட்டுப்பாடுகள் உள்ளமையை அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.[15]

ஒட்டுமொத்தமாக, எதிர்ப்புக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மழுப்பலாக அல்லது மறுத்தலாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக 2011ஆம் ஆண்டு மற்றும் அதனைத் தொடர்ந்த உடனடியான காலப்பகுதியில், 2012ஆம் ஆண்டு

14 ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் (2011) மனித உரிமைகள் அறிக்கை, இலங்கை, (இணையத்தில்) கிடைக்குமிடம் http://www.state.gov/j/drl/rls/hrrpt/2011/sca/186475.htm (2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி பார்க்கப்பட்டது)

15 பார்க்க http://www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session22/A-HRC-22-38_en.pdf

மார்ச் மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை நடைபெற ஏற்பாடகியிருந்த நிலையில், இலங்கை மீதான ஐக்கிய அமெரிக்காவின் தீர்மானம் முன்வைக்கப்படவிருந்த சூழலில், இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ச்சியான அச்சுறுத்தலை எதிர்கொண்டதுடன், அவர்களது வாழ்க்கையும் இன்னல் நிறைந்ததாக மாறியது.[16] பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் "புலிகள்" (தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள்), பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் அல்லது துரோகிகள் என முத்திரை குத்தப்படும் நிலை காணப்பட்டது. இந்த பிரதிபலிப்புகள் மனித உரிமை ஆர்வலர்களின் செயற்பாடுகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தின. அரசாங்கத்தினால் "கூருணர்வு[17]" மிக்கதாக அறியப்பட்ட இந்த விடயங்கள் தொடர்பில் தமது செயற்பாடுகளை குறைத்துக் கொள்ளக் கூடிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது.

ஊடகவியலாளர்கள் தணிக்கைகளை எதிர்கொண்டதும், அடிக்கடி உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டதும் பெருமளவிலான மனித உரிமைகள் அக்கறைகளை தோற்றுவித்தன.[18.] தடுத்து வைத்தல் தொடர்பில் பார்க்கும் போது, பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் முறையான விசாரணைகள் எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலதிகமாக, இனக்குழு சார்ந்த தரவுகள் போதியளவில் இல்லை. அதிகாரிகளால் இந்த தகவல்கள் வழங்கப்படாத நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்களால் வேறுபட்ட கணிப்பீடுகளையே முன்வைக்கக் கூடியதாகவுள்ளது.

---

16 பார்க்க '2012ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி, சுனில அபேசேகர, நிமல்கா பெர்னாண்டோ மற்றும் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோரின் இணைந்த அறிக்கை, கொழும்பு, இலங்கை' இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.scribd.com/doc/86440203/joint-statement-sunila-abeysekara-nimalka-fernando-and-dr-paikiasothy-saravanamuttu

17 உதாரணமாக, மோதலுடன் சம்பந்தப்பட்ட அல்லது மோதலுக்குப் பின்னரான தமிழ் சிறுபான்மையினர் மீதான மனித உரிமை மீறல்கள் 'கூருணர்வு' மிக்க விடயங்களாக அரசாங்கத்தினால் கருதப்படுகின்றது.

18 அத தெரன (Truth First) மார்ச் 2012 (இணையத்தில்) http://www.adaderana.lk/news.php?nid=17473&mode=beauti (2012ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 25ஆம் திகதி பார்க்கப்பட்டது)

ஆயுதம் தாங்கிய பௌத்த பிக்குகளின் குழுவினால் தூண்டப்படும் தீவிரவாத மத சகிப்பற்ற தன்மை என்பதே வெறுப்புக்குரிய நிகழ்வாக உள்ளது[19]. முஸ்லீம்கள் மீதான சகிப்பற்ற தன்மையை பரவச் செய்வதற்கு டுவிட்டர் (Twitter) மற்றும் பேஸ்புக் (Facebook) போன்ற புதிய ஊடக வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த நிகழ்வுகள் தற்போது மக்கள் மனதில் கலவரத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளன. 2011ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் முஸ்லீம்களின் பிறப்பு வீதத்தில் துரித வளர்ச்சி காணப்படுவதாகவும், இதற்கான பிரதிபலிப்பாகவே இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சிலர் எதிர்வுகூறுகின்றனர். அவர்களுடைய செயற்பாடுகள் பெரும்பாலும் சிறுபான்மை குழுக்கள் மற்றும் மதங்களை இலக்கு வைத்ததாக முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், பெரும்பான்மை சிங்கள/பௌத்த பிரசாரங்களை பரப்புவதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆதரவை அவர்கள் அனுபவிக்கின்றனர். முஸ்லீம்களுக்கு எதிரான வெறுப்பு நிறைந்த பிரசாரங்களை பரப்பும் செயற்பாடாக, சிங்கள மக்கள் தொகையை அதிகரிக்கும் வகையில் சிங்கள ஆண்கள், ஐந்து பெண்களை மணக்கும் வகையில் இலங்கை சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.[20] அதிகரித்த எண்ணிக்கையில் சிங்களவர்களில் காணப்படும் இந்த அச்சுறுத்தும் மனநிலையின் காரணமாக, அனைத்து வகையான தன்னிச்சையான, நிரந்தரமற்ற குடும்பத் திட்டமிடல் முறைகள் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும், அவசியமான மருத்துவ தேவையல்லாத சந்தர்ப்பங்களில் தடுக்கும் உத்தரவு அரச வைத்தியசாலைகளுக்கு அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கருத்தடை, பாலியல் சுகாதாரம் மற்றும் குடும்பத் திட்டமிடல் போன்ற பிரிவுகளில் பணியாற்றி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு, அவற்றின் செயற்படும் பரப்பினை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறு அரசாங்கத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

19 மேலதிக தகவல்களுக்கு பார்க்க, http://groundviews.org/2013/01/15/bodu-bala-sena-and-buddhisms-militant-face-in-sri-lanka/ மற்றும் http://groundviews.org/2013/03/19/bodu-bala-sena-a-threat-to-sri-lankas-future/ மற்றும் http://www.lankastandard.com/2013/01/the-muslims-are-the-new-tamils/

20 மேலதிக தகவல்களுக்கு பார்க்க, http://dbsjeyaraj.com/dbsj/archives/15219

பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சட்ட ஆணைக்குழுவின் சுதந்திரமானது, அரசியலமைப்பின் 18ஆவது திருத்தத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தின் அடிப்படையில் குறித்த மக்கள் அமைப்புக்களின் நியமனங்கள் வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு சென்றடைந்துள்ளது. அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்திற்கு அமைய (மற்றும் சட்டத்தின் இரண்டாவது பிரிவு) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி நியமிக்கக் கூடிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2010ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 09ஆம் திகதி நடைமுறைக்கு வந்த அரசியலமைப்பின் 18ஆவது திருத்தத்தின் கீழ், பிரதமர், பாராளுமன்ற சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரால் பிரேரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மற்றும் எதிர்க்கட்சித் தலைவரினால் பிரேரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரை உள்ளடக்கிய பாராளுமன்ற குழு நியமனத்திற்கு வழிவகுத்தது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு தற்போது “பாராளுமன்ற குழுவின் அவதானிப்புக்களை (அனுமதியை அல்ல) ஜனாதிபதி பெறல் வேண்டும்”.

தண்டனைக்கு அஞ்சாத பொதுவான நிலையும், நீதியில் சுதந்திரத் தன்மை இன்மை என்பன காரணமாக LBT நபர்களும், பாலியல் அடிப்படையில் சிறுபான்மையினரும் இலகுவில் பாதிப்புக்கு இலக்காகக் கூடிய மற்றும் கட்புலனுக்கு உட்படாத பொதுவான நிலையை உருவாக்கியுள்ளன. ஏனைய பிரதிகூலங்கள் நிறைந்த குழுவில் இருந்து பாலியல் ரீதியாக துண்டிக்கப்பட்டவர்களாக இருந்த போதிலும், இலகுவில் பாதிக்கப்படக் கூடியத் தன்மையிலும், மறைந்திருக்கும் தன்மையிலும் ஒன்று கலந்தவர்களாக உள்ளனர். உதாரணமாக, தமிழ் மக்கள் மத்தியில் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு மற்றும் பால் மாற்றம் செய்யும் குழுக்கள் (டுபுடீவு) குறைவாகவே உள்ளன. சுருக்கமாக கூறுவதாயின், மனித உரிமைகள் பிரச்சினைகள் என்பது, சிக்கலான சூழ்நிலையை உருவாக்குவதுடன், தமது

உரிமைகளுக்காக பாலியல் ரீதியாக சிறுபான்மை குழுக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் மேலும் சிக்கலை ஏற்படுத்துகின்றன[21].

21 ஏனைய தெற்காசிய நாடுகளைப் போன்றே, இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளும், வேறு பொது மக்களும் ஒரே பால் உறவுகளை மேற்கத்தைய வாழ்க்கை முறை என்பதன் அடிப்படையிலும், தனியார் இடங்கள் உள்ளடங்கலாக இணக்கம் தெரிவிக்கும் பராயமானவர்களுக்கு இடையிலான பாலியல் நடவடிக்கைகளை தொடர்ச்சியான குற்றமானதாக நியாயப்படுத்தும் வகையில் அடிக்கடி மறுக்கின்றனர். உதாரணமாக, 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாவது ஆசிய பசுபிக் எய்ட்ஸ் சர்வதேச மாநாட்டினை (ICAAP) இலங்கை அரசாங்கம் நடத்தியது. இந்த நிகழ்வை நடத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்த நிலையில், பாலியல், பாலியல் சுகாதாரம் மற்றும் பாலியல் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான பல அமர்வுகள் இந்த நிகழ்வில் உள்ளடங்கியிருந்த நிலையில், மாநாட்டின் இறுதியில், மாநாட்டின் பங்குபற்றுனர்களுக்கு ஆணுறைகள் கிடைக்காமை தொடர்பான கேள்வியொன்று பிரதிநிதியினால் எழுப்பப்பட்ட போது, பதிலளித்த சுகாதார அமைச்சர், “பெண் ஓரினச் சேர்க்கை மற்றும் ஓரினச் சேர்க்கையை பிரசாரம் செய்வதற்காக நான் இவர்களை அழைத்து வந்துள்ளேன் என மக்கள் எண்ணுவதற்கு இடமளிக்க நான் விரும்பவில்லை. இலங்கையில் அழகிய பெண்களும், கட்டழகான ஆண்களும் உள்ளனர். தெற்காசியாவில் உள்ள மக்கள் ஒரே வாழ்க்கைத் துணையுடன் சிறந்த பாலியல் வாழ்க்கையை முன்னெடுக்கின்றனர். மேற்கத்தைய உலகமானது காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த போது, நாங்கள் நாகரிகமான வாழ்க்கையை முன்னெடுத்தவர்கள்” எனத் தெரிவித்தார். பார்க்க, பெர்னாண்டோ, எம். (2008) “நாடோடி குரல்கள்”, ஹிமால் தெற்காசியா, பகுதி 21 (3) (இணையத்தில்) கிடைக்குமிடம்: http://www.himalmag.com/Vagrant-voices_nw2138.html

# #06 அரசு சாரா செயற்பாட்டாளர்களினால் வன்முறை மற்றும் பாரபட்சம்

## அ. உணர்வு சார் வன்முறை[22]

இந்த கற்கைக்காக நேர்காணப்பட்ட அனைத்து LBT நபர்களும் தாம் உணர்வுசார் வன்முறையை எதிர்கொண்டதாக தெரிவித்தனர். அறிமுகப் பகுதியில் கூறியது போல, ஆதரவு முறையின் பற்றாக்குறை காரணமாகவே LBT நபர்கள் இந்த வன்முறையை எதிர்கொள்கின்றனர். திருமணமாகும் வரை தமது குடும்பத்தினருடன் வசிப்பதே இலங்கையர்களுக்கு பழக்கமாகவுள்ளமையால் (சில சந்தர்ப்பங்களில் திருமணத்தின் பின்னரும்), இந்த குடும்ப அமைப்புக்கள், ஏற்கனவே உணர்வுசார் வன்முறையை எதிர்கொள்ளும் LBT நபருக்கு மேலதிக அழுத்தத்தை வழங்கும். இதன் காரணமாக வேலைவாய்ப்பு அல்லது கல்வி என்பவற்றை காரணமாக கூறி பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள் மற்றும் பால் மாற்றம் அடைந்தவர்கள் வீட்டை விட்டு வெளியேறுவது பொதுவான விடயமாக உள்ளது (இது தொடர்பான மேலதிக

22 உணர்வுசார் வன்முறை எனப்படுவது: மனநல மற்றும் உளவியல் துஷ்பிரயோகங்களை உட்கொண்டு மாற்றங்களின் போது பயன்படுத்தப்பட்ட பதம். நேர்காணப்பட்டவர்கள் சிலர் அதனை வன்முறை என சொல்வதில் சௌகரியமாக உணர்ந்தனர். உணர்வு சார்ந்து/ உளவியல் சார்ந்து/மனநலம் சார்ந்து/ஆன்மீகம் சார்ந்து அனுபவித்த நடத்தைகள் மற்றும் செயற்பாடுகளே இந்த ஆய்வில் மிகவும் முக்கியமானவையாகும். இந்த ஆய்வில் உணர்வுசார் துஷ்பிரயோகத்தில் உள்ளடங்கும் செயற்பாடுகள் அல்லது நடத்தைகளாவன: வாய்மூல துஷ்பிரயோகம் (அலட்சியங்கள், நிந்தனைகள், சபித்தல், தாழ்த்தல்/தனிப்பட்ட ரீதியாக தூற்றும் கருத்துக்கள், சாதாரணமாக இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள்):, அச்சுறுத்தல் (தம்மை அல்லது ஏனையோருக்கு தீங்கு விளைவித்தல், தனித்து விடப்படல், வெளியேறல், தடுத்து வைக்கப்படல், ஏனையோருக்கு பாலியல் அடையாளத்தை வெளிப்படுத்தல், என்பன):, செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் (உதாரணமாக, குடும்பம்/நண்பர்கள்/உறவினர்களுடன் பழகுவதனை கட்டுப்படுத்தல்:, அந்தரங்கத்தை அபகரித்தல், தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடல்):, மௌனமாக விரோதித்தல் (உதாரணமாக, பகையை வெளிப்படுத்தும் வாய்மூலமற்ற நடத்தைகள், பால்நிலை அடையாளத்தையும், பாலியல் வெளிப்பாட்டையும் மறுத்தல் மற்றும்/அல்லது ஏற்றுக் கொள்ளாமை):, புறக்கணிப்பு (உதாரணமாக, நிதி உதவிகளை நிறுத்தல், மனித தொடர்பை மறுத்தல்).

தகவல்களுக்கு "செயற்றிறனான/செயற்பாட்டாளர்கள் பதில்கள்" பகுதியைப் பார்க்கவும்).

உணர்வுசார் வன்முறை ஏற்படுவதற்கு பல்வேறு தூண்டல் காரணிகள் உள்ளன. எவ்வாறாயினும், தனிநபர் ஒருவரின் பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் காணல் அல்லது தனிநபரின் உறவு குறித்த தகவல்கள் வெளியாதல் (நபர் ஒருவர் தமது பாலியல்பு அல்லது பால்நிலை அடையாளத்தை வெளிப்படுத்தல்) என்பவற்றின் காரணமாக பொதுவாக உணர்வு சார் வன்முறை ஏற்படலாம்.

சில சந்தர்ப்பங்களில், நேர்காணப்பட்டவர் பெண்ணாக இருப்பதால், குற்றமிழைத்தவர் குறித்த நபரின் பாலியல் அமைப்பு குறித்த அறிவுடையவராக இருந்துள்ளார்.

உணர்வு சார் வன்முறையை முன்னெடுப்பவர்கள் வேறுபட்டவர்களாவர். பெரும்பாலும், பதிலளித்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது பதிலளித்தவர்களின் துணையின் குடும்ப உறுப்பினர்களாக குற்றம் இழைப்பவர்கள் உள்ளனர். சில சம்பவங்களில், முன்னாள் துணை, தற்போதைய துணையின் முன்னாள் துணை, அல்லது சக ஊழியரால் வன்முறை முன்னெடுக்கப்பட்டுள்ளது. வெகுசில பதிலளித்தவர்கள் மூன்றாவது நபர்களினால் வன்முறை அல்லது வன்முறை அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

பலாத்காரம், அவமானம், அதிகாரம் மற்றும் கட்டுப்பாடு ஆகியன LBT தனிநபர்களின் அனுபவங்கள் உணர்வுசார் வன்முறையுடன் பொருந்தியவையாகும்.

அந்தரங்கத் தன்மையின் மீதான ஆதிக்கமாகவே இந்த வன்முறை பெரும்பாலும் அமைந்துள்ளது (3/4இற்கும் அதிகமானவர்கள் - பதிலளித்த 33 பேரில் 26 பேர்):, வாய்மூலமற்ற அல்லது மௌன நிந்தை மற்றும் விரோதம் (அரைப்பங்கிற்கும் அதிகம் - பதிலளித்தவர்களில் 19 பேரால் குறிப்பிடப்பட்டது):, மற்றும் உணர்வுசார் ஒடுக்குதல் (அரைப்பங்கிற்கும் அதிகம் - 18 பேரால் குறிப்பிடப்பட்டது).

தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் கடிதங்கள் கண்காணிக்கப்படல் போன்ற சமூகயமாதல் செயற்பாடுகளில் தடை:, அவர்களுடைய பாலியல்பு சந்தேகத்திற்கிடமான போது வீட்டிலிருந்து வெளியேறத் தடை:, வீட்டை விட்டு வெளியேறும் போது பெண்களை பாதுகாவலருடன் அனுப்புதல்:, தமது பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் காரணமாக வீட்டிற்குள் அடைத்து வைக்கப்படல் என்பவற்றை எதிர்கொண்டதாக அரைப்பங்கினருக்கும் அதிகமானோர் (பதிலளித்தவர்களில் 18 பேர்) தெரிவித்தனர். அண்ணளவாக மூன்றில் ஒரு பங்கினர் (13) தமது ஒரு பால் உறவை நிறுத்துமாறு வற்புறுத்தப்பட்டதாக தெரிவித்தனர். தமது பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பன மௌனமான விரோதத்தின் ஊடாக அல்லது மறைமுகமாக அல்லது இரண்டு வகையிலும் எதிர்கொள்ளப்பட்டதாக மூன்றில் இரண்டு பங்கினர் (13) கருதினர் (உதாரணமாக, அவர்கள் ஒரே அறையில் இருப்பவர்கள் போல் நடந்து கொள்ளாமல், தெரியாதவர் போல் நடந்து கொள்ளல்).

சகபாடிகளின், ஆசிரியர்களின், சக ஊழியர்களின், மேற்பார்வையாளர்களின், நண்பர்களின் மற்றும் அரச செயற்பாட்டாளர்களின் வேண்டுமென்ற உணர்வுசார் துஷ்பிரயோகத்திற்கு மேலதிகமாக, பேச்சு மூலம் தொல்லை கொடுத்தல் மற்றும் கிண்டலடித்தல் என்பவற்றையும் அதிகளவில் எதிர்கொள்வதாக நேர்காணப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

28 வயதான பெண் ஓரினச் சேர்க்கையாளரான DKS என்பவர், தமது பெண் துணையுடன் கொழும்பின் புறநகரில் வசித்து வருகின்றார். வணக்கஸ்தலத்தில் மற்றோர் துருவிப் பார்ப்பதை பற்றி தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். "நான் தேவாலயத்திற்கு சென்று, நின்று கொண்டு சிந்திப்பேன். உங்களுக்குத் தெரியுமா, இவர்கள் அனைவரும் என்னை வித்தியாசமாக பார்ப்பர். நாங்கள் ஓரினச் சேர்க்கையாளர் என்பதனை அல்லது நாங்கள் சாதாரணமானவர்களைப் போன்றவர்கள் அல்ல என்பதனை அவர்கள் அறிவர். நாங்கள் ஏன் இங்கு வருகின்றோம் என அவர்கள் நிச்சயமாக எண்ணுவர்" என அவர் தெரிவித்தார்.[23]

23 DKS உடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010ஆம் ஆண்டு செப்ரம்பர் 18.

தமது முந்தைய துணையின் பெற்றோர்களினால் தம் மீது ஏற்படுத்தப்பட்ட வாய் மூலமற்ற அலட்சியம் குறித்து நேர்காணப்பட்ட ஒருவர் தெரிவித்தார். கொழும்பில் வசிக்கும் 39 வயதான சாந்தனி என்பவர், பெண்மைத் தன்மை கொண்ட பெண் ஓரினச் சேர்க்கையாளராவார். தமது மகளின் வாழ்க்கையை "வீணடிப்பதாக" (அழிப்பதாக) கருதிய தமது முன்னாள் வாழ்க்கைத் துணையின் குடும்பம் குறித்து அவர் கதைத்தார். தன்னை அறியாதது போல் அவர்கள் நடந்து கொண்டனர் என அவர் பதிலளித்தார். "அது எனக்கு நிறையவே நிகழ்ந்துள்ளது. என்னை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் முழுமையாக எதிர்த்தனர். நான் அவர்களுடன் ஒரு உணவு விருந்திலும் கலந்து கொண்டிருக்கின்றேன்"[24]

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசித்து வரும், சிங்கள பௌத்தரான 21 வயதான தம்மி, தனது பாலியல் அமைப்பை குறிக்க எந்த பதத்தையும் பயன்படுத்த விரும்பவில்லை. அதற்குப் பதிலாக, இரண்டு குணங்களும் கொண்ட, "நடுவில்" இருப்பவர் என அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். தாம் பெண் ஓரினச் சேர்க்கையாளர் என்பதனை அறிந்து கொண்ட தமது சகோதரர் தம்மை எவ்வாறு உணர்வுசார்ந்து வன்முறை செய்தார் மற்றும் தம்மை பயமுறுத்தினார் என அவர் குறிப்பிட்டார். "என்னுடைய பெண் துணையுடன் நான் உறவைத் தொடர்ந்தால், தன்னிடம் கதைக்க மாட்டேன் என அவர் கூறினார். இது குறித்து பெற்றோரிடம் கூறுவதாகவும் அவர் என்னை பயறுமுறுத்தினார்" என தம்மி குறிப்பிட்டார்.[25]

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் தமது பெற்றோருடன் வாழும் 36 வயதான சாமிலா, தன்னை பெண் ஓரினச் சேர்க்கையாளராக அறிமுகப்படுத்திக் கொள்வதுடன், ஆண்மைத் தன்மையுடன் ஆடை அணிவதற்கு விருப்பம் கொண்டவராக உள்ளார். தமது பெண் ஓரினச் சேர்க்கை ஈர்ப்பு மற்றும் பால்நிலை உறுதி செய்து கொள்ள முடியாத நிலை என்பவற்றின் காரணமாக, தம்மை மனநல வைத்தியரிடம் தமது தாய் அழைத்துச் சென்ற சம்பவம் குறித்து அவர் எம்முடன் பகிர்ந்து கொண்டார். "எனது தலைவலிக்காக வைத்தியரிடம் அழைத்துச் செல்வதாக

24 சாந்தனியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010ஆம் ஆண்டு நவம்பர் 17.

25 தம்மியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை 2011 ஜனவரி 19.

அம்மா கூறினார். எனக்கு என்ன தலைவலி என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் அப்போது எதுவும் கூறவில்லை. அதன் பின்னரே என்னை மனநல வைத்தியரிடம் அழைத்துச் சென்றமையை அறிந்து கொண்டேன்.”[26]

### i. பேச்சுமூலமான துஷ்பிரயோகம்

தொடர்ச்சியான நிந்தனைகள், தாழ்த்தக் கூடிய கருத்துக்கள் மற்றும் வெறுப்பான பேச்சு என்பவற்றின் ஊடாக ஒருவரை சிறுமை செய்தல் மற்றும், தாழ்த்தும் விசேட வழிகளான பேச்சுமூலமான துஷ்பிரயோகம் என்பது அனைத்து வயதுப் பிரிவும் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாகும். குடும்ப உறுப்பினர்களில் இருந்து அயலவர்கள், முன்னாள் துணைவர்கள், தொழில் வழங்குனர்கள், மற்றும் சாத்தியமான வேலைவாய்ப்பு வழங்குவோர் வரை பேச்சுமூலமான துஷ்பிரயோகத்தை முன்னெடுப்பவர்களாக உள்ளனர்.

47 வயதான குமா, கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசிக்கின்றார். தம்மை பெண் ஓரினச் சேர்க்கையாளர் எனக் கூறும் அவர், ஆண்களின் ஆடைகளை விரும்பி அணிகிறார். தாம் ஒரு ஆண் போல் நடந்து கொள்வதால் ஏற்படும் வாய்மூல நிந்தனைகள் குறித்து அவர் கதைத்தார். “ஒரு முறை பெட்டாவில், ஒரு பெண் நண்பியுடன், கூட்டத்தில் தவற விடக் கூடாது என கை பிடித்து பற்றியவாறு நடந்து சென்றேன். அப்போது ஒரு நபர், தன்னுடை நண்பனை விளித்து” மச்சான்[27], நீண்ட நாளாக நான் ஆப்ப[28] சாப்பிடவில்லை. இன்று கிடைக்கும் என நினைக்கிறேன் என கூறினார் ”என குமா தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். [29]

தானும், தன்னுடைய காதலியும் அயலவர்கள் சிலரால் வாய்மூல துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவம் ஒன்றை சாந்தனியும் பகிர்ந்து கொண்டார். “நான் இந்த பெண்ணுடன் உறவில் இருக்கின்றேன். ஒருநாள் அவர் வீட்டுக்குச் சென்றேன்.

26 சாமிலாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஆகஸ்ட் 8.
27 மச்சாங் - நண்பர்/தோழர்/சகாவை அழைப்பதற்கான பேச்சுவழி சிங்களம்
28 ஆப்ப - பெண் ஓரினச் சேர்க்கையாளர்களை குறிப்பதாக பயன்படுத்தப்படும் கொச்சையான சிங்கள பதம். காலை உணவு அல்லது இரவுணவுக்கு பயன்படுத்தப்படும் கோப்பை வடிவிலான அரிசி மாவினால் செய்யப்படும் உணவு வகை.
29 குமாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 மே 10.

அப்போது இரவு வெகுநேரமாகிவிட்டது. பதினொன்று அல்லது பன்னிரண்டு (நள்ளிரவு) மணி இருக்கும். நாம் அவருடைய வீட்டிற்குள் சென்றோம். நாம் வீட்டு கேட்டினை மூடியதும், வீதியின் முனையில் இருந்து ஓடி வந்த சிலர் கேட்டினை வேகமாகத் தட்டியவாறு -ஆப்ப, ஆப்ப என்று எம்மை நோக்கி சத்தமிட்டனர்"[30]

பால்நிலை வெளிப்பாட்டின் காரணமான தமது பாலியல் அமைப்பினால் தம்மை "சுகவீனம்" உற்றவர்களாகவும், "குணப்படுத்த வேண்டியர்வகள்" எனவும் அவதானிக்கப்படுவதாக, இந்த செயற்றிட்டத்திற்காக நேர்காணப்பட்ட சிலர் தெரிவித்தனர்.

34 வயதான ஸ்கின்னர் கொழும்பில் வசிக்கின்றார். எடுத்துக்காட்டாக, உயிரியல் ரீதியாக பெண்ணான அவர், தமது பாலியல் அமைப்பை இரண்டு சொற்களில் "உறுதியான பையன்" எனத் தெரிவிக்கின்றார். "யாரேனும் என்னை வித்தியாசமாக பார்த்துவிட்டால், அவர்கள் எந்த பெயரில் அழைப்பார்கள் என உங்களுக்குத் தெரியும். என்னை "பொன்னயா"[31] என்பர் அல்லது இது ஆணா அல்லது பெண்ணா எனத் தெரியவில்லை என்பர்"[32] எனத் தெரிவித்தார். அவரது அம்மா அவரை பலவந்தமாக மத குருவிடம் அழைத்துச் சென்றுள்ளார். "இலங்கையில் உள்ள பௌத்தர்கள் 90 வீதம் இந்துக்களாகும். அவர்கள் அனைவரும் இந்த இடத்திற்குச் செல்வர். அதிர்ஷ்டத்தை கணிப்பவர்கள் மற்றும் ஜோசியம் பார்ப்பவர்கள் பற்றி நீங்கள் அறிவீர்கள். அதே இடத்தில் மூலிகை மருந்து வழங்கும் இடங்களும் உள்ளன. கடந்த மாதமும் நான் அந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன்."[33]

இறுதியாக, தமது சம்மதம் இன்றியே, தமது பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பது நண்பர்கள், குடும்பங்கள், பொதுமக்கள் (எ.கா, ஊடகம் வழியாக), கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த வேறு மாணவர்கள், சக ஊழியர்கள், மற்றும் அனாமேதய நபர்கள் போன்றோருக்கு

30 சாந்தனியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 நவம்பர் 10.

31 பெண்மை குணமிகுந்த ஆண் ஒருவரை குறிப்பதற்கு பயன்படும் கொச்சையான சிங்கள பதம்.
32 ஸ்கின்னருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஒக்டோபர் 7.
33 ஸ்கின்னருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஒக்டோபர் 7.

தெரிவித்தமையினால், வேலைவாய்ப்பு, குடும்ப உதவி, வீடமைப்பு மற்றும் மேலும் பல உதவிகளை பெற முடியாத பலவீனமான நிலை ஏற்பட்டதாக நேர்காணப்பட்டவர்களில் பதினான்கு பேர் தெரிவித்தனர்.

தமக்கு தீங்கு ஏற்படுத்தல் அல்லது தமது அன்புக்குரியவருக்கு தீங்கு ஏற்படுத்தல் என வாய்மூல அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக நேர்காணப்பட்டவர்களில் 21 பேர் தெரிவித்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு இந்த வாய்மூல அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. வாய்மூல அச்சுறுத்தலுடன் அறைதல் மற்றும் குத்துதல் போன்ற உடல்சார் வன்முறைகளை எதிர்கொண்டதாக 15 பேர் தெரிவித்தனர்.

29 வயதான அனு, இரட்டைப் பாலுறவில் உள்ள தமிழ் பெண்ணாகும். "(எனது) நண்பர்களை மலடாக்கி விடுவதாக தெரிவிப்பர். ஹொக்கி மட்டைகளால் அடிப்பதாகவும், எமக்கு தீ வைப்பதாகவும், போன்ற வகையான வன்முறைகள் செய்வதாக கூறுவர்" என தாம் எதிர்கொண்ட அச்சுறுத்தல்களை பகிர்ந்து கொண்டார்.[34]

தமது காதலியின் பெற்றோர் தம்மை பார்த்ததோ அல்லது தம்மிடம் எதுவும் நேரடியாக கூறியதோ இல்லை என சாமிலா தெரிவித்தார். "ஆனால் என்னை சந்தித்தால் அடிப்பதாக என்னுடைய காதலியிடம் கூறியுள்ளனர்" என அவர் குறிப்பிட்டார்.

1999ஆம் ஆண்டு ஜூலை மாதம், பெண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கான மாநாடு ஒன்றை நடத்துவதற்கான உத்தேசம் குறித்து பெண்கள் ஆதரவு குழு அறிவித்த போது, அதற்கு கடுமையான பொது மக்கள் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. த ஐலன்ட் எனப்படும் ஆங்கில மொழி பத்திரிகையின் ஆசிரியருக்கு முகவரியிடப்பட்டதாக இதற்கான எதிர்ப்பு ஒன்று வெளியாகியிருந்தது. குற்றம் சுமத்தப்பட்ட பாலியல் வல்லுறவாளர்களால் மாநாட்டில் கலந்து கொள்ளும் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ய வேண்டும் என

34 அனுவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 மே 13.

பரிந்து பேசப்பட்டது. இது குறித்து பத்திரிகைக்கு எதிராக முறைப்பாடு செய்த போது, பெண் ஓரினச் சேர்க்கை என்பதனை "மற்றவர்களை கொடுமைப்படுத்துவதில் மகிழ்ச்சி கொள்ளும் செயல் மற்றும் காமச்செயல்" என வர்ணித்து கண்டித்ததுடன், குறித்த பத்திரிகைக்கு ஆதரவாக இலங்கை பத்திரிகை பேரவை கருத்து வெளியிட்டது.[35]

### ii. கலாசார விழுமியம்/பால்நிலை விழுமிய அமுலாக்கல் வன்முறை

கலாசார ரீதியாக எதிர்பார்க்கப்படும் பால்நிலை விழுமியங்களின் அடிப்படையில் செயற்படுதல் மற்றும் வாழ்தல் தொடர்பில் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் பால் மாற்றம் செய்த நபர்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான அழுத்தங்களை நேர்காணப்பட்ட 33 பேரில் 12 பேர் சுட்டிக்காட்டினர். திருமணத்திற்கு கட்டாயப்படுத்தப்படல், குறிப்பிட்ட ஆடைகளை அணிவதற்கு பணித்தல் மற்றும் குறிப்பிட்ட சிகை அலங்காரத்தை பேணல், போன்ற அனைத்து வகையிலும் உளவியல் மற்றும் உணர்வுசார் வன்முறையை அவர்கள் எதிர்கொள்கின்றனர். கலாசார மற்றும் பால்நிலை விழுமிய அமுலாக்கல் என்பதனையும், நேர்காணப்பட்டவர்கள் வன்முறையாக கருதுகின்றனர். பொது மலசல கூடங்களை பயன்படுத்தும் போது அவர்களது பால்நிலை அடையாளம் குறித்தும் அவர்களிடம் வினவப்பட்டது. அதேவேளை, நேர்காணப்பட்டவர்களில் சிலர் தமது உணர்வை கட்டாயப்படுத்தி இரகசியமாக மறைத்துக் கொண்டு, குடும்ப கௌரவத்தை காக்கும் பொருட்டு தமது "ஓரினச் சேர்க்கை" தன்மையை மறைத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர். தமது பால்நிலை வெளிப்பாட்டின் காரணமாக தொழில் வாய்ப்பு மற்றும் பதவி உயர்வு மறுக்கப்பட்டமை தொடர்பிலும் நேர்காணப்பட்டவர்களில் சிலர் தெரிவித்தனர். - "போதியளவு பெண்மைத் தன்மையாக இல்லை"- அத்துடன், தேசிய அடையாள அட்டை தோற்றத்துடன் அவர்கள் பொருத்தமாக இல்லை என்பதனாலும் வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர்.

35 பெர்னாண்டோ. எம்.. (2008) 'Vagrantvoices', HimalSouthAsia, Vol, 21 (3), [இணையம்] .கிடைக்குமிடம்: http://himalmag.com/component/content/article/1010-vagrant-voices.html (பெப்ரவரி 2013 பார்க்கப்பட்டது).

## ஆ. உடல்சார் வன்முறை

மிகவும் முக்கியமான முடிவு ஒன்றினை நேர்காணல் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. குறிப்பாக குடும்ப மற்றும் வீட்டுச் சூழல் ஆகியன இரண்டு பிரதான (சம்பந்தப்பட்ட) காரணிகளாக அமைந்தன. தமக்கு எதிரான உடல்சார் வன்முறையை LBT மக்கள் எவ்வாறு பார்க்கின்றனர் என்பதனை முதலாவது நிர்ணயிக்கின்றது. அத்துடன், இரண்டாவது காரணியாக அவர்கள் வன்முறையை அறிக்கைப்படுத்துகின்றார்களா அல்லது இல்லையா என்பதாகும். (வன்முறையை அறிக்கைப்படுத்தல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு, நிவாரணத்திற்கான அணுகும் வசதி என்ற பகுதி 6 பார்க்கவும்).

தற்போது தமது வாழ்வில் எதிர்கொண்டு வரும் உடல்சார் வன்முறை தொடர்பில் நேர்காணப்பட்ட 33 பேரில் 12 பேர் தெரிவித்தனர்.[36] நேர்காணப்பட்ட 33 பேரில் 26 பேர் தாக்குதல் குறித்த கதைகளை பகிர்ந்து கொண்டனர். இந்த 26 பேரில் 12 பேர் குறைந்தபட்ச வன்முறை நிகழ்வுகளையும், 14 பேர் தீவிரமான வகையில் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர்.

நெருக்கமான குடும்ப உறுப்பினர்கள், மூன்றாம் நபர்கள், சகபாடிகள், வாழ்க்கைத் துணை, முன்னாள் வாழ்க்கைத் துணை, மற்றும் அயலவர்கள் ஆகியோர் குற்றம் இழைப்பவர்களில் உள்ளடங்குகின்றனர். குறிப்பாக, அறிக்கைப்படுத்தப்பட்ட இவ்வாறான 12 சம்பவங்கள் வாழ்க்கைத் துணையினால் முன்னெடுக்கப்பட்டதாகும்.

தமது காதலியுடன் இரவு விடுதி ஒன்றில் நடனமாடிய போது ஏற்பட்ட சம்பவம் ஒன்றை DKS பகிர்ந்து கொள்கின்றார். “நாம் அங்கு நடனமாடும் போது பொது மக்கள் எம்மை அவதானிப்பர் என நீங்கள் அறிவீர்கள்” அப்போது ஒருவர் வந்து எனது காலை மிதித்தார் அல்லது எனது தோளை உரசினார். நான் நினைக்கிறேன், அவர் அதனை வேண்டுமென்றே செய்தார். ஆண்

36 நேர்காணல்களின் போது, தற்போது வன்முறையை அனுபவிக்கும் ஏதேனும் நேர்காணப்படுபவர்கள் இருப்பின் அல்லது நேர்காணலின் பின்னர் மன அழுத்தம் நிறைந்த உணர்வை உணரும் எவரும் இருப்பின், நேர்காணப்பட்டவர்களை சந்திப்பதற்கு இயலக் கூடிய சிகிச்சை வழங்குனர்களின் பெயர் மற்றும் தொடர்பு இலக்கத்தை வழங்குமாறு நேர்காணலை முன்னெடுக்கும் ஆய்வாளர்களுக்கு WSGஇனால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஒருவரைப் போல் தோற்றமளிக்கும் ஒரு பெண்ணுடன் நான் நடனமாடியதைக் கண்டு அவர் மகிழ்வடைந்திருக்க வேண்டும் என நான் நினைக்கின்றேன். அவர் என்னுடன் சண்டையிட முயற்சித்தார் என நான் நினைக்கின்றேன். ஏனெனில், நானும், எனது வாழ்க்கைத் துணையும் ஓரினச் சேர்க்கையாளர் போல காட்சியளித்தமையினாலாகும்."[37]

34 வயதான சான்ரா தம்மை ஒரு பெண் ஓரினச் சேர்க்கையாளர்/ dyke என அடையாளப்படுத்துவதுடன், ஆண் தன்மை கொண்ட பெண் என வர்ணிக்கின்றார். இரவு விடுதியொன்றில் பெண் ஒருவருடன் நெருக்கமாக நடனமாடியதைக் கண்ட குழுவினர், அந்த விடுதியின் கார் தரிப்பிடத்தில் வைத்து தம்மை தாக்கிய சம்பவம் தொடர்பில் அவர் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:,

> எனக்கு நினைவில் இருக்கின்து. இருவர் என்னுடைய தோள்களைப் பற்றிக் கொண்டனர். பின்புறமாக என்னை சுவரில் வைத்து தள்ளினர். என்னுடைய வயிற்றில் அடித்தனர். எனக்கு கோபம் ஏற்பட்டு ஒருவருடைய முகத்தில் அடித்ததாக எனக்கு நினைவு. அந்த நபரின் உதடு கிழிந்து விட்டது. அதன் பின்னரே அவர்கள் என்னை விட்டுச் செல்ல வழியேற்படுத்தியது. வாவ், உங்களுக்குத் தெரியுமா, அவள் கீழ்படியப் போவதில்லை என்றனர். நான் திரும்ப போராடாமல் இருக்கப் போவதில்லை என்பதனை அறிந்த அவர்கள் ஓடிச் சென்றனர். நான் முச்சக்கர வண்டியில் ஏறிச் சென்றேன்.

தாம் ஒரு பெண் ஓரினச் சேர்க்கையாளர் என்பதனை கண்டறிந்த பின்னர், 25 வயதாக இருக்கும் போது தமது தந்தையார் தன்னை எவ்வாறு தாக்கினர் என்ற அனுபவத்தை சாமிலா பகிர்ந்து கொண்டார்.

37 னுமுளுஉடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 செப்ரம்பர் 18.

## இ. பாலியல் வன்முறை

நேர்காணப்பட்ட 33 பேரில் 18 பேர் ஏதோவொரு வகையில் பாலியல் வன்முறையை எதிர்கொண்டுள்ளனர் என நேர்காணல் தரவுகள் தெரிவிக்கின்றன. பாலியல் வல்லுறவு என்பதிலிருந்து பாலியல் தாக்குதல் வரை பாலியல் வன்முறையில் உள்ளடங்குகின்றன. குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், தொழில் வழங்குனர்கள் அல்லது சிரேஷ்ட அதிகாரிகள், தெரியாத நபர்கள் மற்றும் சக ஊழியர்கள் என்போரே இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாக உள்ளனர்.

தமது உடல் தொடர்பில் பாதுகாப்பற்ற நிலையை உணரச் செய்யும் செயலாக பாலியல் வல்லுறவு அச்சுறுத்தல் அமைகின்றது. அவர்களுடைய அடிப்படையான உடல், உள தன்மானம் என்பவற்றுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக, 39 வயதான, பெண் ஓரினச் சேர்க்கையாளராக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் ரோஷ்மி கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசிக்கின்றார். அவரும், அவரது வாழ்க்கைத் துணையும் வடமத்திய மாகாணத்தில் வசிக்கும் போது, அவர்கள் இருவரும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பதனை கண்டறிந்து, "எம்முடன் நட்புடன் இருந்த அயலவர்களும் பலாத்காரமாக வல்லுறவு செய்வதாக மிரட்டினர்."[38] இந்த அச்சுறுத்தல் நடவடிக்கையாக முன்னெடுக்கப்படாத போதிலும், ரோஷ்மியும், அவரது காதலியும் தொடர்ச்சியான அச்சத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வந்துள்ளனர். இறுதியாக அவர்கள் பாதுகாப்பு கருதி கொழும்புக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

பெண் ஒருவரின் ஆண் காதலன் ஒருவர், குறித்த பெண்ணின் கடந்த கால பெண் ஓரினச் சேர்க்கை அனுபவங்களை காரணமாக காட்டி பலமுறை பலவந்தமாக வல்லுறவில் ஈடுபட்டுள்ளார். 28 வயதான கிறிஸ்டி (பெண் தன்மையான பால்நிலை வெளிபாட்டினைக் கொண்ட இரட்டைப்பாலுறவு கொண்டவர் என தன்னை அடையாளப்படுத்துகின்றார்) என்பவர், தமது ஆண் நண்பர் எவ்வாறு தம்மை கட்டாயப்படுத்தி உடலுறவில் ஈடுபட்டார் என்பதனை விபரிக்கின்றார்.

38 ரோஷ்மியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2012 ஜனவரி 6.

> "அவருக்கு 24/7 உடலுறவு தேவை. அவர் என்னை பாலியல் வல்லுறவு செய்கின்றார் என்ற உணர்வை நான் அறிந்தேன். அவருடன் உடலுறவு கொள்வதற்கு என்னை வற்புறுத்தினார். நான் முடியாது என்று கூறினால், உங்களுக்குத் தெரியுமா என்னை பலவந்தப்படுத்தி விட்டு ஏன் எனக் கேட்பார். நான் மறுத்தால், "நீ இப்போது என்னை விரும்பவில்லை", "நீ இப்போது என்னை காதலிக்கவில்லை" என்ற காரணங்களை கூறுவார், "எனக்கு உடலுறவு தேவை" என கூறுவார். நான் என்னுடைய பெண் காதலியுடன் இருப்பது போன்று எண்ணிக் கொள்ளுமாறும் அவர் கூறுவார். நான் உங்களுடன் உடலுறவு கொள்வேன். அதனை அவர் பார்க்க முடியும். அல்லது அது போன்ற விடயங்களைக் கூறுவார்"[39]

திருமணத்திற்குப் பின்னரான பாலியல் வல்லுறவை குற்றவியல் தடைகளில் இருந்து இலங்கைச் சட்டம் விலக்கியுள்ளது. மூன்றாமவரால் முன்னெடுக்கப்படும் பாலியல் வல்லுறவை விட, நெருக்கமானவரால் முன்னெடுக்கப்படும் பாலியல் வல்லுறவு என்பது பாரதூரம் குறைந்ததாக கருதப்படுகின்றது.

இந்த நிலையில், கடந்த காலத்தில் பெண்களுடனான உடலுறவு கொள்ளும் கிறிஸ்டி சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகின்றார். இரண்டு பெண்களை ஒன்றாக வைத்து ஆபாசமான கற்பனைகளைக் கொண்ட ஆண் மனப்பாங்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார். உடல்சார் வன்முறையைப் போன்றே, இதனையும் மறந்து விட முடியாது. ஆண் ஆதிக்க வேற்றுப் பாலினச் சேர்க்கை கருத்தியல் அவர் மீது சுமத்தப்படுவதாக அறியலாம். கிறிஸ்டியின் அனுபவங்களை பயன்படுத்தி, தமது ஆசைகளையும், தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என அவர் கருதுகின்றார்.

39 கிறிஸ்டியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 பெப்ரவரி 16.

H என்பவர் 23 வயதான பெண் ஓரினச் சேர்க்கையாளர் ஆவார். தமது பால்நிலை ஆண் தன்மை வாய்ந்தது என அவர் குறிப்பிடுகின்றார். இரவு விடுதியொன்றில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது தேவையற்ற பாலியல் தொடுகை குறித்த சம்பவத்தை அவர் பகிர்ந்து கொண்டார்.

> இரவு விடுதியொன்றில் (Amuseum) கொண்டாட்டத்தினை முடித்துக் கொண்டு முச்சக்கர வண்டியில் நான் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். முச்சக்கர வண்டியின் சாரதி என்னுடன் கதைக்க ஆரம்பித்தார்.[40] நான் ஒரு ஆணைப் போன்ற தோற்றம் கொண்டுள்ளமையால் பொதுவாக எதுவும் நேராது. எனினும், இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு பெண் என்பதனை இந்த சாரதி கண்டறிந்து கொண்டார் (அறிந்திருக்கலாம்). ஆனால், நான் பெண்ணை போல தோற்றம் அளிக்கவில்லை என்பதனை உறுதி செய்கின்றேன். அவர் அச்சமூட்டும் வகையில் நடந்து கொண்டார். நான் அவருக்கு ஐநூறு ரூபாய் வழங்கினேன். என்னுடைய வீடு இரவு விடுதிக்கு அருகில் உள்ளது. நடந்து செல்லும் தூரம் தான்.[41] எனவே, நூறு ரூபாய் அல்லது அதற்கு சமமான அளவே சென்றிருக்கும். சில வேளை நான் ஆண் ஓரினச் சேர்க்கையாளர் என அவர் கருதியிருக்கலாம். “மல்லி கடட்ட கன்னவாத, எதக்கொட தென்னம் (தம்பி வாய்க்கு எடுக்கிறாயா, அப்போது தருகிறேன்)” எனக் கேட்டார். நான் அச்சத்துடன், “பன்சிய அரங் யன்ன (ஐநூறு ரூபாயை எடுத்துக் கொண்டு செல்)” எனக் கூறினேன். அவர் என் கைகளைப் பிடித்து இழுத்தார். நான் கைகளை விடுவித்துக் கொண்டு ஓடிவிட்டேன்.[42]

40 கொழும்பில் உள்ள பிரபல இரவு விடுதி

41 அண்ணளவாக 5 அமெரிக்க டொலர்களுக்கு சமமாகும்.

42 ர்உடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 பெப்ரவரி 12.

ஆண் அல்லது பெண் என்ற பால்நிலை வகைகளில் சாதாரணமாக பொருந்தாதவர்கள் எதிர்கொள்ளும் வன்முறையில் இலகுவில் பாதிக்கப்படும் தன்மையை இந்த சம்பவம் விளக்குகின்றது. அவருடைய நிலைகுலைந்த பால்நிலை தோற்றத்தினைத் தவிர, தாம் இன்னொருவராக உணருதல் என்ற நிலையானது - பொதுவாக ஆண் என்ற நிலையானது எச் என்பவரது பாதுகாப்பு சார்ந்த உணர்வினால் ஏற்பட்டதாகும் எச் என்பவரின் பால்நிலை அடையாளத்தின் உறுதியற்ற தன்மை என்பதன் அடிப்படையில், உண்மையாக அவரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கான நிகழ்வாக இந்த சம்பவம் உள்ளது. டுக் டுக் சாரதியின் உண்மையான நோக்கம் என்பது தெளிவற்றது (அது முழுமையாக வர்த்தகம் சார்ந்ததா அல்லது பாலியல் சார்ந்ததா அல்லது இரண்டு சார்ந்ததா). ஆனால், அவரது நடத்தையானது சந்தர்ப்பம் சார்ந்தது என்பது தெளிவானது. “ஆண்” மற்றும் “பெண்” எனும் வகுப்பாக்கங்களை உறுதி செய்வதற்கான விழுமியம் என்பது சமூகச் சூழ்நிலையில் பால்நிலை தெளிவின்மையை துஷ்பிரயோகத்திற்கு துணையாக கொள்ள பயன்படுகின்றது என்பதனை இந்த நிகழ்வு விளக்குகின்றது. தமது பால்நிலை என்ன என்பதனை அறிந்து வைத்துள்ளவர்கள் தம் மீதான சுரண்டல் குறித்த பாதிக்கப்படும் தன்மையை நன்கு அறிந்து வைத்திருப்பர். தஞ்சம் அடைதல் என்ற நிலை சார்ந்ததாக அது இருக்கின்றது என்பதே உண்மையாக இருப்பினும், தப்பிச் செல்வதற்கான சந்தர்ப்பம் அதில் உள்ளது.

கொழும்பு புறநகர் பகுதியில் வாழும் 32 வயதான, பெண் ஓரினச் சேர்க்கையாளரான இந்திராணியும் இதே போன்ற அனுபவத்தை எதிர்கொண்டார். ஆண் தன்மை அன்றியும் பெண் தன்மை என இரண்டு அற்ற “இடைப்பட்டவர்” என தமது பால்நிலை அடையாளத்தை இந்திராணி விளக்குகின்றார். தமது பால்நிலை அடையாளத்தை உறுதிப்படுத்த இயலாமையால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான சம்பவம் ஒன்றை அவர் பகிர்ந்து கொண்டார்.

இந்திராணி: ஒருநாள் ஆண் ஒருவர் வந்து என்னுடைய மார்பகங்களை கசக்கினார். நாம் ஒரு கார்னிவலுக்குச் சென்றிருந்தோம். சில ஆண்கள் தூரத்தில் இருந்து எம்மை பார்த்து கேலி செய்து கொண்டிருந்தனர். நாம் அங்கு நிறைய நண்பர்கள் இருந்தோம் (இது நிகழ்ந்த போது). ஆனால் நான் திரும்பிப் பார்த்த போது யார் புரிந்தது என்பதனை என்னால் கண்டறிய முடியவில்லை. நாம் கூட்டத்தின் நடுவில் இருந்தோம்.

நேர்கண்டவர்: நீங்கள் தோற்றத்தில் வித்தியாசமாக இருப்பதனால்தான் இது நிகழ்ந்தது என நினைக்கின்றீர்களா?

இந்திராணி : ஆம்! அவர்களால் எம்மை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாம் ஷூக்கள் மற்றும் ஜீன்ஸ் அணிந்திருப்போம். நாம் சிகரெட் புகைப்போம்.[43]

எச் என்பவரின் சம்பவத்தினைப் போன்று, இந்திராணியும் தமது பால்நிலை அடையாளத்தை பெண் தன்மை கொண்டவர் அன்றியும் ஆண் தன்மை கொண்டவர் என்பதனை வெளிப்படுத்த இயலாமையின் காரணமாகவே பாலியல் பலாத்காரத்தை எதிர்கொண்டுள்ளார். அவரது பால்நிலை அடையாளத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பதிலும் பார்க்க, அவர்களை கூர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதனை புரியச் செய்வதற்காகவே வெளிநபர்கள் அவரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

## ஈ. நெருக்கமான துணையின் வன்முறை

உணர்வுசார், உடல்சார் மற்றும் பாலியல்சார் வன்முறையாக நெருக்கமான வாழ்க்கைத் துணையின் வன்முறை (ஜீஏ) அமைகின்றது. இலங்கையில் ஓரினச் சேர்க்கை மற்றும் பால் மாற்றம் தொடர்பில் களங்கம் காணப்படுகின்ற நிலையில், LBT உறவில் நெருக்கமான வாழ்க்கைத் துணையின் வன்முறை

43 இந்திராணியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 28 ஏப்ரல் 2011.

என்பது ஒழிப்பதற்கு மிகவும் கடினமானதாகும்: ஒருவரின் வாழ்க்கைத் துணை என்பது துஷ்பிரயோகம் மிக்கதாக மாறும் போது, உதவிப் பெறுவது என்பது சிக்கலானதாகிவிடும்.

ஒரு இரட்டைப் பாலுறவு மிக்கவராக இருக்கும் போது, எதிர்ப்பாலைச் சேர்ந்த பங்காளரால், குறித்த நபரின் முந்தைய ஓரினச் சேர்க்கை அனுபவங்கள், அவருக்கு எதிராக பயன்படுத்தப்படலாம். நேர்காணப்பட்ட 33 பேரில் 26 பேர், தமது நெருக்கமான வாழ்க்கைத் துணையினால் உடல்சார் வன்முறைக்கு உள்ளானதாக தெரிவித்தனர். இந்த 26 பேரில் 11 பேர் தமது நெருக்கத்துக்குரிய வாழ்க்கைத் துணையினால் உணர்வுசார், உடல்சார் மற்றும்/அல்லது பாலியல் சார் வன்முறையை எதிர்கொண்டவர்கள்.

சிலருக்கு, நெருக்கமான துணையின் வன்முறை என்பது ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே நிகழ்ந்துள்ளது. அதன் பின்னர் குறித்த தனிநபர் விலகி வரக் கூடியதாகவிருந்துள்ளது. தம்மை பெண் ஓரினச் சேர்க்கையாளர் என விவரிக்கும் 36 வயதான சச்சினி கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசிக்கின்றார். தமது ஒரேபாலைச் சேர்ந்த பாலுறவு காதலியிடம் இருந்து பிரிந்து சென்றமையானது, எவ்வாறு அவர் உடல்சார் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, அறை ஒன்றில் பல மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்படும் நிலை தோன்றியது என்பது குறித்த அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

“ நான் ஒரு அறையில் இருந்தேன். அவர் உள்ளே வந்து கதவை மூடினார். அப்போது என்னால் வெளியில் செல்ல முடியாது. ஏனெனில், நான் அவருடன் கதைப்பதில்லை. என்னால் வெளியில் செல்ல முடியாத வகையில் அவர் அறைக் கதவை மூடினார். அவர் என்னை கட்டிலில் பிடித்து தள்ளினார். அவர் இயல்பு நிலையில் இருக்கவில்லை. அவர் குடித்திருந்தார் என நான் நினைக்கின்றேன். எனவே, நாளை காலையில் கதைக்கலாம் என அவருக்குத் தெரிவித்தேன். ஆனால், அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.[44] ”

44 சச்சினியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஏப்ரல் 4.

ஏனையோருக்கு வன்முறை என்பது தொடர்ச்சியானதாகும். உதாரணமாக, மூன்று வருட உறவுமுறையில் தாம் எதிர்கொண்ட உடல்சார் மற்றும் உணர்வுசார் உரிமை தொடர்பில் சன்ரா அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

அவருக்கு (பெண் தோழி) பிரதானமாக என் மீது மிகவும் அதிக ஆசை. அத்துடன், அவர் உரிமை கொண்டாடும் உணர்வு அதிகம். நான் எவரையும் பார்ப்பதனை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. யாரும் என்னைப் பார்த்தால் என்னை அடிப்பார். வீட்டில் அல்லது பணியில் மோசமான நாளாக இருப்பின், வீட்டிற்கு வருவதற்கு நான் ஐந்து நிமிடங்கள் தாமதித்தால், அவர் என்னை குற்றம் கூறுவர். கூச்சலிடுவார். வன்முறை மிக்கவராக மாறிவிடுவார். என் மீது பொருட்களை விட்டெறிவார். நகத்தால் என்னை கீறுவார். என்னை கடிப்பார். அவருடைய தலை என் மூக்கில் பட்டு உடைந்தது. எனினும், நான் அந்த உறவில் மூன்றரை வருடங்கள் இருந்தேன்.[45]

ஏனையோருக்கு, துஷ்பிரயோகம் செய்பவரின் தொடர்ச்சியான போதைப் பொருளின் காரணமாக வன்முறை ஏற்படலாம். கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசிக்கும் 59 வயதான கமலா என்ற பெண், வேற்றுப் பாலுறவில் இருந்து, பெண் ஓரினச் சேர்க்கைக்கு மாறியதாக தமது பாலியல் அமைப்பை விளக்குகின்றார். தமது இரண்டாவது உறவு குறித்து அவர் கதைத்தார். "துஷ்பிரயோகம் மிக்கது" என அவர் அதனை விளக்கினார். "என்னுடைய முட்டாள் தனத்தினால், மக்கள் மீது அன்பு செலுத்துவதினால் மது பாவனையை நிறுத்திவிடலாம் என நான் நினைத்தேன். ஆனால், என்னால் மது பாவனையை நிறுத்த முடியவில்லை. எனினும், நான் முயற்சி செய்தேன். அவர் அதிக வன்முறையான மது பாவனையாளர். என்னை மாத்திரமின்றி, தன்னையும் காயம் செய்து கொள்ள அவர் முயற்சித்தார். அது மிகவும் அபாயகரமானது."[46]

தாம் ஒரு இரட்டைப் பாலுறவு நபர் என்பதனை அறிந்து கொண்ட ஆண் ஒருவருடனான உறவு குறித்த அனுபவங்களை கிறிஸ்டி பகிர்ந்து கொண்டார்.

45 சான்ராவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 செப்ரம்பர் 18.
46 கமலாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 மே 31.

“ ஒருநாள் நான் “பெண்களின் இரவு” (விருந்தின் பெயர்) என்பதற்கு வெளியில் சென்று, வீட்டுக்கு வந்த போது, “யாருடன் நீ படுத்தாய்” என்ற கேள்வியே அவர் முதலில் எழுப்பியதாகும். “நீ என்ன சொல்ல வருகிறாய்” என நான் கேட்டேன். “நிச்சயமாக நீ உன்னுடைய நண்பர்களுடன் தான் அங்கே இருந்திருப்பாய். எந்தவொரு ஆண்களும் அங்கு வந்திருக்க முடியாது. அதனால் தான் கேட்கிறேன், நீ யாருடன் படுத்திருந்தாய் என” என்றார். “யாருமில்லை” என நான் கூறினேன். அவர் என்னை அறைந்தார். அதுவே அந்த உறவின் முடிவாக இருந்தது. என்னுடைய முகத்தில் வேகமாக அறைந்தார். என்னை உதைப்பதற்கும் அவர் முயற்சித்தார்.[47] ”

தாக்குதலுக்கு உள்ளாகும் வாழ்க்கைத் துணைக்கு நிவாரணம் கோருவதற்கு, 2005ஆம் ஆண்டின் வீட்டு வன்முறையை தடுத்தல் தொடர்பான சட்டத்தின் 23ஆவது பிரிவு அனுமதியளிக்கின்ற போதிலும், நேர்காணப்பட்ட எவரும் மேற்குறிப்பிட்ட சம்பவங்களை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடாக குறிப்பிடவில்லை. தாம் ஒரே பால் உடலுறவில் ஈடுபட்டிருந்தமையின் காரணமாகவும், வயது வந்தோருடன் (18 வயதுக்கு மேல்) இணக்கத்துடனான ஒரே பால் உடலுறவு என்பது குற்றவியல் சட்டக்கோவையின் 365 ஏ பிரிவின் கீழ் குற்றமாக கருதப்படுவதாலுமே இந்த தயக்க நிலை நிலவுகின்றது. வேற்றுப் பாலுறவுகளுக்கு இடையிலான நடவடிக்கைகள் உள்ளடங்கலாக பல்வேறு நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்ற போதிலும், 365 ஏ பிரிவுடன் பொருந்தியதாக வீட்டு வன்முறையை தடுப்பதற்கான சட்டம் பரீட்சிக்கப்படவில்லை. வரலாற்று ரீதியான ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் ஆணுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களையே 365 ஏ பிரிவு இலக்கு வைத்துள்ளது. பெண் ஓரினச் சேர்க்கையை குற்றமாக்குவதாக மாற்றப்படுவதற்கு இந்த சட்டத்தின் மொழி பிரயோகமானது உள்ளது. இதன் காரணமாக பெண் ஓரினச் சேர்க்கையில் வன்முறை எதிர்கொள்பவர்கள் முறைப்பாடு செய்வதில் அல்லது பாதுகாப்பு பெறுவதில் தடையை ஏற்படுத்தியுள்ளது.

47 கிறிஸ்டியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 பெப்ரவரி 16.

## உ. வேலைத்தளத்தில் பாரபட்சம்

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, பாரபட்ச நடவடிக்கைகள் வன்முறைக்கு காரணமாக அமையுமாயின், பாரபட்சமும் வன்முறையாக கருதப்பட்டது. உதாரணமாக, பின்வரும் சந்தர்ப்பங்கள்:

- பாரபட்சம் சார்ந்த நடவடிக்கையானது உடல்சார் அல்லது உளவியல் தீங்கினை ஏற்படுத்துமாயின் அல்லது உடல்சார் வன்முறையின் தீவிரத்தை அதிகரிக்குமாயின்,
- வன்முறைக்கு காரணமான அல்லது வழியேற்படுத்தும் சூழ்நிலைக்கு பாரபட்சம் இட்டுச் செல்லுமாயின்,
- வன்முறையின் குறிப்பிடத்தக்க வகைகளுக்கு பாரபட்சம் பங்களிக்குமாயின் மற்றும்/அல்லது குறிப்பிடத்தக்க வன்முறையாளர்களுக்கு அழைப்பு விடுக்குமாயின்,
- அரச மற்றும் தனியார் செயற்பாட்டாளர்களால் வன்முறைக்கான நியாயப்படுத்தலாக பாரபட்சம் மாறுமாயின்,
- வன்முறை நிகழும் போது அரச தரப்பு செயலற்று இருப்பதற்கு பாரபட்சம் காரணமாக இருப்பின்,
- வன்முறையால் பாதிக்கப்பட்ட LBT நபர்கள் நிறுவனங்களில் தவறாக நடத்தப்படுவதற்கு பாரபட்சம் வழி வகுக்குமாயின்,

தமக்கு எதிரான பாரபட்சத்தின் காரணமாக வேலைத்தளத்தில் ஏற்பட்ட உணர்வுசார், உடல்சார் மற்றும் பாலியல்சார் துஷ்பிரயோக அனுபவங்கள் குறித்து நேர்காணப்பட்ட நால்வர் தெரிவித்தனர்.

தமது உயரதிகாரியால் தாம் எவ்வாறு பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டேன் எனவும், தாம் பல முறை மறுத்த சந்தர்ப்பங்களிலும் வேலை நேரங்களில் உயரதிகாரியின் அறைக்குள் தம்மை அடைத்து வைத்திருந்தமை குறித்த அனுபவங்களையும் கிறிஸ்டி பகிர்ந்து கொண்டார். தமது பணிப்பாளரால், தன்னுடைய பாலியல் ஆர்வம் குறித்து உயரதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டு, மற்றொரு பெண்ணுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுமாறும், தாம் அதனை காணவேண்டும் எனவும் அழைத்த உயரதிகாரியின் செயல் குறித்து இந்த நிகழ்வு விளக்குகின்றது.

“தன்னை இன்னொரு பெண்ணிற்கு அறிமுகப்படுத்துவதாகவும், அந்த பெண்ணுடன் நான் உடலுறவு கொள்வதனை அவரால் பார்க்க முடியும் என்ற யோசனையை அவர் முனவைத்தார். அது மிகவும் அசௌகரியமாக இருந்து. அதன் காரணமாக நான் எனது வேலையை விட்டுச் செல்ல விரும்பினேன். எனக்கு ஆண்களை விட, பெண்களில் ஈர்ப்பு அதிகம் என்பதனை தெரிந்து கொண்ட அவர், இவ்வாறான யோசனைகளை அடிக்கடி கூறி வந்தார். நான் எப்போது அவரை பார்த்தாலும், அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்பது போலத் தோன்றும். காரணம், அவர் என்னை பார்க்கும் விதம் மிகவும் நெருடல் தருவதாக இருந்தது. சில சந்தர்ப்பங்களில், அவருக்கு என்னுடைய கைபேசி இலக்கம் தெரியும் என்பதால், “உன்னுடைய காதலி எப்படியிருக்கின்றாள்” அல்லது “அவருடைய படத்தை நான் பார்க்க முடியுமா” மற்றும் “உங்களுடைய அந்தரங்கப் பகுதிகள் எப்படி இருக்கின்றன?” போன்ற குறுஞ்செய்திகளை அனுப்புவார். எனக்கு பெரும் நெருக்கடியாகவும், மனரீதியாக தாக்கம் செலுத்துவதாகவும் அந்த செயல் இருந்தது. எனக்கு உண்மையாக வேலை செய்ய பிடிக்கவில்லை. முகாமையாளருடன் நீ படுக்கவில்லையென்றால் உனக்கு பதவியுயர்வு கிடைக்காது, எதுவும் கிடைக்காது, உனக்கு சம்பள உயர்வு கிடைக்காது என சக ஊழியர்கள் கூறுவர். வாடிக்கையாளர் சேவை ஊழியராக நான் நீண்ட காலம் இருந்து விட்டேன். நான் நாயைப் போல வேலை செய்வேன், ஆனால், அவர்களுடன் படுக்காமையினால் எனக்கு சம்பள உயர்வு கிடைக்கவில்லை. என்னுடைய அலுவலகத்தில் பாதுகாப்பு அதிகாரியில் இருந்து, முகாமைத்துவம் வரை அனைவருக்கும் என்னுடைய அந்தரங்க வாழ்க்கையை அறிந்து கொள்ளும் ஆர்வம் இருக்கின்றது. இது மிகவும் மோசமான விடயம். நான் அவர்களிடம் அதை கூற முடியாது அல்லது என்னுடைய காதலியை வாழ்க்கைத் துணையாக அறிமுகப்படுத்த முடியாது. ஏனெனில், நானும் இணைந்து கொள்ளலாமா, பார்க்கலாமா என அவர்கள் கேட்பார்கள். அவ்வாறான கேள்விகளையே அவர்கள் கேட்பார்கள்.”

வேலைத்தளத்தில் பாலியல் பலாத்காரம் குறித்த கிறிஸ்டியின் அனுபவம் பெரும்பாலான பெண்களுக்கு பொதுவானது அல்ல. இருப்பினும், இரட்டைப் பாலுறவு பெண்ணான ஒருவர், குறித்த

சந்தர்ப்பத்தில் பெண் ஒருவருடன் உறவில் இருந்தார் என அது பரப்பப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். மேலும் பலாத்காரத்திற்கு உள்ளாகாது மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகாது, முறைசார் நிவாரணத்தை அணுகுவதற்கும் அவருக்கு சிக்கல் இருந்தது. ஏனெனில், அவர் வேற்றுப் பாலுறவு பெண் அல்ல. அத்துடன், பெரும்பாலான பொது மற்றும் தனியார் பாலியல் பலாத்காரங்கள் பாலியல் அமைப்பு தொடர்பானதாக பலாத்காரங்களை உள்ளடக்காமையே இதற்கான காரணமாகும்.

தமது பால்நிலை அடையாளத்தை "நடுவில் உள்ளவர்" என விவரிக்கும் இந்திராணி, ஆண்மையோ அல்லது பெண்மையோ அற்றவராக உள்ளதுடன், 32 வயதான அவர் கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசிக்கின்றார். ஊழியர்களுக்கான வீடமைப்பு தொடர்பில் முந்தைய வேலைத்தளத்தில் எதிர்கொண்ட பாரபட்சம் குறித்து அவர் குறிப்பிட்டார். " ஆண்கள் மற்றும் பெண்கள் இணைந்து நாங்கள் பணியாற்றினோம். ஆனால், உறங்குதல், குளித்தல் மற்றும் அறைகளை ஒதுக்குதல் என வரும்போது, ஏனைய பெண்களில் இருந்து எம்மை முகாமைத்துவம் ஒதுக்கும். நாம் சாதாரணமானவர்கள் அல்ல என்பதே அவர்களது கருத்து. எங்களுடன் இருப்பதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லை. ஏனெனில், அவர்களுக்கு எம்மீது விருப்பம் இல்லை. நமக்கு தனியான இடங்கள் வழங்கப்பட்டன.[48] "

பல சந்தர்ப்பங்களில் தமது FTM (பெண்ணிலிருந்து ஆணுக்கு) நிலையானது பொருத்தமான வேலைவாய்ப்பினை பெறுவதற்கு தடையாக இருந்ததாக ஸ்கின்னர் தெரிவித்தார்.

48 இந்திராணியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஏப்ரல் 28

“என்னுடைய அனைத்து ஆவணங்களிலும் என்னுடைய பெயர் வேறு (பெண்), என்னுடைய பால்நிலை வேறு (ஆண்). எனவே, நான் அவர்கள் முன்னால் போய் நின்றால் அவர்கள் பார்க்கும் உருவம் வேறு. இதனால் அவர்கள் மோசமான காரணங்களைக் கூறுவர். “உங்களை எம்மால் வேலைக்குச் சேர்க்க முடியாது” அல்லது “நாம் உங்களுக்கு அறியத் தருகின்றோம்”. “இவ்வாறு (இந்த தோற்றத்தில்) உன்னால் வேலை பெற முடியாது” என சிலர் மிகவும் கடுமையாக தெரிவிப்பர். அல்லது “ஏன் ஆணைப் போல உடுத்தியிருக்கின்றாய்” எனக் கேட்பர். அல்லது “உன்னால் ஏன் சாதாரணமாக இருக்க முடியாது?” எனக் கேட்பர்.[49] ”

இரண்டு தனிப்பட்ட சம்பவங்களில் தமது மேற்பார்வையாளர்களால் பாரபட்சம் மற்றும் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான அனுபவங்களை சாமிலா பகிர்ந்து கொள்கின்றார்.

“ஒரு சந்தர்ப்பத்தில், அவரது மேற்பார்வையாளர்களில் ஒருவர் (அண்ணளவாக 59 வயது), பெண் ஓரினச் சேர்க்கையாளரான தமது மனைவியுடன் உடலுறவு கொள்ளுமாறு கோரியுள்ளார். “அவரது மனைவியுடன் உடலுறவு கொள்ளுமாறு அவர் என்னை அழைத்தார். வயதான பெண்ணின் பின்னால் செல்லும் நபர் நானில்லை என நான் கூறினேன். அத்துடன், ஒவ்வொருவருடைய ஆசையையும் பூர்த்தி செய்யும் பெண் நானில்லை எனவும் கூறினேன்.” [50] ” வேலையிட பரிமாற்றத்தை வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த சந்தர்ப்பத்தில் சாமிலா கொழும்புக்கு வெளியே தொழில் புரிந்து வந்ததுடன், கொழும்புக்கு இடமாற்றம் கோரியிருந்துள்ளார். இந்த விண்ணப்பத்திற்கு பாலியல் சார் உதவிகளை அவரது மேற்பார்வையாளர் கோரியுள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் பாலியல் பலாத்காரம் என்பது இடமாற்றம் மறுக்கப்படல் மற்றும் பதவி உயர்வு மறுக்கப்படல் என்பதன் அடிப்படையில், அவரது மேற்பார்வையாளரது பாலியல் ஆசைகளை நிறைவேற்ற மறுத்ததால் ஏற்பட்டுள்ளது.

49 ஸ்கின்னருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஒக்டோபர் 7.
50 சமிலாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஆகஸ்ட் 8.

தமது வேலைத்தளத்தில் உள்ள வேறு ஒருவர் மேற்பார்வையாளர் எவ்வாறு தம் மீது வாய்மூல துஷ்பிரயோகம் குறித்த அனுபவங்களையும் சமிலா பகிர்ந்து கொண்டார். “வெளிப்படையாக” யாரோ என்னைப் பற்றி ஏதோவொரு கதையை கூறி உள்ளனர். எனவே, அவர் என்னை அழைத்து, நான்கு அல்லது ஐந்து பேர் முன்னிலையில் திட்டினார். அவர் நிந்திக்கும் சில சொற்களை பயன்படுத்தினார். “ஆப்ப” என்ற சொல்லையும் அவர் பயன்படுத்தினார்.”

வேலை தளத்தில் நடைபெறும் பாலியல் பலாத்காரம் தொடர்பான எந்தவொரு முறைசார் கொள்கைகளையும் அரசாங்க அதிகாரிகள் உள்வாங்கவில்லை. அதேபோன்று, கம்பனிகள் துறைக்கும் முறைசார் கொள்கை எதுவும் இல்லை. எனினும், நிறுவனங்கள் கொள்கைகளை உருவாக்கி, உள்வாங்கும் நிலையையும் காணக் கூடியதாகவுள்ளது. எனினும், அவை பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாடு அடிப்படையிலான பலாத்காரத்தை தடுக்கும் பிரிவுகள் அதில் வெளிப்படையாக இல்லை.

# #07 அரசு சார்ந்த செயற்பாட்டாளர்களின் வன்முறை மற்றும் பாரபட்சம்

அரச அதிகாரிகளால் வன்முறையை அனுபவித்ததாக 33 பேரில் 13 பேர் நேர்காணலின் போது தெரிவித்தனர். இவற்றில் பிரதானமானவை பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வழிகளில் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக விளங்கும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவில் ஈடுபடும் பெண்கள் மற்றும் பால் மாற்றம் செய்தவர்கள் ஆகியோரே இவ்வாறு அரச அதிகாரிகளால் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். உதாரணமாக, குறித்த சந்தர்ப்பங்களில் வன்முறைகளை அறிக்கைப்படுத்துவது சிறந்த தெரிவு இல்லை. ஏனெனில், ஓரினச் சேர்க்கைக்காக அல்லது ஓரின பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாட்டிற்காக தண்டனைக்கு உள்ளாகக் கூடிய சாத்தியங்கள் சார்ந்த அச்சம் இதற்கான காரணமாகும்.

கடற்கரையோரம் அமைந்துள்ள விடுதியொன்றில் இந்திராணியும் (ஆண்மைத் தன்மையான பால்நிலை வெளிப்பாட்டுடனான, பெண் ஓரினச் சேர்க்கையாளர்) அவரது பெண் காதலியும் (பெண்மைத் தன்மையான பால்நிலை வெளிப்பாடுள்ளவர்) உணவு உட்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பொலிஸாரினால் நிகழ்த்தப்பட்ட சம்பவம் ஒன்றினை அவர் விபரித்தார். இந்தப் பகுதியில் சந்திக்கும் ஜோடிகளை (வேற்றுப்பாலுறவு) பொலிஸார் அடிக்கடி சோதனை செய்யும் இடமாகும்.[51]

51 இலங்கையில் பெரும்பாலான இளைஞர்கள் தமது குடும்பங்களுடன் வசிக்கின்ற நிலையில், திருமணத்திற்கு முன்னரான உடலுறவு (வேற்றுப் பாலுறவு) என்பது முகம் சுளிக்கும் விடயமாக பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக தனியான இடங்களில் சந்திப்பதற்கான வாய்ப்பு இல்லாத இளைஞர்கள் கடற்கரையில் சந்திக்கின்றனர். கடற்கரை பகுதியில் புதர்களால் சூழப்பட்டுள்ள பகுதிகளில் ஜோடிகள் (வேற்றுப் பாலுறவு) மத்தியில் கூடுவதனையே ‘புதர்களுக்கு அருகில்’ என்ற குறிப்பு விளக்குகின்றது.

இரவு உணவிற்குப் பின்னர், நானும் எனது நண்பியும் இரவு எட்டு மணி வரை கதைத்துக் கொண்டிருந்து விட்டு, விடுதியை விட்டு வெளியேறினோம். நாம் வெளியே வந்த போது, கடற்கரையில் இருந்த அனைவரையும் பொலிஸார் சோதனை செய்து கொண்டிருந்தனர். 'புதர்களுக்கு அருகில்' உள்ள ஜோடிகளையே அவர்கள் விசேடமாக சோதனை செய்து கொண்டிருந்தனர். நாம் கரையோரமாக இருந்த வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தோம். நாம் விடுதியில் இருந்து வெளியே வந்தமையால், இரண்டு பொலிஸ் அதிகாரிகள் எம்மை தடுத்து நிறுத்தி 'எங்கே செல்கின்றீர்கள்' எனக் கேட்டனர். இரவுணவை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச் செல்வதாக நாம் கூறினோம். விடுதியில் உணவு உட்கொண்ட பற்றுச்சீட்டையும் அவர்களுக்கு காட்டினோம். நாம் கடற்கரையில் வீணாக பொழுதை கழிப்பதாக கூறி, அவர்கள் எம்மை மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.[52]

1842 ஆம் ஆண்டு நாடோடிகள் சட்டத்தின் கீழ், "பொது இடத்தில் வீணாக அலைந்து திரிபவர்கள்" என கருதுபவர்களை, இந்திராணி எதிர்கொண்ட சூழ்நிலையைப் போன்ற சந்தர்ப்பங்களில் விசாரணை செய்வதற்கான உரிமை பொலி ஸாருக்கு உள்ளது. எனினும், இந்த சட்டமானது விசேடமாக, பொலிஸாரின் துஷ்பிரயோகங்களுக்கு இலகுவில் பாத்திரமாகக் கூடிய குறைந்த சமூக-பொருளாதார அந்தஸ்துடைய ஆண் தன்மையில் தோற்றமளிக்கும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் பால் மாற்றம் செய்து கொண்ட நபர்களை இலக்கு வைப்பதாக அமைகின்றது. இவ்வாறான பொலிஸ் சோதனை நடவடிக்கைகளின் போது விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் பொதுவாக பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படுவர் (இதன் போது உடல்சார் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலக்காக்கப்படுவர்) அல்லது இலஞ்சம் பெற்றுக் கொண்டு அனுப்பி வைக்கப்படுவர்[53].
அடையாள அட்டையில் உள்ள புகைப்படம் மற்றும் பெயர் என்பவற்றுடன் பொருந்தாத சந்தர்ப்பங்களில், ஆண் தன்மை

---

52 இந்திராணியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஏப்ரல் 28.

53 இலங்கையில் பால்வினைத் தொழிலாளர்களுக்கு (பால் மாற்றம் செய்தவர்) எதிரான பொலிஸார் சோதனை தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பார்க்க: நிக்கலஸ், அன்ரியா (2010) டான்ஸ் பொன்னயா டான்ஸ்! இலங்கையில் பால் மாற்றம் செய்து கொண்டவர்களுக்கு எதிரான பொலிஸ் துஷ்பிரயோகங்கள், பெண்ணிய குற்றவியல் 2010 5: 195, இணையத்தில் கிடைக்குமிடம்: http://fcx.sagepub.com/content/5/2/195

மற்றும் பெண் தன்மை போன்ற எண்ணக்கருக்களில், பாதுகாப்புச் சாவடிகளில் பாதுகாப்பு படையினரால் நிந்திக்கக் கூடிய கேள்விகள் எழுப்பப்பட்டு, ஏற்படும் தாக்கம் குறித்தும் பால் மாற்றம் செய்து கொண்ட நபர்கள் மற்றும் ஆண் தன்மையான தோற்றத்தைக் கொண்ட பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் அமைந்துள்ள இராணுவ பாதுகாப்புச் சாவடியில் தன்னை ஒரு ஆண் என்று கருதிய சம்பவம் ஒன்றை சான்ரா பகிர்ந்து கொண்டார்.

என்னை சோதனைச் செய்யும் பலர், என்னுடைய அடையாள அட்டையைப் பார்த்து விட்டு, ஏன் எனக்கு பெண் ஒருவரின் பெயர் இடப்பட்டுள்ளது என கேட்பர். 'ஆம், ஏனெனில், நான் ஒரு பெண்' என அவர்களுக்கு நான் பதிலளிப்பேன். வேறு சிலர் 'நீங்கள் மிஸ்ஸா அல்லது சேரா? (ஆணா அல்லது பெண்ணா)?' எனக் கேட்பார்கள். 'நான் ஆணா அல்லது பெண்ணா என்பதனை என்னுடைய அடையாள அட்டை கூறும். அதனை முதலில் பாருங்கள்' என நான் அவர்களுக்கு பதிலளிப்பேன். அது எனக்கு மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தும். ஆரம்பம் முதலே நேரடியாக பதலிப்பதற்கே நான் முயற்சிப்பேன்[54].

ஒரே பால் துணைகளுடன் வருமானத்தை பகிர்ந்து கொள்ளுதல் என்பதன் அடிப்படையில் ஓய்வூதிய திட்டங்கள் மற்றும் வங்கி கடன்கள் போன்ற அரச சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் தோல்வியடைந்தமை குறித்தும் சில நேர்காணப்பட்டவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். நிறுவனமயப்படுத்தப்பட்ட அரச பாரபட்சம் என இந்த புறக்கணிப்பினை அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மன நல மற்றும் வைத்திய நிபுணர்கள் உள்ளடங்கலாக அரச துறை சேவை வழங்குனர்களால் எதிர்கொள்ளப்பட்ட வன்முறைகளை நேர்காணப்பட்டவர்களில் 7 பேர் பகிர்ந்து கொண்டனர். பெற்றோரினால் 'குணமாக்குவதற்கு' பலவந்தமாக மத நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ சேவைகள் மற்றும் மனநல சேவைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட

54 சான்ராவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 செப்ரம்பம் 18.

சந்தர்ப்பங்களில் சில வன்முறைகள் நிகழ்ந்துள்ளன[55]. தமது காதலியின் பெற்றோர், தமது காதலியை 'குணமாக்குவதற்கு'என அழைத்துச் சென்று மின்னியக்க அதிர்ச்சி வைத்தியம் வழங்கியதாக நேர்காணப்பட்ட ஒருவர் தெரிவித்தார்.[56]

55 நேர்காணப்பட்டவர்கள் எவ்வாறு பலவந்தமாக மத மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பது குறித்து மேலதிக தகவல்களுக்கு 10 மற்றும் 11ஆம் பக்களில் முறையே உள்ள சாமிலா மற்றும் ஸ்கின்னருடனான நேர்காணல்களைப் பார்க்கவும்.

56 ரோஸ்மியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2012 ஜனவரி 6.

# #08 நிவாரணத்திற்கான அணுகும் வசதி

"என்னால் பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல முடியாது என எனக்குத் தெரியும். நான் அவர்களிடம் என்ன சொல்வது? - நான் சில பெண்களுடன் நடனமாடியமைக்காக அவர்கள் என்னை அடித்தனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அது என்னை மேலும் துயரத்திற்கு இட்டுச் செல்லும். நான் தனியாக இருந்தேன். எனவே, நான் முச்சக்கர வண்டி ஒன்றில் ஏறி வீட்டிற்குச் சென்று விட்டேன்." [57]
- சான்ரா, 34 வயது, பெண் ஓரினச் சேர்க்கையாளர்

நிவாரணத்திற்கான அணுகும் வசதியின்மை என்பதே நேர்காணப்பட்டவர்கள் எதிர்நோக்கிய பிரதான சிக்கலாக உள்ளது. மேலே, குறிப்பிட்டவாறு, குடும்ப உறுப்பினர்களால் அவர்கள் வன்முறைக்கு உள்ளாகும் போது, குடும்ப உறுப்பினர்களை "குற்றம் இழைத்தவர்கள்" என்பதன் அடிப்படையில் பார்ப்பதில் சிக்கலைக் கொண்டிருந்தனர். அத்துடன், இந்த வன்முறையை பொலிஸ் அல்லது வேறு நிறுவனங்களில் அறிக்கைப்படுத்துவதிலும் தயக்கம் கொண்டிருந்தனர். விசேடமாக, வீட்டில் பிரத்தியேகமான இடத்தில் இந்த சம்பவம் நடைபெறும் போது இந்த நிலை அதிகமாக காணப்பட்டது. வீட்டில் நடைபெறும் வன்முறையை பொலிஸ் நிலையத்தில் அறிக்கைப்படுத்தினால், தமது குடும்ப உறுப்பினர் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார் என்பதன் காரணமாகவும் தயக்கம் காட்டியதாக நேர்காணப்பட்ட சிலர் தெரிவித்தனர். அதேவேளை, தேவையற்ற விளம்பரம் அல்லது குடும்ப உறுப்பினரை அவமானத்திற்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதில் நேர்காணப்பட்டவர்களுக்கு ஆர்வம் இல்லை.

57 சான்ராவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 செப்ரம்பர் 18.

வீதியில், சமுதாய கூட்டங்களில், பொது போக்குவரத்தில், அல்லது வேலைத்தளத்தில் போன்ற பொது தளத்தில் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களாக அவர்கள் இருந்திருப்பின், பால்நிலை உறுதிசெய்யப்படாத நிலை அல்லது பாலியல் அமைப்பு என்பவற்றிற்காக இலக்கு வைக்கப்பட்டிருப்பின், தமது LBT என்ற நிலை வெளிப்படும் என்ற அச்சத்தில் வன்முறையை அறிக்கைப்படுத்துவதில் அவர்கள் தயக்கம் காட்டலாம்.[58]

இருப்பினும், பொது மற்றும் தனியார் தளங்கள் என இரண்டு நிலைகளிலும் நிகழும் உடல்சார் வன்முறையானது, அறிக்கைப்படுத்தப்படாததாக மற்றும் ஆவணப்படுத்தப்படாததாக உள்ளமையை நேர்காணல் தரவுகள் வெளிப்படுத்தின. அத்துடன், உடல்சார் வன்முறைக்கு உள்ளான LBT நபர்களுக்கு நிவாரணம், இழப்பீடு அல்லது உள்ளக வன்முறை நிகழ்ச்சிகள் அல்லது உதவிக் குழுக்கள் போன்ற வன்முறையை எதிர்நோக்கிய பெண்களுடன் பணியாற்றும் மனநல சேவை வழங்குவோரின உளவளத் துணை வழங்கப்படல் வேண்டும்.

LBT நபர்களின் பொதுவான இயலுமை மற்றும் குறைகளை பதிவிடுவதற்கான மனச்சார்பு என்பவற்றுடன் அடுத்தடுத்ததாக வைத்துப் பார்க்கப்படல் வேண்டும். ஏனெனில், அவர்களுடைய பாலியல்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றுடன் தொடர்புபடாததாக குற்றம் அமைகின்ற சந்தர்ப்பங்களிலும், விசேட அக்கறை செலுத்த வேண்டிய நிலையுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்டோரின் இணக்கத்துடனான ஒரே பால் சேர்க்கை நடவடிக்கைகளை குற்றமாக்கும் குற்றவியல் கோவைச் சட்ட நடைமுறைகளும் LGBT தனிநபர்களை இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக மாற்றிவிடுகின்றது. அவர்களை கைது செய்வதற்காக மற்றும் தொல்லை செய்வதற்கு ஏதுவதாக குற்றவியல் கோவையின் 365 ஏ மற்றும் நாடோடிகள் சட்டம் என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவில் ஈடுபடுபவர்கள், அல்லது பால் மாற்றம் செய்தவர்களுக்கு எதிராக அச்சுறுத்தல் ஏற்படுத்தும் மற்றும் வன்முறையை பிரயோகிக்கும் நிறுவனமாக பொலிஸ் என்பதனை LBT சமுதாயம் பார்க்கின்றது.

58 பல்வேறு காரணங்களுக்கு தாம் வெளிப்படுத்தப்படுகின்றமை தொடர்பில் நேர்காணப்பட்டவர்கள் அஞ்சினர்: தமது பாலியல் அமைப்பினை குடும்பத்தினர் அறிந்து கொள்வர் என சிலர் அஞ்சினர். பொலிஸார் பலாத்காரத்திற்கு மற்றும் / அல்லது குற்றவியல் கோவை பிரிவு 365 ஏ இன் கீழ் தாம் கைது செய்யப்படலாம் என ஏனையோரும் அஞ்சினர்.

மேலதிகமாக, இலங்கையில் உள்ள நீதிமன்ற முறையானது பொதுவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவானதாக இல்லை. அத்துடன் நீதிமன்ற விசாரணைகள் பொது மக்களுக்கு பார்வையிடக் கூடியதாக இருப்பதனால், தமது பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளத்தை பொது மக்களுக்கு அறியாது வைத்துக் கொள்ள விரும்புபவர்களுக்கு ஏதுவானதாக இல்லை. மேலும், மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, பொது சேவைகள் ஆணைக்குழு மற்றும் நீதி சேவைகள் ஆணைக்குழு என்பனவற்றின் நியமனங்களை ஜனாதிபதி வழங்குவதனால், அவற்றின் செயற்பாடு குறித்த சுயாதீனத் தன்மை குறித்தும் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

இந்த சூழ்நிலையில், அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வன்முறைக்காக நிவாரணம் பெறுவதற்கான சாத்தியம் என்பது சந்தேகத்திற்கிடமானது என LBT நபர்கள் தெரிவிக்கின்றனர்.

# #09 எதிர்வினையளித்தல், எதிர்கொள்ளல் மற்றும் எதிர்த்து போராடல்



பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள் மற்றும் பால் மாற்றம் செய்த நபர்கள் வன்முறைக்கு எவ்வாறு எதிர்வினையளிக்கின்றார்கள் என்பதனையும் இந்த ஆய்வு பரிசீலனை செய்தது. பாரபட்ச நிலைமை அல்லது வன்முறை நடைபெறும் இடத்தை விட்டு வெளியேறுவது அல்லது புறக்கணிப்பதே சிக்கலான சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான சிறந்த வழி என நேர்காணப்பட்ட சில LBT நபர்கள் தெரிவித்தனர். ஏனையோர் பிரச்சினைக்கு எதிராக போராடுதல் என்பதனை குறிப்பிட்டனர். இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, மூன்று முக்கியமான பதில்களை நாம் வடிவமைத்தோம். அவை, பொருத்தமான வகையில் நேர்காணப்பட்ட நபர்களால் பயன்படுத்தப்பட்டன. அவையாவன: 1) உணர்ச்சிவயப்பட்ட பிரதிபலிப்பு, 2) செயலற்ற பிரதிபலிப்பு, மற்றும் 3) செயற்றிறன் மிக்க/ஆர்வலர் பிரதிபலிப்பு

## அ. உணர்ச்சிவயப்பட்ட பிரதிபலிப்பு

தாம் எதிர்கொண்ட வன்முறை மற்றும் பாரபட்சத்தின் காரணமாக நேர்காணப்பட்ட அனைவரும் அதிர்ச்சியளிக்கும், நீடித்த உணர்வுசார் விளைவுகளை எதிர்கொண்டுள்ளனர். இருவர் மாத்திரம் இந்த வன்முறைகள் தமது மனநலத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தனர். மன அழுத்தம், மனப்பயம், மற்றும் கோபம், விரக்தி மற்றும் அச்சம் போன்ற உணர்வுகளை எதிர்கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர். அவர்கள் பெரும்பாலும் “மிகவும் மனமுடைந்து”(மாயா) உணர்வை, “மனநலம் பாதிப்பு” (ரோஷ்மி) மற்றும் அழ வேண்டும், சுவரில் தலையை மோதிக் கொள்ள வேண்டும், விரக்தியுணர்வு (சாந்தனி) அவர்கள் கொண்டிருந்தனர். தாம் அடிக்கடி “மன அழுத்தம் மிக்க தாக்குதல்களை” எதிர்கொண்டதாக கிறிஸ்டி தெரிவித்தார்.

வைத்தியர் கூறிய "எந்தவொரு மாத்திரைகளை" உட்கொண்டு, "நிஜத்தை உணராத" "மயக்கம் நிறைந்தவராக" இருந்ததாகவும் அவர் தெரிவிக்கின்றார். தாம் "உளநோய் சார்ந்த அறிகுறிகளை" எதிர்கொண்டதாக மாயா தெரிவிக்கின்றார். முக்கியமாக எக்ஷிமா ஒரு நரம்பு எதிர்வினையாக என்ற நிலையை அவர் குறிப்பிடுகின்றார். தமது பெற்றோரினால் வெளியேற்றப்பட்ட நிலையில் இந்த நிலை ஏற்பட்டதாக அவர் கூறுகின்றார்.[59]

சமூகம், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினால் நிராகரிக்கப்படுவோம் என்ற பயத்தில் நேர்காணப்பட்டவர்களில் 20 பேர் தமது பாலியல் அமைப்பினை மறைப்பதற்கு தெரிவு செய்ததாக தெரிவித்தனர். இதன் மூலம் வன்முறையின் தீவிரத் தன்மை குறைந்ததாக, வன்முறை குறைந்ததாக, அல்லது வன்முறை உள்ளகப்படுத்தப்பட்டதாக மேலும் 18 பேர் தெரிவித்தனர். தாம் எதிர்கொண்ட வன்முறைகளுக்கு தாமே காரணம் என நேர்காணப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தெரிவித்தனர். தமது பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல் அமைப்பு என்பவற்றின் காரணமாக தம்மைத் தாமே வெறுப்பவர்களாகவும், தம்மைத் தாமே காயப்படுத்திக் கொள்ளும் கத்தியால் வெட்டிக் கொள்ளல் அல்லது உடலில் தீக்காயம் ஏற்படுத்திக் கொள்ளல் என்ற உணர்வுகளையும் கொண்டிருக்கின்றனர். பொதுவாக யாரையும் அடிப்பது அல்லது திட்டுவதில் எனக்கு விருப்பம் இல்லை. எனவே, என்னுடைய துன்பத்தை கட்டுப்படுத்துவதற்கு, நான் என்னை கத்தியால் வெட்டிக் கொள்வேன். என்னுடைய துன்ப உணர்வுகளில் இருந்து நிவாரணம் பெறுவதற்கு வலியை ஏற்படுத்திக் கொள்கின்றேன் என ஜெனி கூறுகின்றார்.[60] 28 வயதான ஜெனி வடமத்திய மாகாணத்தில் வளர்ந்தவர். தற்போது கொழும்பின் புறநகர்ப் பகுதியில் வசிக்கின்றார். அவர், தம்மை ஒரு "பெண் ஓரினச் சேர்க்கையாளர்" என அடையாளப்படுத்திக் கொள்கின்றார்.

தமக்கு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் ஏற்பட்டதாக அல்லது பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பொறிமுறையாக வாழ்வின் ஏதோவொரு கட்டத்தில் தற்கொலை செய்து கொள்ள

59 மாயாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை. 2011 ஜனவரி 22., ரோஷ்மியுடனான நேர்காணல், பெண்கள் தரவு குழு, இலங்கை 2012 ஜனவரி 6., சாந்தனியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 நவம்பர் 17.

60 ஜெனியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011.

முயற்சித்ததாக நேர்காணப்பட்டவர்களில் பதினொரு பேர் தெரிவித்தனர்.[61] வலியை இனிமேலும் தாங்கிக் கொள்ள முடியாது என்பதனால், நான் ஒரு முறை அந்த முயற்சியை எடுத்தேன். நான் வாழ்க்கை குறித்து மிகுந்த ஏமாற்றமடைந்து விட்டேன். அதிலிருந்து வெளிவருவதற்கு நீண்ட நாட்கள் தேவையாக இருந்தது என சாமிலா தெரிவித்தார்.[62] பேருந்து குண்டுத் தாக்குதலில் உயிரிழப்பது போன்ற கற்பனைகளில் ஸ்கின்னர் மூழ்கியிருந்துள்ளார்.[63]

மது, சிகரட் மற்றும் போதைப் பொருள் போன்றவற்றின் பயன்பாடும், இரவு விடுதிகளுக்குச் செல்வதனையும் சிக்கல் நிலையை எதிர்கொள்ளல் பொறியமைப்பாக பயன்படுத்தியதாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பதிலளித்தவர்கள் (5) தெரிவித்தனர். கடந்த காலங்களில் தாம் கடுமையாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்த போது 15-20 சிகரட் பெக்கட்டுக்களை ஊதித் தள்ளியதாக ரோஷ்மி குறிப்பிட்டார். “இடைவேளை இன்றி நான் சிகரட் புகைத்தேன். அதன் பிறகு எனக்கு உடல் நலம் குன்றியது.”[64]

மனநலத்தை பாதிக்கும் மற்றுமொரு விடயமாக வேலைவாய்ப்பில் பாரபட்சமாக காணப்படுகின்றது. தமது பால்நிலை அடையாளத்தின் காரணமாக வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் நிராகரிக்கப்பட்டமையினால் ஸ்கின்னர் பெரும் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளார். “என் வாழ்க்கைக்குத் தேவையான பணத்தை ஈட்ட வேண்டும் என்பதே என் விருப்பம். நான் பிச்சை கேட்கவில்லை. எனக்கு இந்த திறன்

---

61 2011ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் முன்னெடுக்கப்பட்ட கற்கைக்கு அமைய, இலங்கையில் இடம்பெறும் தற்கொலை வீதங்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு தரப்பினரிலும் பார்க்கும் போது, உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. பார்க்க, உலக சுகாதார ஸ்தாபனம் (2011) நாடு, வருடம் மற்றும் பால் அடிப்படையில் தலா 100,000 நபர்களுக்கான தற்கொலை வீதங்கள். (இணையத்தில்) கிடைக்குமிடம்: http://www.who.int/mental_health/prevention/suicide_rates/en/ (2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதி பார்க்கப்பட்டது). இலங்கையில் தற்கொலை என்பது இனியும் குற்றச் செயல் அல்ல. 1998 வரை அதற்கு கடுமையான தண்டனை அளிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. பார்க்க, உலக சுகாதார ஸ்தாபனம் (2004) தற்கொலை தடுப்பு: இருளில் இருந்து எழல் (இணையத்தில்) கிடைக்குமிடம்: http://www.searo.who.int/en/Section1174/Section1199/Section1567/Section1824_8089.htm (2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதி பார்க்கப்பட்டது).

62 சாமிலாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஆகஸ்ட் 8.

63 இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளால் பொது மக்கள் பயணிக்கும் பேருந்துகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை குறிக்கிறது. ஸ்கின்னருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2011 ஒக்டோபர் 7.

64 ரோஷ்மியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2012 ஜனவரி 6.

இருக்கின்றது. அதற்காக வேலை செய்து பணம் பெறுவதற்கு எனக்கு வசதியளியுங்கள். அவ்வளவுதான்."[65]

தமது பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளத்தை நண்பர்களுக்கு வெளிப்படுத்துவதனால் தாம் நிராகரிக்கப்படுகின்றோம் என்ற உணர்வே நேர்காணப்பட்டவர்களுக்கு இருந்தது. "திடீரென, அனைவரும் என்னை நடத்திய விதத்தில், எனக்கு வித்தியாசம் தெரிந்தது. கூறாத போது, நான் சாதாரணமானவராக தெரிந்தேன். இருப்பின், என்னை இணைத்துக் கொள்வதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர்"[66]என அவர் கூறினார்.

அனு என்பவர் இரட்டைப் பாலுறவு பெண்ணாகும். தமது நண்பி அச்சம் கொண்டமையினால் மிகுந்த கவலை கொண்டதாக அவர் தெரிவித்தார். "எனக்கு கோபமும், விரக்தியும் ஏற்பட்டது. தமது வாழ்க்கையை வாழ முயற்சிக்கும், தமக்கு விரும்பியவர்களை விரும்புபவர்களை ஏன் வாழ விட மறுக்கின்றார்கள் என்பதனை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை." என அவர் தெரிவித்தார்.[67]

அடிக்கடி மன அழுத்தத்தை எதிர்கொண்டதாகவும், தமது உறுதி செய்யப்படாத பாலியல் அல்லது பால்நிலை அடையாளத்தை எதிர்கொள்ளச் செய்வதற்கான போராட்டத்தில் குற்றவுணர்வை எதிர்கொண்டதாகவும், நேர்காணப்பட்ட 31 பேர் தெரிவித்தனர். எவ்வாறாயினும், நீடித்துச் செல்லும் சமூக மற்றும் உளவியல் விளைவுகளின் மத்தியில், நண்பர்கள், பங்காளர்கள், குடும்ப உறுப்பினர்கள், LGBT நிறுவனங்கள், மதத் தலைவர்கள் மற்றும் வேலைத்தள சக ஊழியர்களின் ஆதரவின் மூலம் ஏற்படக் கூடிய நேர்நிலையான உணர்வுகள் தொடர்பிலும் பெரும்பான்மையான நேர்காணப்பட்டவர்கள் கருத்து வெளியிட்டனர்.

தர்சி, 46 வயதான பெண்மணியாகும். இவர் கொழும்பில் வசிக்கிறார். தம்மை ஏதாவது ஒரு வகைக்குள் குறிப்பிடுவதில் அவருக்கு உடன்பாடு இல்லை. "பெண்களுடன் உறங்குவதில்"ஆர்வம்

65 ஸ்கின்னருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2011 ஒக்டோபர் 7.
66 னுமுளு உடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2010 செப்ரம்பர் 18.
67 அனுவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, 2011 மே 13.

உள்ளவர் என தெரிவிக்க விரும்புகின்றார். தாம் பாலியல் அமைப்பை நீண்ட காலத்திற்கு மறைத்து வைத்திருக்க முடியவில்லை என அவர் தெரிவிக்கின்றார். "ஆனால் அது குறித்து தவறாக உணராதவர்களை சந்தித்த போது, எனக்கு மிகுந்த வசதியாக இருந்தது. நான் மகிழ்ச்சியாகவும், சௌகரியமாகவும் உணர்ந்தேன்." என அவர் தெரிவித்தார்.[68]

இதேபோன்ற அனுபவம் ஒன்றை இந்திராணியும் பகிர்ந்து கொண்டார். "என்னைப் புரிந்து கொள்ளும் நபர்கள் என் வீட்டில் இல்லாத போதிலும், என்னைப் புரிந்து கொண்ட நண்பர்களை நான் சந்தித்தேன். அவர்கள் விருந்துகளை ஒழுங்கு செய்தனர். அனைவரும் என்னுடன் கதைத்தனர். யாரும் என்னை அலட்சியமாக பார்த்து சிரிக்கவில்லை. நான் ஏன் காதணி இன்றி இருக்கின்றேன் என என்னிடம் யாரும் கேட்கவில்லை. நான் அங்கு மிகுந்த சௌகரியமாக இருந்தேன். சமூகம் என்னைப் பற்றி என்ன சிந்திக்கின்றது என எனக்கு அக்கறையில்லை. என்னை ஏற்றுக் கொள்ளும் அதிகமானோர் உள்ளனர். எனவே, நான் நல்ல உணர்வைப் பெற்றேன்."[69]

வேறுபட்ட மூலங்களில் இருந்து ஆதரவினைப் பெறுவதாகவும், பல வழிகளில் ஆதரவைப் பெறும் உணர்வைக் கொண்டுள்ளதாகவும் நேர்காணப்பட்டவர்களில் பலர் தெரிவித்த போதிலும், நேர்காணப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மாத்திரமே தாம் பெருமையுடன் உள்ளதாகவும், சக்தியுடன் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

## ஆ. செயலற்ற பிரதிபலிப்பு

நாம் கதைத்தவர்களில் பெரும்பான்மையானவர்கள், வன்முறை, பாரபட்சம் அல்லது துஷ்பிரயோகத்திற்கு வாய்மூலம் அல்லது உடல்ரீதியாக பிரதிபலிப்பு செய்பவர்களாக இல்லை. எந்த வகையான எதிர்ப்பு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என நேர்காணப்பட்டவர்களில் 25 பேர் தெரிவித்தனர். வன்முறையின் போதும், அதன் பின்னரும் பக்கவாதம் அடைந்தது போல் இருந்ததால், பதில் நடவடிக்கை எடுக்காதிருக்க தீர்மானித்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.'

68 தர்ஷியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 ஒக்டோபர் 30.
69 இந்திராணியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஏப்ரல் 28.

ஒரு முறை நான் பணியாற்றும் இடத்தில், இரண்டு பையன்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் பின்னர் நான் மதிய உணவு உட்கொண்டிருந்த போது, அனைவரது முன்னிலையிலும் 'ஆஹா' இன்று ஆப்ப பானை உடைந்து விட்டது" எனத் தெரிவித்தனர். அது எனக்குச் சொல்லவில்லை என்பது போல் நான் அமைதியாக இருந்தேன்." என இந்திராணி குறிப்பிட்டார்.[70]

சிலர் சுய கட்டுப்பாட்டை பிரயோகித்தனர். விசேடமாக குடும்பம் மற்றும் உறவினர்களிடமே இவ்வாறான அணுகுமுறை கையாளப்பட்டது. "அது அந்த வகையில் நல்லது (சிரிக்கிறார்). அவற்றை பற்றி சிந்திக்காது இருக்க நான் முயற்சிக்கிறேன். இயலுமான வரையில் அதனை தவிர்க்க பார்க்கின்றேன். வேறு என்ன செய்வது" என ஸ்கின்னர் தெரிவிக்கின்றார்.[71]

சாத்தியமான ஒரு பால் இச்சை மறுப்பு செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தமது பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் காரணமாக தம் மீது துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் பொது இடங்களுக்குச் செல்வதனை தவிர்த்துக் கொள்வதனை எமது நேர்காணல்கள் வெளிப்படுத்தின. "ஓரினச் சேர்க்கையாளர்கள், திருநங்கைகள் வாழும் இடங்கள் ஓரினபால் இச்சையை எதிர்க்கும் சவாலுக்குடைய இடங்களாகும். இத்தகைய சூழலில் தங்கள் வாழ்க்கையை நடத்துவதும் தங்களை போன்றவர்களுடன் ஒன்று சேர்ந்து குழுக்கள் அமைப்பதும் கடினமானது என நிபுணர்கள் கூறுகின்றனர்." [72]

25 வயதான அனிஷ்கா, கொழும்பில் வசிக்கின்றார். அத்துடன், 'இரட்டைப்பாலுறவு அல்லது பெண் ஓரினச் சேர்க்கையாளர், ஆனால் 80 வீதம் பெண் ஓரினச் சேர்க்கையாளர்' எனத் தெரிவிக்கின்றார். அவரது பால்நிலை அடையாளம் பெண்மை தன்மை வாய்ந்தது. அவரும், அவருடைய காதலியும் எவ்வாறு வேண்டும் என்றே பொது தளங்களை தவிர்க்கின்றார்கள் என்பது குறித்து அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டார்:

70 இந்திராணியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஏப்ரல் 28.

71 ஸ்கின்னருடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஒக்டோபர் 7..

72 இங்ரம், கோர்டன் பிரன்ட், ஆன்-மேரி பௌதிலெட்டே, யோலன்டா ரெட்டர் (நுனள) (1997). ஞரநநசள ைை ளுியஉந: சமுதாயங்கள்/பொது இடங்கள்/ஓய்வு இடங்கள்இ டீயல அச்சகம், ஐக்கிய அமெரிக்கா.

நாம் எங்கே செல்கின்றோம் என்பதில், நாம் மிகுந்த அக்கறையாக உள்ளோம். நாங்கள் செல்ல வேண்டிய இடம் எது என்பதனை நாம் அறிவோம். சிறிய குளிர்பான இடங்கள் அல்லது நாம் வீட்டிலேயே உணவருந்துவோம். நண்பர்களின் வீட்டிற்குச் செல்வோம். நாம் பொது இடங்களுக்குச் செல்வதில்லை.[73]

பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள் மற்றும் திருநங்கைகள் வன்முறையில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான கவசங்களை நிர்ணயிப்பதில் சமூக-பொருளாதார பின்புலம் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. பாதுகாப்பற்ற சூழலுக்குச் செல்லாது, 'பாதுகாப்பான சூழலை' நிதி வசதி மூலம் பெறலாம் என்ற பாங்கு LBT மக்களிடம் உள்ளது என்பதனை ஆய்வு வெளிப்படுத்தியது. தாம் செல்லும் இடங்களை 'தேடி, தெரிவு செய்வதாக' மாயா தெரிவிக்கின்றார். "நான் சில நடவடிக்கைகளை குறைத்துக் கொண்டேன், நகரத்தின் சில பகுதிகளுக்குச் செல்வதனை தவிர்த்துக் கொண்டேன். நான் வீதிகளில் நடந்து செல்ல மாட்டேன். எல்லா இடத்திற்கும் காரிலேயே செல்வேன். நான் பொது போக்குவரத்தை பயன்படுத்துவதில்லை. ரயில் வண்டியிலும் செல்வதில்லை." [74]

ஓரின பால் இச்சைக்கு எதிரான கருத்துக்களை குறைப்பதற்கான வழியாக தமது வேலைத்தளத்தில் நேர்காணப்படுபவர்களும் அவர்களது இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டும். 40 வயதான சோமா கொழும்பில் பிறந்தவர். ஆனால் தற்போது தமது காதலியுடன் வெளிநாட்டில் வசிக்கின்றார். தன்னை பெண்மைத் தன்மை கொண்டவராக வர்ணிக்கும் அவர், பெண் ஓரினச் சேர்க்கையாளர் என பாலியல் அமைப்பை குறிப்பிடுகின்றார். அவரது தற்போதைய வேலைத்தளத்தில், தமது வாழ்க்கைத் துணையின் பால்நிலை வெளிப்படுத்தாது இருப்பதில் அவர் அவதானமாக இருக்கின்றார். வேலைத்தளத்தில் அதனை மறைப்பதற்கு (என்னுடைய பாலியல் அமைப்பு) கடுமையான முயற்சி செய்வேன். என்னுடைய வாழ்க்கைத் துணை குறித்து கதைப்பேன். ஆனால் அவரது "பால்நிலையை குறிப்பிட மாட்டேன்" என அவர் தெரிவிக்கின்றார்.[75]

---

73 அனிஷ்காவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 ஒக்டோபர் 7.
74 மாயாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஜனவரி 22.
75 சோமாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011.

## இ. செயற்றிறன் மிக்க/செயற்பாட்டு பிரதிபலிப்பு

இந்த வகையில் உள்ள பதில்களில் ஒருவரின் குடும்பம், நகரம், பிராந்தியம் அல்லது நாட்டை விட்டுச் செல்லுதல்:, நேரிடையாக நடந்து கொள்ளல் அல்லது சாதாரணமான பால்நிலை வகிபாகங்களை பின்பற்றல்:, LGBT சமுதாய அல்லது குழுக்களின் ஊடாக உதவி பெறல்:, வீட்டுக்கு வெளியே மனதை தேற்றும் செயற்பாடுகளில் ஈடுபடல் (விளையாடல், உடற்பயிற்சி நிலையம் அல்லது வாசிகசாலைக்குச் செல்லல் மற்றும் வீட்டிற்கு வெளியே நேரத்தை செலவிடல்):, மற்றும் உடல்ரீதியாக மற்றும் வாய்மூலமாக எதிர்த்து போராடல் என்பன உள்ளடங்குகின்றன.[76]

பாரபட்சம் மற்றும் வன்முறையை எதிர்கொண்டதன் விளைவாக தமது குடும்பம், நகரம், அல்லது நாட்டினை விட்டு வெளியேறியதாக அல்லது வெளியேறும் விருப்புடன் உள்ளதாக நேர்காணப்பட்டவர்களில் ஆறு பேர் தெரிவித்தனர். என்னுடைய வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வது கடினமாக உள்ளது. சுவடு எதுவும் இல்லாது வெளியேறிச் சென்று விட வேண்டும் என நான் கருதும் சந்தர்ப்பங்களும் உள்ளன. நாட்டை விட்டுச் செல்லல் அல்லது சில சந்தர்ப்பங்களில் இறந்து போக தோணும் என கிறிஸ்டி குறிப்பிடுகின்றார்.[77]

வெளியேற வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்த அனைவராலும் அதனை நிறைவேற்ற முடியவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் பங்களித்தன. நிதிப் பற்றாக்குறை என்பதே பிரதானமான விடயமாக இருந்தது. ஏனையோர் குடும்ப மட்ட வன்முறை அல்லது பெண் ஓரினச் சேர்க்கை என்பதனை வழமைக்கு மாறான விடயம் என கருதி தவறாக நடத்திய வீட்டு உரிமையாளர்களின் மூலமான வன்முறையில் இருந்து தப்பிப்பதற்காக தமது பெற்றோரின் வீட்டை அல்லது குத்தகை வீட்டை விட்டு வெளியேறியதாக தெரிவித்தனர்.

76 பால்நிலை மற்றும்/அல்லது பாலியல் அமைப்புடன் தொடர்புடைய விழுமியங்களை பின்பற்றும் வகையில் பொது இடங்களில் தோற்றம் அளித்தலை குறிக்கும் வகையிலேயே இந்த பதம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

77 கிறிஸ்டியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 பெப்ரவரி 16.

தமது நாளாந்த வாழ்க்கையில் வன்முறை, துஷ்பிரயோகம், மற்றும் தவறாக நடத்துவதனை தவிர்ப்பதற்கு, பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் பால் மாற்றம் செய்த நேர்காணப்பட்டவர்கள் ஏழு பேர் பின்பற்றிய ஆச்சரியமான மற்றும் பயனுள்ள உபாயமாக வேறுபட்ட வடிவங்களில் காட்சியளித்தல் என்பது காணப்படுகின்றது.

'ஆண் தன்மையான' உடை அல்லது ஆடை அணியும் வகையானது பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பதனை வெளிப்படுத்துவதாக இருந்தது. ஆண் ஆதிக்கம் நிறைந்த பொது தளத்தில் அது பாதுகாப்பை அளிப்பதாகவும் இருந்தது. உதாரணமாக, இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது, பாதுகாப்பு காரணங்களுக்காக ஆண் ஒருவரை போல செல்வதற்கு விரும்பியதாக நேர்காணப்பட்ட பெண் ஓரினச் சேர்க்கையாளர் ஒருவர், தெரிவித்தார்.[78]

சாதாரணமான பால்நிலை வகிபாகங்களைப் (ஆண் தன்மை, ஆணாக அல்லது பெண் தன்மையுடன் பிறந்தல், பெண்ணாக பிறந்தால்) பின்பற்றும் முறையை நேர்காணப்பட்ட சிலர் தெரிவு செய்த நிலையில், ஏனையோர், தமது சுய அடையாளத்தில் (பால்)மாற்ற வகிபாகத்தை அல்லது சமூ க ரீதியாக 'தவறாக உணர்ந்து கொள்ளப்பட்ட' வகிபாகத்தை (ஆண் தன்மை, பெண்ணாக பிறந்த போதிலும், மற்றும் பெண் தன்மை, ஆணாக பிறந்த போதிலும்) பின்பற்றினர்.[79] உதாரணமாக, தவறாக உணர்ந்து கொள்ளப்பட்டமையால்' தாம் எப்போதுமே ஆணைப் போலவே நடந்து கொண்டதாக H தெரிவித்தார். அது அவருக்கு மிகவும் சௌகரியமாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார். "பொது கழிப்பிடங்களுக்குச் சென்றால் -

78 இந்திராணியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 28 ஏப்ரல் 2011.

79 ருத் ருபின்ஸ்டெய்ன் (1995), ஆடை அணியும் வகையை பகுப்பாய்வு செய்வதற்கு குறியீடுகளும், அடையாளங்களும் பயனுள்ளது என குறிப்பிடுகின்றார். 'அடையாளம்' என்பது தனிப்பட்ட, தெளிவான கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன், 'குறியீடுகள்' பல அர்த்தங்களைக் கொண்டவை என அவர் விளக்குகின்றார் (ப. 7). தெரிந்து வைத்துள்ள ரசிகர்களால் அடையாளங்களும், குறியீடுகளும் அங்கீகரிக்கப்பட்டு, விளக்கமளிக்கப்பட்டால் மாத்திரமே அலங்கார வடிவமைப்பு மற்றும் ஆடையணியும் வகைகள் தொடர்பாடலுக்கான பயனுள்ள வகைகளாக அமையும். இதனைச் செய்யத் தவறுகின்றமை, தறவான பிரதிநிதித்துவம் அல்லது தவறான அர்த்தப்படுத்தலுக்கு வழி வகுக்கும். உதாரணமாக, இலங்கையில், 'பெண் ஓரினச் சேர்க்கையாளர்' அதே பெயரில், அவ்வாறு இருப்பதுடன் பொருத்தமான ஆடையை அணியும் போது, சமூக தளத்தில் அடையாளப்படுத்தப்படலாம். இதற்கு மாறாக, இலங்கையின் கிராமப்புறங்களில் இவர்கள் 'பையன்' அல்லது 'பையனைப் போல தோன்ற முயற்சிக்கும் ஆண்' என்ற வகையிலேயே தவறாக அறியப்படுவார்.

ஒவ்வொரு முறையும் மலசல கூடத்திற்குச் செல்லும் போது, மல்லி மல்லி வெரதிலா அனித் எக்க' (தம்பி, பிழையாக வந்துவிட்டீர்கள், அடுத்ததற்குச் செல்லவும்), எனச் சொல்லுவர். நான், அடடா தவறி வந்துவிட்டேன், என்று கூறிவிட்டு ஆண்கள் கழிப்பிடத்திற்குச் செல்வேன். ஏனெனில், அனைவரும் நான் ஆண் என நினைக்கின்றார்கள்.[80]

மாயாவைப் பொறுத்தவரையில், பெண்மைத் தன்மை கொண்டவராக செல்வதே சிறந்த உபாயமாக உள்ளது. பொது மக்களால் வித்தியாசமாக பார்க்கப்படுவதனை தவிர்ப்பதற்கு இவ்வாறு முயற்சி செய்து பார்த்துள்ளார். இலங்கையில் வசிக்கும் மாயாவுக்கு 37 வயதாகின்றது. பெண் ஓரினச் சேர்க்கையாளராக தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் மாயா, ஆண்மைத் தன்மை கொண்டவர் எனவும் தன்னை விபரிக்கின்றார். "நான் என்னுடைய பால்நிலை தோற்றத்தை மாற்றினேன். என்னுடைய தலை முடியை வளர்த்தேன். சிறது பருமனாகவும் மாறினேன். அப்போது நான் மேலும் பெண்மைத் தன்மை கொண்டவராக தோன்றினேன். சொன்னால், நீங்கள் நம்ப மாட்டீர்கள். நான் அப்படியே கூட்டத்தில் கலந்து மறைந்து விட்டேன். எவரும் என் மீது கவனம் செலுத்தவில்லை. என்னால் வங்கிக்குச் செல்ல முடியும். எந்தவொரு நிறுவனத்திற்கும் செல்ல முடியும். முன்னர் நான் சென்ற போது என்னை வித்தியாசமாக பார்த்த இடங்களுக்கு எல்லாம் எவ்வித தயக்கமும் இன்றி இப்போது என்னால் போக முடியும். அது மகிழ்ச்சியானது. அதே சந்தர்ப்பத்தில், நானல்லாத ஒருவராக இருப்பதில் எனக்கு வெறுப்பும் இருந்தது. நான் காட்சியளிக்கும் தோற்றம் என்னுடையதல்ல என்ற உணர்வு எனக்கு இருந்தது." [81]

ஆதரவு குழுக்கள், தனிநபர்கள் அல்லது நிறுவனங்களிடம் ஆறுதல் அல்லது வழிகாட்டலை கோரியதாக நேர்காணப்பட்டவர்கில் 20 பேர் தெரிவித்தனர். அது மகிழ்ச்சியானது, உங்களுக்குத் தெரியுமா, இந்த ஆதரவு குழுக்கள் (பெண்கள் ஆதரவு குழுவை குறிப்பிடுகின்றார்), உங்களுக்கு பத்து மில்லியன் வேலைகள் இருந்தாலும், அவர்களுடன் இடததைப் பகிர்ந்து கொண்டு, அவர்களுடன் அமர்ந்து உணவு உட்கொள்ளும் அந்த ஆதரவு போதுமானது' என மாயா தெரிவிக்கின்றார்.[82]

80 H உடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 பெப்ரவரி 12.
81 மாயாவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 ஜனவரி 22.
82 ஐடினை.

உயிரியல் ரீதியான குடும்பத்தில் தங்கியிருப்பதிலும் பார்க்க, தாம் ‘தெரிவு செய்த குடும்பத்தில்’ (தமது நண்பர்களில் தங்கியுள்ள) உறுதியான ஆதரவை எதிர்பார்த்திருந்ததாக சாந்தனி தெரிவித்தார்.[83]

பாடல் கேட்டல், திரைப்படங்கள் பார்த்தல், மற்றும் வாசிகசாலைக்குச் செல்லுதல் போன்ற வீட்டுக்கு வெளியே முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மனதளவில் தூண்டலை வழங்கக் கூடிய செயற்பாடுகளினால், வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் தவறான நடத்தலில் இருந்து ஆறுதல் பெற்றதாக நேர்காணப்பட்டவர்களில் பதினொரு பேர் தெரிவித்தனர். உடற்பயிற்சி செய்தல் மற்றும் நடைப்பயிற்சி செய்தல் போன்ற உடல்சார்ந்த நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டனர்.

பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் பால் மாற்றம் அடைந்த மக்களுக்கு, வாய்மூல நிந்தனை என்பதே, எதிர்த்து போராட வேண்டிய மற்றும் கையாள வேண்டிய பாரபட்சம் மற்றும் வன்முறையாக இருந்தது. இயலுமான சந்தர்ப்பங்களில் பெற்றோர்களை எதிர்த்து வாதாடுவதே, உணர்வுசார் தொல்லையை எதிர்கொள்வதற்கான ஒரே வழி என நேர்காணப்பட்ட 33 பேரில் 22 பேர் தெரிவித்தனர்.

36 வயதான ஹொட்ஹெட் பெண் ஓரினச் சேர்க்கையாளராவார். கொழும்பில் வசிக்கும் இவர் ஆண் தன்மை கொண்ட ஓரினச் சேர்க்கைப் பெண் என தன்னை வர்ணிக்கின்றார்.
எனக்கு திருமணம் செய்து வைக்க என் தாய் விரும்பினார்”.... அவரது நண்பர்களின் பிள்ளைகளையே தமக்குப் பொருத்தமான கணவர் என அவர் எனக்கு தொடர்ந்து அறிமுகப்படுத்தினார். ‘நீங்கள் இந்த முயற்சியை கைவிட வேண்டும். எனக்கு ஆண்களில் விருப்பம் இல்லை. பெண்களில் தான் விருப்பம்’ என நான் அவரிடம் கூறினேன். என அவர் தெரிவிக்கின்றார்.[84]

இனோக்காவும் இவ்வாறான பதிலையே தெரிவித்தார். 29 வயதான இனோக்கா, தம்மை ஆண் தன்மை கொண்ட ஓரினச் சேர்க்கைப் பெண் எனத் தெரிவிக்கின்றார். அவர் கொழும்பில்

83 சாந்தனியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 நவம்பர் 17.
84 ஹொட்ஹெட் (ர்ழவாநயன)உடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 செப்ரம்பர் 18.

வசிக்கின்றார். தான் ஒரு பெண் ஓரினச் சேர்க்கையாளர் என தெரிந்த பின்னர், தமது தாய் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் எவ்வாறு பதிலளித்தார் என விளக்கினார். ‘அவருடைய முதலாவது கேள்வி நேரடியாக’. பாலியல் நடத்தை”. சார்ந்ததாக இருந்தது. ‘நீ எவ்வாறு இன்னொரு பெண்ணுடன் உடலுறவு கொள்வாய்’ என அவர் கேட்டார். அல்லது ‘நீ இன்னொரு பெண்ணுடன் உடலுறவு கொண்டாயா, அது பெண் ஓரினச் சேர்க்கையாகும் என உனக்குத் தெரியுமா?’ எனக் கேட்டார். நான் கூறினேன். ஆமாம், நான் உறவு கொண்டேன். நீங்கள் அவ்வாறு இல்லை என்பதனை தெரிந்து கொள்ளவா ஆணுடன் உடலுறவு கொண்டீர்கள் எனக் கேட்டேன்” என தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.[85]

வேலைத்தளத்தில் பாலியல் ரீதியாக தொல்லைக்கு உள்ளான கிறிஸ்டி, குற்றமிழைத்தவரை எதிர்த்து நின்றமையால் தொல்லையானது வாய்மூல துஷ்பிரயோகத்துடன் நின்றதாகவும், உடல்சார் துஷ்பிரயோகமாக மாறவில்லை எனவும் குறிப்பிட்டார். ‘என்னுடைய மேலதிகாரி ஏதேனும் செய்ய முயற்சித்தால், தொழில் திணைக்களத்திற்குச் செல்வேன் என நான் அவருக்கு எச்சரித்தேன். என்னை தொட முயற்சித்தால் கன்னத்தில் அறைவேன் எனக் கூறினேன். அனைவரும் முன்னாலும் அறைவேன் எனக் கூறினேன்’ என கிறிஸ்டி அந்த சம்பவத்தை விபரிக்கின்றார்.[86]

20 வயதான நயோமி, தமது பெற்றோருடன் கொழும்பில் வசிக்கின்றார். தமது உணர்வை வெளிப்படுத்துவதற்கான தனியான பதப்பிரயோகத்தை குறிப்பிட அவர் விரும்பவில்லை. தம் மீது வாய் மூல துஷ்பிரயோகத்தை பிரயோகிக்கும் மூன்றாம் நபர்களை அடக்குவதற்கு ஆங்கில மொழியைப் பயன்படுத்தி, அவர்களைத் திட்டுவதாக அவர் குறிப்பிட்டார். “நான் அவர்களுடன் ஆங்கிலத்தில் பேசுவேன். அது அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் என எனக்குத் தெரியும். சிறிது நேரத்திற்குப் பின்னர், அவர்கள் வாயை மூடிக் கொண்டு சென்றுவிடுவர்.”[87]

85 இனோக்காவுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2010 ஒக்டோபர் 14.
86 கிறிஸ்டியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 பெப்ரவரி 16.
87 நயோமியுடனான நேர்காணல், பெண்கள் ஆதரவு குழு, இலங்கை, 2011 செப்ரம்பர் 22.

# #10 இலங்கையில் LBT மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத் தும் சட்டங்கள்

## அ. பிரிவு 365A - குற்றவியல் கோவை - மொத்த ஒழுங்கீனம்

18 வயதடைந்தோர்களின் இணக்கத்துடனான ஒரே பால் பாலியல் உறவுகளினை குற்றமாக்குவதற்கு இலங்கை குற்றவியல் சட்டத்தின் பிரிவு 365 ஏஇன் 1995ஆம் ஆண்டு திருத்தச் சட்ட இலக்கம் 22 பயன்படுத்தப்படுகின்றது.[88] இலங்கை குற்றவியல் சட்டக்கோவையின் 1995ஆம் ஆண்டு திருத்தத்திற்கு முன்னர், ஆண்களுக்கு இடையிலான பாலுறவை மாத்திரம் குற்றமாக்கும் வகையில் பிரிவு 365 ஏ அமைந்திருந்தது. இந்தப் பிரிவினை பால்நிலை நடுநிலையானது மற்றும் பாரபட்சமற்றதாக அமைவதற்கு, 'நபர்களுக்கு இடையிலான நடவடிக்கை' என வாசிக்கப்படுவதாக மாற்றியமைக்கப்பட்டது. இந்த திருத்தத்தின் கீழ் பெண்களுக்கு இடையிலான உடலுறவும் தவறானது என்ற கருத்து நிலை உருவாக்கப்பட்டது.[89]

பாரிய அநாகரீகமான முறையில் நடத்தல் என்பது வரையறுக்கப்படவில்லை. வரையறை இன்மையின் காரணமாக இந்த பிரிவுக்கான பிரயோகத்தில் வேற்றுப்பாலுறவும்

88 அதில் உள்ளதாவது: "எந்தவொரு நபரும், பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில், ஈடுபட்டால் அல்லது பங்களித்தால், பால்வினைத் தொழில் புரிந்தால் அல்லது எந்தவொரு நபரையாவது பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்த முயற்சித்தால், வேறொரு நபருடன் முழுதும் ஒழுங்கீனமான நடவடிக்கையில் ஈடுபட்டால், குற்றம் செய்தவராக கருதப்படுவார். இரண்டு வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு, சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவரால் குற்றம் மேற்கொள்ளப்படுமாயின், பதினாறு வயதுக்கு குறைந்தவர்களுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும் போது கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். பத்து வருடங்களுக்கு குறையாத மற்றும் இருபது வருடங்களுக்கு அதிகரிக்காத சிறைத் தண்டனையுடன், பாதிக்கப்பட்ட நபரின் காயங்களுக்கான செலவு உள்ளடங்கலாக நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் அபராதமும் விதிக்கப்படும்."

89 மேலதிக தகவல்களுக்குப் பார்க்க: தம்பையா, வை. (2004), ஒழுக்க(மின்மை) பிரஜைகள்: பாலியல்பும், இலங்கை குற்றவியல் கோவையும். ஏ. ஜே. கனகரத்னா (ஆசி.), நீலன் திருச்செல்வம் நினைவு மாநாட்டு கட்டுரைகள் (ப 107-141), கொழும்பு,

உள்ளடங்குமா என்பது தெளிவற்றதாக உள்ளது. அரசியல் மற்றும் வேறு பொது தலைவர்கள் LGBT சமுதாயம் தொடர்பில் தொடர்ச்சியாக விரோதமான கருத்துக்களை முன்வைத்து வருகின்ற நிலையில், 'பாரிய அநாகரீகமான முறையில் நடத்தல்' என்பது பொது சிந்தனையில் ஒரே பால் உறவுடன் சம்பந்தப்பட்டதாக உள்ள நிலையில் காணப்படுகின்றது. பிரிவு 365 ஏ என்பது நீதிமன்றத்தில் அபூர்வமாக பயன்படுத்தப்படுகின்ற நிலையில், இவ்வாறான கடுமையான மதிப்பு சார்ந்த பிரிவானது, பாலியல் ரீதியாக சிறுபான்மையினர்களை, பொலிஸ் துஷ்பிரயோகம் மற்றும் ஏனையோரில் இருந்து விலக்கி வைப்பதற்கு வழியமைத்து கொடுக்கின்றது. அவர்களுடைய வாழ்க்கைத் தெரிவுகளில் மாத்திரமல்ல, பாலியல் உரிமைகளைச் சார்ந்த செயற்பாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.[90] குடும்ப உறுப்பினர்கள் போன்ற ஏனையோருக்கு எதிராக அச்சுறுத்தலை விடுப்பதற்கு தனியார் பிரஜைகள் அதனைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.[91]

ஓரினச்சேர்க்கை பாலியல் நடவடிக்கையை குற்றமாக்குவதால், அனைத்து பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இருபாலுறவு பெண்கள், மற்றும் பால் மாற்ற நபர்களை 'தீயவர்கள்' மற்றும் குற்றவாளிகள் என முத்திரை குத்துவதற்கு பொலிஸ் மற்றும் ஓரினச் சேர்க்கைக்கு எதிரானவர்களுக்கு வழி வகுக்கின்றது. வேற்றுப் பால் கவர்ச்சி அற்றவர்கள் என்று பார்க்கப்படல் மற்றும் அடையாளப்படுத்தப்படல் என்பன LBT மக்கள், அவர்களது குடும்பங்கள், நண்பர்கள் மற்றும்

90 'ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இருவருக்கு அபராதம்' டெய்லி மிரர், 16, 2012, இலங்கை, இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.dailymirror.lk/news/23546-two-men-fined-for-gross-indecency-.html 'கோட்டை புகையிரத நிலைய பொது மலசல கூடத்தில் ஓரினச் சேர்க்கை நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டு இரண்டு ஆண்களுக்கு கொழும்பு நீதிமன்றத்தில் தலா ரூ 1,500 அபராதம் விதிக்கப்பட்டது. வாய் மூலமான உடலுறவில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது 40 மற்றும் 50 வயதையுடைய இவர்கள் இருவரும் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் அரச நிறுவன ஊழியர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பிரேரணையில், குற்றவியல் கோவையின் 365 ஏ பிரிவின் கீழ் சந்தேகநபர்கள் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளதாக அரச தரப்பு சட்டத்தரணிகள் குறிப்பிட்டிருந்தனர். பொது மலசல கூடத்தில் ஒழுங்கீனமான முறையில் அவர்கள் நடந்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தமது தரப்பினர் குற்றத்தை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.'

91 மேலதிக தகவல்களுக்கு பார்க்க: தம்பையா, வை. (2003). ஆண்களால் உருவாக்கப்பட்ட சட்டமும், பெண்களின் உணர்வுகளும்: இலங்கை சட்டத்துடன் பெண் ஓரினச் சேர்க்கையாளர் ஒருவரின் போராட்டம், வரிகள் 2(1) மே 2003.

சமூகம் முழுவதிலும் இருந்து முழுவதுமாக ஒதுங்கி இருக்கும் அச்சம் ஏற்படுகின்றது. பலாத்காரம், அச்சுறுத்தல், சட்டவிரோத கைதி மற்றும் தடுத்து வைத்தல், உடல்சார் மற்றும் பாலியல் தொல்லை மற்றும் வம்பிக்கிழுத்தல், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, அரசினாலும், தனி நபர்கள் உள்ளடங்கலாக அரசு சாரா துறைகளினாலும் பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாடு என்பதன் அடிப்படையில் கொலை உள்ளடங்கலாக பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகக் கூடிய நிலைக்கு LBT நபர்களை தள்ளி விடுகின்றது.

## ஆ. பிரிவு 399 - குற்றவியல் கோவை - ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றல்

இலங்கை குற்றவியல் கோவையின் பிரிவு 399இன், "ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றல்" என்ற பதமானது பால் மாற்ற நபர்கள் தொடர்பில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.[92] நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட 'ஆள்மாறாட்டம்' மற்றும் 'தவறான பிரதிநிதித்துவம்' தொடர்பில் பல சம்பவங்கள் உள்ளன. இதன் போது பெண்கள் 'மாறுவேடம்' அணிந்தவர்களாக வெளிப்படுத்தப்பட்டதுடன், ஆண்களின் 'உண்மையான பாலியல் அடையாளம்' பொது மக்களுக்கு வெளியிடப்பட்டது. அதேவேளை, 'மக்களை தவறாக நம்பச் செய்தமைக்காக' பால்மாற்ற பெண்களும் கைது செய்யப்பட்டனர்.[93]

92 அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: '‘ஆள்மாறாட்டத்தினால் ஏமாற்றும்' நபர் எனப்படுவர், வேறு ஒருவரைப் போல் நடித்து ஏமாற்றுவாராயின், அல்லது தெரிந்தே வேறொருவருக்குப் பதிலாக இருப்பாராயின், அல்லது தம்மைத் தவிர வேறு ஒருவருவராக பிரதிநிதித்துவம் செய்வாராயின். விளக்கம் - உண்மையில் உள்ள அல்லது கற்பனை நபரைப் போல் ஆள்மாறாட்டம் செய்யும் போது குற்றம் முன்னெடுக்கப்படும். இந்த குற்றம் புரிந்தமை உறுதி செய்யப்படும் நபர்கள், யாராயினும் மூன்று வருட சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்."

93 லங்காதீப பார்க்கவும், '18 வயது முதல் பெண்ணாக மாறுவேடமணிந்திருந்த ஆண்', 31 ஆகஸ்ட் 2010:, லங்காதீப, 'ஆண் இராணுவ அதிகாரி போல மாறுவேடமணிந்திருந்த பெண், கைபேசி மூலம் ஏற்பட்ட காதலைத் தொடர்ந்து பெண் ஒருவரை மணந்தார்', 23 ஆகஸ்ட் 2010:, திவயின, 'ஆணைப் போல வேடமணிந்த பெண்', 17 மே 2009:, லங்காதீப, '20 வருடங்களாக ஆணைப் போல வேடமணிந்திருந்த நபர் பொலிஸ் நிலையத்தில் வைத்து பெண்ணாக மாறினார்', 3 ஜனவரி 2009:, லங்காதீப, '16 வயதான நாடோடிப் பெண், ஆணைப் போல வேடமணிந்திருந்த போது, கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பில் சந்தேகநபராக கைது செய்யப்பட்டார்', 11 மே 2005:, லங்காதீப, 'தம்புள்ள கோவிலில் வைத்து பெண்ணாக மாறிய ஆண்', 10 மார்ச் 2004:, லங்காதீப, பெண் இராணுவ அதிகாரியைப் போல வேடமணிந்திருந்த ஆண் இராணுவ அதிகாரிகளுக்கு போலி அடையாள அட்டையை வழங்கிய பெண் கோப்பரல் கைது', 18 ஜனவரி 2003:, ஞாயிறு லங்காதீப, 'பெண்ணைப் போல வேடமணிந்திருந்த ஆண்', 20 ஜூலை 2003.

## இ. நாடோடிகள் சட்டம் 1842

பொது இடத்தில் அலைந்து திரிவதாக கருதப்படும் பொது மக்களை தடுத்து வைப்பதற்கு தொடர்ந்து அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குவதாக இலங்கை 1842ஆம் ஆண்டு நாடோடிகள் சட்டம் அமைந்துள்ளது.[94]

நாடோடி என்பவர் யார் என்பதனை தீர்மானிப்பதற்கான, சிறப்புத் தன்மையை பொலிஸார் கொண்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் சட்டத்தையும் அமுல்படுத்துகின்றனர். இது பெரும்பாலும் நாடோடிகள் சட்டத்தின் தவறான பயன்பாடு மற்றும் தவறான பிரயோகத்திற்கு வழி வகுக்கின்றது. இதன் காரணமாக வேற்றுப்பால் இச்சை அற்ற பெண்கள், பால் மாற்றம் செய்த ஆண்கள் மற்றும் திரு நங்கைகள், சமுதாயத்தில் வித்தியாசமாக தெரிவதனால் தவறான வகையில் தடுத்து வைப்பதற்கு காரணமாகின்றது.[95] குறைந்த சமூக-பொருளாதார அந்தஸ்தை உடைய பால் மாற்றம் செய்து கொண்டவர்களை இலக்கு வைப்பதற்காகவே விசேடமாக நாடோடிகள் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக இவர்களே பொலிஸ ாரின் துஷ்பிரயோகத்தினால் இலகுவில் பாதிக்கப்படுபவர்களாக உள்ளனர்.[96] அவர்கள் பாலியல் தொழிலாளிகள் என கருதப்படுவதற்கு அவர்கள் ஆடையணியும் விதமே (உயிரியல் சார்ந்த பால்நிலைக்கு வித்தியாசமாக) காரணமாக அமைகின்றது. பாலியல் தொழிலாளிகளிற்கு தொல்லையளித்தல், கைது செய்தல் மற்றும் குற்றம் சுமத்தல் என்பன நாடோடிகள் சட்டத்தின் கீழ் நியாயப்படுத்தப்படுகின்றன.[97]

---

94 அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பிரிவு 3 (1) (ஆ) குறிப்பது என்னவென்றால் ‘பொது வீதியில் அல்லது நெடுஞ்சாலையில் அல்லது எந்தவொரு பொது விடுதியிலும் அலைந்து திரியும் மற்றும் அபரிமிதமான அல்லது தவறான நடத்தையை வெளிப்படுத்தும் ஒவ்வொரு பால்வினைத் தொழிலாளியும், வீணான மற்றும் ஒழுங்கற்ற நபர் என கருதப்பட்டு, சிறைத்தண்டனை என்பது முதலாவது தண்டனையாகவும், கடூழிய அல்லது கடூழியமற்ற தொழிலில் 14 நாட்களுக்கு அதிகரிக்காத வகையிலும், அல்லது அபராதம் விதிக்கப்படல்.’ பிரிவு 3 (1) (2) குறிப்பிடுவது என்னவென்றால், ‘பிடிவாரந்து இன்றி அவர்களை கைது செய்ய முடியும்’.

95 நச்சி என்ற சிங்கள பதமானது, ஆணுக்கான உடம்பை, பெண்களுக்கான குணங்களையும் கொண்டவர்களை தமது பிரதான ஆண் தன்மையான குணங்களை கைவிட்டவர்களை நச்சி சமுதாயம் என குறிப்பிடுவதால் ஏற்பட்டதாகும். அத்துடன், அவர்கள் ஆண்கள் மீதான பாலியல் ஈர்ப்பு கொண்டவர்களாக இருப்பர். (மில்லர் மற்றும் நிக்கலஸ், 2012: 555).

96 மேலதிக தகவல்களுக்கு வாசிக்க: நிக்கலஸ் ஏ. (2010) டான்ஸ் பொன்னயா டானஸ் பெண்மைத் தன்மை குற்றவியல் ஏப்ரல் 2010, பகுதி 5, இல. 2 http://fcx.sagepub.com/content/5/2/195

97 நிக்கலஸ் ஏ. (2010) டான்ஸ் பொன்னயா டான்ஸ் பெண்மைத் தன்மை குற்றவியல் ஏப்ரல் 2010, பகுதி 5, இல. 2 http://fcx.sagepub.com/content/5/2/195

24 மணித்தியாலங்களில் குற்றம் புரிந்தவரை (பிடிவாரந்து இன்றி கைது செய்யப்பட்டவர்) நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த வேண்டும் என சட்டம் தெரிவிக்கின்றது. இந்தக் காலப்பகுதியை 48 மணித்தியாலங்களாக மாற்றும் வகையில் 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இந்த குற்றவியல் சட்டக் கோவை மாற்றியமைக்கப்பட்டது. எவ்வாறாயினும், குற்றம் புரிந்தவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்படுவராயின், 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்படுவார். ஏனெனில், வார இறுதி நாட்களில் நீதவான் கடமை புரிவதில்லை. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இரவு நேரத்தில் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையங்களில் இரவு நேரத்தில் தடுத்து வைக்கப்படுபவர்கள், பாதிக்கப்பட்டதாக மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.[98]

## ஈ. அடிப்படை உரிமைகள்

இலங்கை அரசியல் யாப்பின் மூன்றாவது அத்தியாயத்தில் இலங்கை பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன.[99] பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பதன் தொடர்பிலான பாதுகாப்பினை அரசியலமைப்பு வெளிப்படையாக உத்தரவாதப்படுத்துவதாக இல்லை. பாரபட்சமின்மை மற்றும் அனைத்து நபர்களுக்குமான சமத்துவத்தினை அடையாளப்படுத்துவதற்கான பிரிவுகளின் கீழ் இந்த உத்தரவாதங்கள் அமையும் என நாம் விவாதிக்கலாம். பிறப்பின் போது ஆண் அல்லது பெண்பதனை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் உயிரியல் வகைப்பாடு என்பதனைத் தவிர வேறு எதனையும் குறிப்பதாக 'பால்' என்பது உள்ளதாக எந்தவொரு சாத்தியப்பாட்டினையும் அரசியல் யாப்பு வழங்கவில்லை.

எவ்வாறாயினும், பாரபட்சம் என்பதனை உள்ளடக்கும் பிரிவானது, 'அவ்வாறான எந்தவொரு தளத்தின்' அடிப்படையில் முன்னெடுக்கப்படும் வேறுபாடுகளை தடுக்கின்றது. பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பதன்

98 ஐடினை.

99 இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது வேறு அவ்வாறான அடிப்படைகளில் எந்தவொரு பிரஜையும் பாரபட்சத்திற்கு உள்ளாக முடியாது என அதே அத்தியாயத்தைச் சேர்ந்த உறுப்புரை 12ஆனது, குறிப்பிடுகின்றது.

அடிப்படையில் பாரபட்சத்தை தடுப்பதனை உள்ளடக்கும் வகையில், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணையானதாக அமைய வேண்டும். இருப்பினும், இது பயிற்சியில் இல்லை. நடைமுறையில் உள்ள சட்டத்தைப் பார்க்கும் போது ஒரினச் சேர்க்கை நடவடிக்கையை குற்றமாக பார்க்கும் வகையிலேயே உள்ளது.

பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பது தொடர்பான விசேட பாரபட்சமின்மை தொடர்பில் அரசியல் யாப்பில் பற்றாக்குறை நிலவுகின்றமை, பால்நிலையில் சிறுபான்மையாக உள்ளவர்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மிகவும் முக்கியமாக உரிமைகள், பாதுகாப்பு மற்றும் சட்ட உத்தரவாதங்களைப் பெறுவதில் மிதமான தாக்கத்தை அவை ஏற்படுத்துகின்றன. நிறைவேற்று அல்லது நிர்வாக செயற்பாட்டினால், அரசியல் ரீதியாக உத்தரவாதப்படுத்த உரிமைகள் தொடர்பில் அச்சுறுத்தலை எதிர்கொண்டவர்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கும் என இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 17 குறிக்கின்றது. நீதிமன்றத்தின் ஊடாக இழப்பீடு பெறுதல், நட்டஈடு அல்லது காப்பீடு பெறுதல், மீள இணைதல் மற்றும் வேலைவாய்ப்பில் பதவி உயர்வு பெறல் என்பன இந்த நிவாரணங்களில் உள்ளடங்குகின்றது. அடிப்படை உரிமைகள் விண்ணப்பதைப் பயன்படுத்தி உயர் நீதிமன்றம் உள்ளடங்கலாக, நீதிமன்றங்களில் இது தொடர்பில் பல வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்திடமிருந்து நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பமுள்ள இலங்கையர்களுக்கான ஆறுதலான பொறிமுறையாக அது உள்ளது. எவ்வாறாயினும், பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பதன் அடிப்படையில் பாரபட்சத்தை எதிர்கொள்ளும் தனிநபர்கள் அணுகக் கூடியதாக வெகு அரிதாகவே சட்டம் நிவாரணங்களை வழங்குகின்றது.

மனித உரிமைகள் மீறல்களின் முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை இலங்கை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னெடுக்கின்றது. நிவாரண நடவடிக்கை எடுப்பதற்கான மிகவும் முக்கியமான பொறிமுறையாக இது உள்ளது. ‘அடிப்படை உரிமைகள்’ சார்ந்ததாக மாத்திரமே

மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம் செயற்படுவதற்கு, நடைமுறையில் உள்ள சட்டம் வழியமைப்பதாக ஆழமான ஆய்வுகளின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அரசியலமைப்பில் குறிப்பிட்ட வகையிலேயே அதன் செயற்பாடுகள் அமைகின்றன. சர்வதேச சட்டத்தின் கீழ் மனித உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் பூர்த்தி செய்தலுக்கான இலங்கையின் அர்ப்பணிப்புடன் முரண்பாடானதாக பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் சார்ந்த பாரபட்சத்தை இது ஏற்படுத்துகின்றது.[100] சர்வதேச மனித உரிமைகள் விழுமியங்கள் மற்றும் தரங்களுக்கு இசைவானதாக தேசிய சட்டங்கள் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை உறுதி செய்வதற்கு அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் அதிகாரமளிக்கின்றது. [101] எவ்வாறாயினும், பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப்பாலுறவு பெண்கள், பால் மாற்றம் செய்த நபர்கள், வேறு பால்நிலைசார் சிறுபான்மையினரில் தாக்கத்தை செலுத்தும் பாரபட்சமான சட்டங்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுத்ததாக தெரியவில்லை.

## உ. சர்வதேச உடன்படிக்கைகள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உடன்படிக்கைகள் பலவற்றையும், பெரும்பாலான விருப்புக்குரிய நெறிமுறைகளையும் இலங்கை ஏற்புறுதி செய்துள்ளது.[102] பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப்பாலுறவு

100 பார்க்க சட்டம் மற்றும் சமூக நிதியம் (2010) இலங்கை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அழிவும், தடம் மாறலும், ஆசியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடும், உருவாக்கமும் தொடர்பான யுஜேஜ அறிக்கை, சட்ட மற்றும் சமூக நிதியம்: கொழும்பு.

101 பிரிவு 10 (ஈ) மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை சட்டம் இல 21, 1996.

102. அனைத்து வகையான இன பாரபட்சத்தையும் ஒழிப்பதற்கான சர்வதேச சாசனம்: பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனம்:, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனம்:, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சாசனம்:, சித்திரவதை மற்றும் வேறு குரூர மனிதநேயமற்ற அல்லது தாழ்த்தும் வகையில் நடத்தல் அல்லது தண்டனைக்கு எதிரான சாசனம்:, சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம்:, சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர் பால்வினைத் தொழில் மற்றும் சிறுவர் ஆபாசத் திரைப்படம் தொடர்பான சிறுவர் உரிமைகளுக்கான சாசனத்தின் விருப்புக்குரிய நெறிமுறை:, மற்றும், அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சாசனம்.

பெண்கள், பால் மாற்றம் செய்த நபர்கள், வேறு பால்நிலைசார் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாப்பது தொடர்பில் சர்வதேச மனித உரிமைகளுக்கு இசைவாக தமது தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை இலங்கை திருத்தியமைக்க வேண்டும்.

# #11 பரிந்துரைகள்



CEDAW குழுவின் 48ஆவது அமர்வினைத் தொடர்ந்து, 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்க அறிக்கையின் மீளாய்வின் போது சமர்ப்பிக்கப்பட்ட CEDAW குழுவின் நிறைவு அவதானிப்புக்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும். ஒரே பால் பராயமானவர்களுக்கு இடையிலான இணக்கத்துடனான பாலியல் உடலுறவை குற்றமற்றதாக்கி, சாசனத்தின் கீழ் பாரபட்சமின்மை என்ற கடமையை நிறைவேற்றுமாறு, இலங்கை அரசாங்கத்திடம் CEDAW குழுவின் நிறைவு அவதானிப்புக்கள் வலியுறுத்துகின்றன.

தனிநபர்களின் பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பதன் அடிப்படையில் அவர்களிற்கு எதிரான வன்முறையான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும், பாரபட்சமான சட்டம் தொடர்பிலும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் முடிவுரைகளையும், பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தல்.

பொது மற்றும் தனியார் இடங்களில், இணக்கத்துடனான ஒரே பாலைச் சேர்ந்த பராயமானவர்களுக்கு இடையிலான பாலுறவை குற்றமானதாக்கும் பிரிவு 365 ஏ குற்றவியல் கோவையை திருத்தல்.

இலங்கையில் வேற்று பால் இச்சை இல்லாத பெண்கள், பால் மாற்றம் செய்தவர்கள் மற்றும் திருநங்கைகள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக தன்னிச்சையாக பயன்படுத்துவதிலிருந்து நாடோடிச் சட்டத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பால் மாற்றம் செய்த நபர்களுக்கு எதிராக குற்றவியல் கோவையின் பிரிவு 399இனை (ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றுதல்) தன்னிச்சையாக பயன்படுத்துவதிலிருந்து பொலிஸாரை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

பாரபட்சத்தை கையாளும் அரசியல் யாப்பின் உறுப்புரை 12 (2)இனை திருத்துதல். பாரபட்சத்திற்கான தடை செய்யப்பட்ட தளங்களிற்கு இடையில் பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தை அது வெளிப்படையாக உள்ளடக்க வேண்டும்.

அரசியல் யாப்பில் உத்தரவாதம் அளிக்கும் வகையில் அந்தரங்கத்திற்கான உரிமையை பாதுகாக்கும் நடவடிக்கைகளை உள்வாங்கல். இந்தியா போன்ற ஏனைய நாட்டு அரசியலமைப்புக்களைப் போன்ற எமது அரசியலமைப்பில் அந்தரங்கம் என்பது அடிப்படை உரிமை அல்ல. தமது விருப்பத்திற்கு எதிராக நபர்கள் தொடர்ச்சியாக "ஒதுக்கப்படுகின்றனர்". அத்துடன், அவர்களுக்கான நிவாரணம் எதுவும் இல்லை. அந்தரங்கத்திற்கான உரிமையை மீறுவதற்கு இணையத்தளம் உதவுகின்றது.[103]

பாரபட்சமற்ற கோட்பாடுகளை மதிக்கும், பாலியல் அமைப்பு, பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை வெளிப்பாடு என்பதன் அடிப்படையில் தொல்லைகளை கவனத்தில் கொள்வதற்கு வெளிப்படையாக கவனம் செலுத்துவதற்கும், வேலைத்தளத்தில் பாலியல் தொல்லை தொடர்பான தனியான கொள்கைகளை விருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு அரச துறை மற்றும் தனியார் துறையை ஊக்குவித்தல்.

பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள், பால் மாற்றம் செய்து கொண்டவர்கள் எதிர்நோக்கும் கூருணர்வு மிக்க பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கொள்கைகளை விருத்தி செய்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு பெண்கள், பால் மாற்றம் செய்து கொண்டவர்கள் மற்றும் வேறு பாலியல் சிறுபான்மை குழுக்களுக்காக பணியாற்றும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றல்.

103 அந்தரங்கத்திற்கான அரசியலமைப்பு உரிமை இல்லை என்பதற்கு அப்பால், தேசிய பாதுகாப்பு என்பதன் அடிப்படையில் கண்காணிப்பு செயற்பாடுகளை உள்வாங்கும் அரசு, தனிப்பட்ட வாழ்க்கையில் ஊடுருவுவதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றது.

கொள்கை அபிவிருத்தியில் உதவுவதற்கான வழிகாட்டியாக யோக்யாகார்த்தா கோட்பாடுகளைப் பார்க்கவும்.[104]

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுக்கு வளங்களை வழங்கல். இதன் மூலம் பயனுறுதி மிக்க வகையில், வன்முறை, பாரபட்சம், மற்றும் LGBT நபர்களை குற்றமயமாக்கல் என்பவற்றை எவ்வாறு அடையாளம் காண்பது என்பது தொடர்பில் ஆசிய பசுபிக் மன்றின் நீதிபதிகள் ஆலோசனை பேரவையின் பரிந்துரைகளை செயற்றிறன் மிக்க வகையில் நடைமுறைப்படுத்த முடியும்.

முழுமையான பாலியல் கல்விக்கான வழிகாட்டிகளுக்கு இயைந்த வகையில் பாடசாலைகளில் பாலியல் கல்வியை நடைமுறைப்படுத்தல்.

104 (2007) பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளத்துடன் தொடர்புடைய சர்வதேச மனித உரிமைகள் சட்ட பிரயோகம் தொடர்பான யோக்யாகர்த்தா கோட்பாடுகள். (டுடீபுவு நபர்களின் மனித உரிமை மீறல்கள் மற்றும் பாலியல்புகளுக்கு இடையிலான நெருக்கடிகளை அடையாளம் காண்பதற்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை பிரயோகிப்பதற்கு முயற்சிக்கும் பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளத்துடன் தொடர்புடைய கோட்பாடுகளின் தொகுதியே யோக்யாகர்த்தா கோட்பாடுகளாகும்). 2006ஆம் ஆண்டு இந்தோனேஷியாவின், யோக்யாகார்த்தாவில் நடைபெற்ற சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவை நிபுணர்களின் கூட்டத்தின் போது இந்த கோட்பாடுகள்உருவாக்கப்பட்டன.

# [ விபரக்கோவைகள் ]

## விபரக்கோவை 1: கிறிஸ்டி

கண்டியில் பிறந்த 28 வயதான கிறிஸ்டி, தற்போது கொழும்பில் தமது காதலியுடன் வசிக்கின்றார். இன ரீதியாக சிங்களவரான அவர், றோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தவர். எனினும், மிகவும் அரிதாகவே தாம் தேவாலயத்திற்கு செல்வதாகவும், தமக்கான வழியில் மத அனுஸ்டானங்களை முன்னெடுப்பதாகவும், அவர் கூறுகின்றார். கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வாடிக்கையாளர் சேவை பிரதிநிதியாக அவர் பணி புரிகின்றார். தமது பால்நிலை அடையாளம் குறித்த அவரது கருத்தாக இருப்பது 75 வீதம் பெண்மை மற்றும் 25 வீதம் ஆண்பிள்ளை தன்மை கொண்ட பெண் என்பதாகும். தன்னுடைய பாலியல் அமைப்பை விளக்குவதற்கு, அவர் எந்தவொரு விசேட பதத்தையும் பயன்படுத்த விரும்பவில்லை. எனினும், ஆணோடு இருப்பதிலும் பார்க்க, பெண்ணோடு இருப்பதில் தாம் 100 வீதம் மகிழ்ச்சியுறுவதாக அவர் கூறுகின்றார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர், கிறிஸ்டிக்கு 24 வயதாக இருந்த போது, தமது உடலுறவு பங்காளர்களாக ஆண்களிலும் பார்க்க, பெண்களை கொண்டிருப்பதனை விரும்புவதாக அவர் தமது சகோதரனிடம் கூறியுள்ளார். ஆரம்பத்தில் சகோதரன் அதனை ஏற்றுக் கொள்ளாத போதிலும், அவருடைய விருப்பத்திற்கு இறுதியில் ஆதரவு தெரிவித்துள்ளார். கிறிஸ்டியின் பெற்றோர், அவருக்கு திருமணம் செய்து வைக்க முயற்சித்த போது, தமது சொந்த தெரிவினை முன்னெடுக்குமாறும் சகோதரன் உறுதியளித்துள்ளார். 21 வயதாக இருக்கும் போது தமது அத்தையின் வீட்டிற்கு கிறிஸ்டி வந்துள்ளார். அங்கு எதிர்பாராத பிரதிபலிப்புக்களை அவர் எதிர்கொண்டுள்ளார். கிறிஸ்டியின் தெரிவுகளுக்கு ஆதரவாக இருப்பதிலும் பார்க்க, தமது பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவரது அத்தை முயற்சித்துள்ளார். இந்த சம்பவம் இடம்பெற்று சில வருடங்களின் பின்னர், கிறிஸ்டிக்கு ஆண் காதலனுக்குப்

பதிலாக, பெண் காதலி உள்ளமையை அவருடைய மாமா கண்டறிந்துள்ளார். கிறிஸ்டிக்கு கட்டாயப்படுத்தி ஆபாசத் திரைப்படங்களை காட்ட முயற்சித்த அவருடைய மாமா, பேஸ்புக் (Facebook) சமூக வலைத்தளத்தில் கிறிஸ்டியின் பக்கத்தில் அநாகரிகமான கருத்துக்களையும் இட்டுள்ளார்.

உடல்சார், பாலியல் சார் மற்றும் உணர்வுசார் துஷ்பிரயோகத்திற்கு அப்பால், தமது முன்னாள் ஆண் காதலினாலும் உணர்வுசார் மற்றும் பாலியல் சார் துஷ்பிரயோகங்களை கிறிஸ்டி எதிர்கொண்டுள்ளார். கிறிஸ்டியின் பெண்களுடனான கடந்த கால உறவை கண்டறிந்த, ஆண் காதலன் கிறிஸ்டியை தொடர்ச்சியாக உடலுறவு கொள்வதற்கு கட்டாயப்படுத்தியதுடன், திணித்தல், தள்ளுதல், மற்றும் தொண்டையை நெறித்தல் என பல வகைகளிலும் தொல்லைப்படுத்தியுள்ளார். அவரது வேலைத்தளத்தில், அவருடைய CEO, அந்தரங்க உடல் உறுப்பு எவ்வாறு இருக்கின்றது எனவும், கிறிஸ்டியும், பெண் காதலியும் உடலுறவு கொள்ளும் போது தான் நேரில் வந்து பார்க்க முடியுமா போன்ற அநாகரிகமான குறுஞ்செய்திகள் மூலம் தொடர்ச்சியாக அவருக்கு தொல்லை ஏற்படுத்தி வந்துள்ளார். இந்த உடல்சார், பாலியல்சார் மற்றும் உணர்வுசார் துஷ்பிரயோகத்தின் விளைவாக, தம்மைத் தாமே காயப்படுத்திக் கொள்ளும் நிலைக்கு கிறிஸ்டி தள்ளப்பட்டார். தம்மை வெட்டிக் கொள்ளல், சிகரட்டினால் தீக்காயம் ஏற்படுத்திக் கொள்ளல் என்பவற்றில் ஈடுபட்டார். மிகவும் பாரதூரமான சந்தர்ப்பங்களில், தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை கொண்டவராகவும் அவர் இருந்துள்ளார். அத்தையுடனான துஷ்பிரயோகம் சார்ந்த அனுபவங்களைத் தொடர்ந்து தம்மை வெளிநபருக்கு வெளிப்படுத்திக் கொள்ளும் நம்பிக்கை அற்றவராகவும் அவர் இருக்கின்றார்.

## விபரக்கோவை 2: சாமிலா

36 வயதான சாமிலா, கொழும்பின் புறநகர்ப் பகுதியில் தமது பெற்றோர்களுடன் தனியாக வாழ்ந்து வருகின்றார். இனரீதியாக சிங்களவரான அவர், பௌத்த மதத்தை பின்பற்றுபவர். தமது இரண்டாம் நிலை கல்வியை நிறைவு செய்துள்ளார். அரச

பாதுகாப்பு படையில் பணிபுரியும் அவர், மாதாந்தம் 300 அமெரிக்க டொலர்களை வரை வருமானம் பெறுகின்றார்.

சாமிலா தம்மை ஒரு பெண் ஓரினச் சேர்க்கையாளர் எனவும், ஆண் தன்மை கொண்ட பெண் எனவும் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். 22 வயதான போது தாம் ஒரு பெண் ஓரினச் சேர்க்கையாளர் என அவர் கண்டறிந்துள்ளார். பெண் ஒருவருடன் ஒரு வருடமாக அவர் சிறந்த உறவை பேணி வந்துள்ளார். ஒரு வருடத்தின் பின்னர் உடலுறவாக அது மாறியுள்ளது. தமது பாலியல் அமைப்பினை சில தெரிவு செய்யப்பட்ட நண்பர்களுக்கும், 25 வயதான போது தமது அதிகாரிக்கும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். சாமிலாவை கைவிட்டுச் சென்ற, அவருடைய முன்னாள் காதலி வீட்டு முன்றலில் இருந்து கலவரம் ஏற்படுத்தியமையைத் தொடர்ந்து அவரது பாலியல் அமைப்பும், பாலியல் உடலுறவு குறித்த செய்திகளும் வெளிப்பட்டுள்ளது. இந்த நிகழ்வால் அவரது குடும்பம் பெரிதும் மனமுடைந்து போனது. சாமிலாவை அவரது தந்தை அடித்துள்ளார். தலைவலிக்கு மருந்து எடுக்கச் செல்வதாக கூறி, மனநல வைத்தியரிடம் சாமிலாவின் தாய், அவரை அழைத்துச் சென்றுள்ளார். மேலதிகமாக, 20 வயதான போது நெருக்கமான வாழ்க்கைத் துணையினால் அவர் வன்முறையை எதிர்கொண்டுள்ளார். வேலைத்தளத்திலும் அவர் பாரபட்சம் மற்றும் பாலியல் தொல்லைகளை எதிர்கொண்டுள்ளார். எனினும், சட்டத்தினால் தமக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையின்மையால், இந்த சம்பவங்களை அவர் முறைப்பாடு செய்யவில்லை. விளையாட்டு அணியின் தெரிவுகளில் இவருக்கான சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டுள்ளது. இரண்டு தடவைகள் தமது மனைவியின் மற்றும் காதலியின் பாலியல் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு சிரேஷ்ட அதிகாரிகளினால் அணுகப்பட்டுள்ளார். சிரேஷ்ட ஊழியர் ஒருவர் அவரை உடலுறவு கொள்வதற்காக அழைத்துள்ளார். தமது சிரேஷ்ட அதிகாரிகளின் நிந்தனைகளையும் அவர் வேலைத்தளத்தில் எதிர்கொண்டுள்ளார். தமது பெண் ஓரினச் சேர்க்கை நண்பிகள், LBT நிறுவனம் மற்றும் பணியில் தமக்கு ஆதரவான சக ஊழியர் மீது சாமிலா நம்பிக்கை வைத்துள்ளார்.

# குறிப்புதவிகள்


அய்ஷுரா, அரென், ஜெனி வொல்ஷ், ஏஸ். பைக், ரொஸ் வார்ட் மற்றும் ஜெக் (2011) பால்நிலை கேள்விகள்: பால்மாற்ற மெல்பேர்ன பால்நிலை செயற்றிட்டத்தின் இணைந்த செயற்றிட்டம், ஆண் மற்றும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் ஹெல்த் விக்டோரியா ரெயின்போ வலையமைப்பு, மெல்பேர்ன், அவுஸ்திரேலியா

அத தெரன (ட்ருத் பெர்ஸ்ட்) மார்ச் 2012 (இணையத்தில்) கிடைக்குமிடம்: http://www.adaderana.lk/news.php?nid=17473&mode=beauti (2012 nrg;uk;gH 25Mk; jpfjp ghHf;fg;gl;lJ)

BBC செய்திகள் (2012) கேள்வி, பதில், யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை, 13, நவம்பர் 2012. இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.bbc.co.uk/news/world-south-asia-11393458

பஸ்டியன்ஸ், தரிஷா (2013) சிங்கள இனத்தைப் பெருக்குவதற்கு சிங்கள ஆண் ஒருவர் ஐந்து பெண்களை மணக்கும் வகையில் சட்டம் மாற்றப்படல் வேண்டும் என்கிறது பொது பலசேனா, 23 ஜனவரி 2013, www.dbsjeyaraj.com fpilf;Fkplk;: http://dbsjeyaraj.com/dbsj/archives/15219

பெல்லன்வில சுதத்த தேரோ மற்றும் துன்ன, சீ. ஜே., (2007) ஓரினச் சேர்க்கை, பௌத்தம் மற்றும் இலங்கை சமூகம், புசழரனெளஎநைறளஇ 28 ஆகஸ்ட் 2007: கொழும்பு (இணையத்தில்) கிடைக்குமிடம்: http://groundviews.org/2007/08/28/homosexuality-buddhism-and-sri-lankan-society/

புருஸ் - ஜோன்ஸ் ஈ., மற்றும் இட்டாபொராஹி எல்., (2011) அரச அனுசரணையளிக்கப்பட்ட ஒரு பாலின இச்சை மறுப்பு: இணக்கம் கண்ட பராயமானவர்களுக்கு இடையில் ஒரு பால் பாலியல் நடத்தையை குற்றமாக்கும் சட்டங்கள் தொடர்பான உலகளாவிய ஆய்வு, ILGA அறிக்கை, சர்வதேச பெண் ஓரினச்

சேர்க்கை, ஆண் ஓரினச் சேர்க்கை, இரட்டைப் பாலுறவு, பால் மாற்றம் மற்றும் இரட்டைப் பால் நிறுவனம்.

கொலம்பகே, தினுக் (2013) பொது பலசேனா: இலங்கையின் எதிர்காலத்திற்கான அச்சுறுத்தல், Groundviews, 19 மார்ச் 2013, கொழும்பு, இலங்கை. இணையத்தில் கிடைக்குமிடம்: http://groundviews.org/2013/03/19/bodu-bala-sena-a-threat-to-sri-lankas-future/

டெய்லி மிரர், ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இருவருக்கு அபராதம், 16 நவம்பர் 2012, இலங்கை, இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.dailymirror.lk/news/23546-two-men-fined-for-gross-indecency-.html

பெர்னாண்டோ எம். (2008) 'நாடோடி குரல்கள்', ஹிமால் தெற்காசியா, பகுதி 21 (3), இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.himalmag.com/Vagrant-voices_nw2138.html

குணசேகர, திசரானி (2013) முஸ்லீம்களே புதிய தமிழர்கள், லங்கா ஸ்டான்டர்ட், 21 ஜனவரி 2013, கொழும்பு, இலங்கை. இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.lankastandard.com/2013/01/the-muslims-are-the-new-tamils/

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (2011) இலங்கை: நம்பகத்தன்மையை காக்கத் தவறிய அறிக்கைகள், 16 டிசம்பர் 2011, நியூயோர்க், இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.hrw.org/news/2011/12/16/sri-lanka-report-fails-advance-accountability

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (2008) இந்த வேற்றுக்கிரக பரம்பரைச் சொத்து: பிரித்தானிய காலனித்துவத்தின் "சொடோமி" சட்டங்களின் மூலங்கள்.
www.hrw.org/sites/default/files/reports/lgbt1208_webwcover.pdf

மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை சட்ட இல 21, 1996ஆம் ஆண்டு

இங்ரம், கோர்டன் பிரன்ட், ஆன்-மேரி பௌதிலெட்டே, யோலன்டா ரெட்டர் (Eds) (1997). Queers in Space: சமுதாயங்கள் / பொது இடங்கள்/ஓய்வு தளங்கள், டீயல அச்சகம், ஐக்கிய அமெரிக்கா.

சட்ட மற்றும் சமூக நிதியம் (2010) இலங்கை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அழிவும், தடம் மாறலும், ஆசியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடும், உருவாக்கமும் தொடர்பான யுஜேே அறிக்கை, சட்ட மற்றும் சமூக நிதியம்: கொழும்பு.

மில்லர், ஜே மற்றும் நிக்கலஸ், ஏ (2012) இலங்கையில் பால் மாற்றம் செய்தவர்களின் அடையாளம், பாலியல்பு மற்றும் வர்த்தக பாலியல் செயற்பாடு. பாலியல்புகள், சிறப்பு பிரிவு, 15 (5∴6) ப.554 - 569, Sage பிரசரம், இணையத்தில் கிடைக்குமிடம்: DOI: 10.1177/1363460712446120

நிக்கலஸ், அன்ரியா (2010) டான்ஸ் பொன்னயா, டான்ஸ்!, இலங்கையில் பால் மாற்றம் செய்த பால்வினைத் தொழிலாளர்களுக்கு எதிரான பொலிஸ் துஷ்பிரயோகங்கள், பெண்ணிய குற்றவியல் 2010 5:195, Sage பிரசுரங்கள், இணையத்தில் கிடைக்குமிடம்: http://fcx.sagepub.com/content/5/2/195

சன்டே லீடர், 'ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களை கைவிட வேண்டாம்', 6 ஜுன் 2010.
ரூபின்ஸ்டெய்ன், ரூத் (1995) ஆடை குறியீடுகள்: அமெரிக்க கலாசாரத்தில் அர்த்தங்களும், செய்திகளும். போல்டர். Westview அச்சகம்.

இராகவன், சுரேன் (2013) பொது பலசேனா மற்றும் இலங்கையில் பௌத்த இராணுவ மயம், புசழரனௌநைறளஇ 15 ஜனவரி 2013, கொழும்பு, இலங்கை. இணையத்தில் கிடைக்குமிடம்: http://groundviews.org/2013/01/15/bodu-bala-sena-and-buddhisms-militant-face-in-sri-lanka/

பிரிவு 10 (ஈ) மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை சட்ட இல 21, 1996.

பிரிவு 365 ஏ, இலங்கை குற்றவியல் கோவை (திருத்தம்) சட்ட இல. 22, 1995, 31 ஒக்டோபர் 1995.

பிரிவு 399, ஆள் மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றல், இலங்கை குற்றவியல் கோவை 1883.

தம்பையா, வை. (2004) ஒழுக்க (மின்மை) பிரஜைகள்: இலங்கையில் பாலியல்பு மற்றும் குற்றவியல் கோவை. ஏ. ஜே. கனகரட்ன (), நீலன் திருச்செல்வம் நினைவு மாநாட்டு கட்டுரைகள் (பக். 107-141) கொழும்பு, ICES

தம்பையா, வை. (2003 மே). ஆண்களால் உருவாக்கட்ட சட்டமும், பெண்களின் உணர்வுகளும்: இலங்கை சட்டத்துடன் பெண் ஓரினச் சேர்க்கையாளரின் போராட்டம், வரிகள் 2 (1) 2003.

ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் (2011) மனித உரிமைகள் அறிக்கை, இலங்கை, இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.state.gov/j/drl/rls/hrrpt/2011/sca/186475.htm

UNOHCHR (2013) இ இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி குறித்த மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கை, மனித உரிமைகள் பேரவை, 22வது அமர்வு, ஐக்கிய நாடுகள் பொது பேரவை, 11 பெப்ரவரி 2013, இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session22/A-HRC-22-38_en.pdf

நாடோடிகள் சட்டம் இல. 20, 1942.

உலக சுகாதார ஸ்தாபனம் (2004) தற்கொலை தவிர்ப்பு: இருளிலிருந்து எழல், இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.searo.who.int/en/Section1174/Section1199/Section1567/Section1824_8089.htm

உலக சுகாதார ஸ்தாபனம் (2011) நாடு, வருடம் மற்றும் பால் அடிப்படையில் தலா 100,000 பேருக்கு தற்கொலை வீதங்கள். (இணையத்தில்) கிடைக்குமிடம்: http://www.who.int/mental_health/prevention/suicide_rates/en/

(2012) சுனிலா அபேசேகர, நிமல்கா பெர்னாண்டோ மற்றும் பாக்கியசோதி சரவணமுத்து, இணைந்த அறிக்கை, 23 மார்ச் 2012, கொழும்பு, இலங்கை. இணையத்தில் கிடைக்குமிடம்: http://www.scribd.com/doc/86440203/joint-statement-sunila-abeysekara-nimalka-fernando-and-dr-paikiasothy-saravanamuttu

(2007) பாலியல் அமைப்பு மற்றும் பால்நிலை அடையாளத்துடன் தொடர்புடைய சர்வதேச மனித உரிமைகள் சட்ட பிரயோகம் தொடர்பான யோக்யார்த்த கோட்பாடுகள்

# [ பின்னிணைப்பு ]

**பின்னிணைப்பு அ:**

ஆப்ப (Aappa): சிங்கள மொழியில் ஓரினச் சேர்க்கை பெண்களை குறிப்பதற்கான சேரிப்புற (தாழ்வான மொழிப்பிரயோகம்)

இரட்டைப் பாலுறவு: ஒரே பால் மற்றும் எதிர்ப்பாலைச் சேர்ந்த என இரு பாலினருடனும் உணர்வு ரீதியாக மற்றும்/அல்லது உடல்ரீதியாக கவர்ச்சி கொண்டவர்கள்.

ஆண் தன்மை கொண்ட பெண் (Butch): ஆண் தன்மை கொண்ட பெண் ஓரினச் சேர்க்கையாளர். ஆண் தன்மையான நடத்தைகள், ஆண்கள் அணியும் ஆடைகள், ஆண்களைப் போன்ற சிகையலங்காரம் என்பதன் ஊடாக அவரது ஆண் தன்மை வெளிப்படும். தமது பெண் உடல் குறித்த சௌகரியத்துடன் தம்மை பெண் என அடையாளப்படுத்திக் கொள்வார்.

Cisgender: cisgender எனப்படுவது, தமது பால்நிலை அல்லது பாலினை பிறப்பின் போதானதாகவே குறிக்கும் நபர். உதாரணமாக, உங்களுடைய பிறப்புச் சான்றிதழில் உங்களுடைய பால் ‘பெண்’ எனக் குறிக்கப்பட்டிருப்பின், நீங்கள் உங்களை ‘பெண்மணி’ என அடையாளப்படுத்துவது (பால்மாற்ற நபருக்கு எதிரானது).

பெண் தன்மையானவர் (Femme): அழகிய பெண் ஓரினச் சேர்க்கையாளர். அவரது பெண் தன்மையானது ஒப்பனை செய்து கொள்ளல், குதியுயர பாதணிகள் மற்றும் ஆடைகள் மூலம் வெளிப்படுத்தப்படலாம் அல்லது வெளிப்படுத்தப்படத் தேவையில்லை. மென்மையாக பேசுபவராக, இனிமையானவராக மற்றும் அடக்கமானவராக, அல்லது புத்தி கூர்மையானது, துடிப்பானவராக இருக்கலாம். தமது பெண் உடல் குறித்த சௌகரியத்துடன் தம்மை பெண் என அடையாளப்படுத்திக் கொள்வார்

ஓரினச் சேர்க்கையாளர்: ஒரே பாலைச் சேர்ந்த நபருடன் உணர்வு ரீதியாக மற்றும்/அல்லது உடலியல் ரீதியாக கவரப்படும் நபர். பொதுவாக இந்த பதமானது ஆண்களைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்படுகின்றது.

பால்நிலை: பெண்மை மற்றும் ஆண்மை என சில குறிப்பிட்ட நடத்தைகள், சிறப்பியல்புகள் மற்றும் வகிபாகங்கள் என்பதன் அடிப்படையில் சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்ட கருத்தாக்கம், அல்லது சமூக வகுப்பாக்கமாகும். இருப்பினும், பல்வேறு கலாசாரத்திற்கு ஏற்ப பெண்மை/பெண் மற்றும் ஆண்மை/ஆண் நடத்தைகளின் உள்ளடக்கம் என்பது வேறுபடலாம். வாழ்க்கையின் அனைத்து மட்டங்களிலும் ஆண் அல்லது பெண் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக பொதுவாக அவை ஒரு தொகுதி கட்டுப்பாடுகள் மற்றும் விதிகளை அமுலாக்குகின்றன.

பால்நிலை இரட்டைப் பண்பு: ஆண்மை மற்றும் பெண்மை என்ற இரண்டு தனித்த வகைகளில் பால் மற்றும் பால்நிலைலை வகுப்பாக்கம் செய்தல். இரண்டு வகுப்பாக்கத்திற்குள்ளும் பொருந்ததாத பல நபர்களை வெளியேற்றும் வகையில் பெரும்பாலான சமூகங்கள் மக்களை இந்த இரண்டு தனித்துவமான வகைகளுக்குள்ளும் பிரிக்கின்றன.

பால்நிலை அடையாளம்: பால்நிலை தொடர்பில் ஒவ்வொரு நபரினதும் ஆழமாக உணரப்பட்ட உள்ளக மற்றும் பிரத்தியேகமான அனுபத்தை குறிக்கின்றது. உடலின் தனிப்பட்ட உணர்வு (சுதந்திரமாக தெரிவு செய்யப்பட்ட, உடல் தோற்றப்பாட்டை மாற்றுதல் அல்லது மருத்துவ, சத்திர சிகிச்சை அல்லது வேறு வழிகளிலான செயற்பாடு) மற்றும் ஆடை, பேசுதல் மற்றும் பழக்கங்கள் உள்ளடங்கலாக பால்நிலையின் வேறுபட்ட வெளிபாடுகள் உள்ளடங்கலாக பிறப்பின் போது நிர்ணயிக்கப்பட்ட பாலினை குறிக்கலாம் அல்லது குறிக்காது இருக்கலாம்.

பால்நிலை வெளிப்பாடு: ஒருவரின் பால்நிலையின் வெளியக காட்சிப்படுத்தல். பொதுவாக ‘ஆண்மை’, ‘பெண்மை’ அல்லது பால்நிலை வேறுபாட்டு ஆடை, தோற்றப்பாடு, பழக்கங்கள், பேசும் முறைகள் மற்றும் நடத்தைகள் என்பவற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படும். பால்நிலை வெளிப்பாடு என்பது கட்டாயமாக, பாலியல் அமைப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பதனை குறிக்க வேண்டியதில்லை.

வேற்றுபால் இச்சை: அனைத்து மக்களும் இரண்டு பால்நிலைகளுக்குள் (எ.கா: ஆண் அல்லது பெண்) உள்ளடங்குகின்றனர் என்பதனை குறிக்கும் பார்வை. ஆண்கள் மற்றும் பெண்கள் பின்பற்ற வேண்டிய குறிப்பிட்ட வகிபாகங்கள், மற்றும் வேற்றுப் பால் இச்சை என்பது (எதிர்ப்பாலினர் அல்லது எதிர்ப்பால்நிலை நபர் மீதான ஈர்ப்பு) மாத்திரமே 'இயல்பான' பாலியல்பு.

வேற்றுப்பால் இச்சை இயல்பு: பாலியல் ஆர்வம், நெருக்கம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் வேற்றுப் பால் இச்சை இயல்பு என்பது மாத்திரமே 'இயல்பான' மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வெளிப்பாடு என்ற நம்பிக்கையை குறிக்கின்றது.

வேற்று பாலினச் சேர்க்கை: நபர் ஒருவர் பாலியல் ரீதியாக, உணர்வு ரீதியாக மற்றும் / அல்லது அன்பு ரீதியாக எதிர்ப்பால் மீதான கவர்ச்சி.

ஓரினச்சேர்க்கை: நபர் ஒருவர் பாலியல் ரீதியாக, உணர்வு ரீதியாக மற்றும் / அல்லது அன்பு ரீதியாக ஒரே பால் மீதான கவர்ச்சி.

ஒரு பாலின இச்சை மறுப்பு: ஓரினச் சேர்க்கை மீதான பகுத்தறிவற்ற பயம், வெறுப்பு அல்லது தப்பெண்ணம்.

இரட்டைப் பாலுறுப்புக்களுடன் பிறந்தவர்: ஆண் அல்லது பெண்ணுக்கானது என குறிக்கப்படும், வெளிப்புற பிறப்புறுப்பு அல்லது உள்ளக இனப்பெருக்க முறைகளுடன் பிறந்த நபர். ஆண் மற்றும் பெண் என இருபாலினருக்குமான உயிரியல் சிறப்பியல்புகளைக் கொண்டவர்களை குறிக்கப் பயன்படும். குரோமசோம், ஹோர்மோன்கள் மற்றும் பிறப்புறுப்புக்கள் போன்ற ஆண் அல்லது பெண் தன்மையை குறிக்கும் உடல் வேறுபாடுகள் சார்ந்த நிலைமைகளை இது குறிக்கும். பிறப்பின் போது அல்லது வாழ்க்கையின் பிற்காலத்தில் அவதானிக்கக் கூடியதாக இந்த வேறுபாடுகள் உருவாகும். இந்த பதமானது, 'இருபாலின உடலி' என்ற பதத்திற்குப் பதிலாக 'இரட்டைப் பாலுறப்புக்களுடன் பிறந்தவர்' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. மரியாதையற்ற மற்றும்/ அல்லது கண்ணியமற்ற விடயமாக இது கருதப்படுகின்றது.

LGBTIQ: பெண் ஓரினச் சேர்க்கையாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், இரட்டைப் பாலுறவு நபர், பால்மாற்றம் செய்தவர், இரட்டைப் பாலுறுப்புக்களுடன் பிறந்தவர், கேள்விக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் சமூகத்தில் பால் மற்றும் பாலியல்பு சார்ந்த வரைமுறைகளை மீறி வாழ்பவர் என்போரை குறிப்பதற்கான சுருக்கப் பெயராகும் (அண்மைக்காலமாக அடையாள வகைகள் மற்றும் குறியீடுகளில் அதிகரித்துச் செல்லும் எண்ணிக்கை காரணமாக பெண் ஓரினச் சேர்க்கையாளர், ஆண் ஓரினச் சேர்க்கையாளர், இரட்டைப் பாலுறவு நபர், இரட்டை ஆர்வம் கொண்டவர், வேற்று பாலினச் சேர்க்கையுள்ளவர், ஓரினச் சேர்க்கையாளர், பால்மாற்றம் செய்தவர், பால்மாறிய சமூகத்தில் பால் மற்றும் பாலியல்பு சார்ந்த வரைமுறைகளை மீறி வாழ்பவர், கேள்விக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் இரட்டைப் பாலுறுப்புக்களுடன் பிறந்தவர் என்போரை குறிக்கும் வகையில் LGBBHHTTQQI என பயன்படுத்தப்படுகின்றது.).

பெண் ஓரினச் சேர்க்கையாளர்: வேறு பெண்கள் மீது உணர்வுசார்ந்து மற்றும்/அல்லது உடல்சார் ஈர்ப்பு கொண்டவர்.

வேற்றுப்பால் இச்சை அற்ற பெண்கள்/ஆண்கள்: வேறுப்பாலியல்பு மற்றும் வேற்றுப்பால் வடிவ கட்டமைப்புக்கு வெளியே வாழ்வதற்கு தெரிவு கொண்டுள்ள பெண்கள் அல்லது ஆண்களை குறிக்கப் பயன்படும் பதம்.

பொன்னயா: சிங்கள மொழியில் பயன்படுத்தப்படும் கண்ணியமற்ற பேச்சு வழக்கு பதம். ஆண் ஓரினச் சேர்க்கையாளர் அல்லது ஆண் தன்மையற்ற நபரை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது. அது பல்வகையான அர்த்தங்களைக் கொண்டதாகும். அத்துடன், இலங்கையின் நிர்ணயிக்கப்பட்ட ஆண்மைக்கான தரங்களை எட்டுவதற்கு தவறும் ஆண்களை கீழ்த்தரமாக குறிக்க பயன்படுத்தப்படுகின்றது. நடத்தைக் கெட்ட பெண்ணின் கணவன், தமது குடும்பத்தை பராமரிக்க இயலாத ஆண், ஆண் தன்மையற்ற ஆண், ஆண் மீதான பாலியல் ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆண். (மில்லர் மற்றும் நிக்கலஸ், 2012:557).

குவியர் - சமூகத்தில் பால் மற்றும் பாலியல்பு சார்ந்த வரைமுறைகளை மீறி வாழ்பவர்: கட்டமைக்கப்பட்ட பால்நிலை மற்றும்/அல்லது பாலியல் விழுமியங்களை மீறிய நபர்கள். வேற்றுப்பால் இச்சை அல்லது வேற்றுப்பாலியல்பு விழுமியங்களுக்கு வெளியே வாழும் வேற்றுப்பால் நபர்கள் மற்றும் LGBTIஇனையும் இந்த பதப்பிரயோகம் குறிக்கும்.

பால்: ஆண்கள் அல்லது பெண்கள் என உடல்களின் உயிரியல் சார்ந்த வகுப்பாக்கம். பிறப்பில், உயிரியல் சிறப்பியல்புகளின் பிணைப்பாக சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட பால் அடிப்படையான ஆண் அல்லது பெண். குரோமசோம்கள், ஹோர்மோன்கள், உள்ளக இனப்பெருக்க அங்கங்கள் மற்றும் பிறப்புறுப்புக்கள் என்பன இதில் உள்ளடங்கும்.

பாலியல் அமைப்பு: வேறு பால்நிலையைச் சேர்ந்த அல்லது ஒரே பால்நிலையைச் சார்ந்த அல்லது ஒரு பால்நிலைக்கும் அதிகமான தனிநபர்களுடன், ஒவ்வொரு நபரினதும் முன் கண்டறியப்பட்ட உணர்வசார், ஈர்ப்புசார், மற்றும் பாலியல் ஈர்ப்பு மற்றும் நெருக்கமான மற்றும் பாலியல் உறவுகள் சார்ந்த இயலுமையை குறிக்கின்றது.

பால் மாற்றம்: தாம் பிறப்பில் குறிக்கப்பட்ட பாலுடன் வழமையாக தொடர்புபட்டட இயல்புகளுக்கு வேறுபாடான பாலியல் அடையாளம், வெளிப்பாடு அல்லது நடத்தையை கொண்ட மக்களை குறிக்கும் பதம். பால் மாறியவர்கள், பால் மாற்று உடை அணிபவர்கள், பால் மாற்றம் செய்து கொண்டவர்கள், கலப்பு, மற்றும் பால்நிலை உறுதி செய்ய முடியாதவர்கள் உள்ளடங்கியவர்களையும் குறிக்கும். பால் மாற்றம் செய்தவர்கள், வேற்றுப் பாலுறவு நபர்களாக, பெண் ஓரினச் சேர்க்கையாளர்களாக, ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களாக அல்லது இரட்டைப் பாலுறவு நபர்களாக இருக்கலாம். மேற்கத்தைய நாடுகளில் பயன்படுத்தப்படும் 'பால் மாற்றம்' என்ற பதமானது பல நாடுகளில் வேறுபட்ட அர்த்தங்களை வெளிப்படுத்துவதாக உள்ளது. பால்நிலை அடையாளத்தில் பல்வேறான மற்றும் வேறுபட்ட வெளிப்பாடுகளை குறிப்பதாக அல்லது பாலியல் விருப்பம், நெருக்கம் மற்றும் பால்நிலை

உறுதிபடுத்தப்படாத தன்மை என்பவற்றுக்கு இடையிலான வெளிப்பாடுகளை குறிப்பதாகவும் இந்தப் பதம் இல்லை. உதாரணமாக, நேபாளத்தில் மெட்டிஸ், பாகிஸ்தானில் ஷனானஸ், ஆர்ஜன்டீனாவில் டிரவெஸ்டி என்பன ஆண் தன்மையற்ற நபர்களை குறிப்பதற்கு, சத்திர சிகிச்சை மூலம் உடலை மாற்றும் அல்லது பெண்ணாக மாறும் இயல்பு என்பவற்றை குறிக்கப் பயன்படுகின்றது. பெண் தன்மையான ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் நபர்களை குறிக்கும் வகையில் ஹிஜ்ரா என்ற பதம் இந்தியாவில் ஆண் உறுப்பை வெட்டிய நபர்களுக்குப் பிரயோகிக்கப்படுகின்றது. எனினும், இது ஆண் ஒரினச் சேர்க்கையாளர்களை குறிப்பது அல்ல. பல்வேறு கலாசாரங்களில் 'மூன்றாவது பால்நிலை' அல்லது 'வேறு பால்நிலை' என்பது பொதுவாக பால்மாற்றம் என்பதனை குறிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையில், நாச்சி என்பது பால்மாற்றம் செய்தவர்கள், ஒரினச் சேர்கையாளர்கள் என இரு தரப்பினரையும் குறிக்கின்றது. பெண் தன்மை கொண்ட பால்நிலை விடயப்பரப்பை அவை உள்ளடக்கும். ஆனால், அவர்களது 'ஆண்மை' சார்ந்த பிரதான உண்மைகளை தவிர்ப்பதாக அவை இல்லை. அத்துடன், ஆண்கள் மீதான அவர்களது விடாத பாலியல் ஆர்வத்தை விளக்குகின்றன. (மில்லர் மற்றும் நிக்கலஸ், 2012:55).

டிரான்ஸ் trans: பால்நிலை அடையாள பிரிவிற்குள் உள்ளடங்கும் அனைத்து அடையாளங்களை உள்ளடக்கும் பிரதான பதமாக இது பயன்படுத்தப்படுகின்றது. பால் மற்றும் பால்நிலையின் பல அனுபவங்களை இது குறிக்கலாம். மாற்றம், பால் மாற்றம், பால்நிலை மாற்றம், பால்நிலை குறித்த வரைமுறைகளை மீறியவர்.

பால்மாற்ற ஆண் (பெண்ணிலிருந்து ஆணுக்கு மாறியவர்): ஆண் அல்லது ஆண்தன்மை கொண்ட நபரை குறிக்கும். ஆனால், பிறப்பில் பெண்ணாக இருந்து, பெண்ணாக வளர்க்கப்பட்டவர். பால்மாற்ற ஆண் எனவும் அறியப்படும். குவுஆ அல்லது கு2ஆ (பெண்ணிலிருந்து ஆண்).

பால்மாற்ற பெண் (ஆணிலிருந்து பெண்ணுக்கு மாறியவர்): பெண் அல்லது பெண் தன்மை கொண்ட நபரை குறிக்கும். ஆனால், பிறப்பில் ஆணாக இருந்து, ஆணாக வளர்க்கப்பட்டவர். பால்மாற்ற ஆண் எனவும் அறியப்படும். ஆவுகு அல்லது M2F (ஆணிலிருந்து பெண்).

